THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

LIBRARY
STATE LEGISLATURE, MADRAS
1960

Thursday, 17th December 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Beedi Factories

* 3 *S.N.Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the steps to be taken to prevent the shifting of Beedi Factories to the neighbouring States on a larger scale, to evade the implementation of the Beedi Industrial Premises Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Though some beedi factories are reported to have given notice of their intention to close down their business only one factory in North Arcot district has actually shifted its place of business to the neighbouring States. At a meeting of the Labour Ministers of Andhra, Madras, Mysore and Kerala, held at Madras in June 1959, the effect of the passing of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 in this State was considered and it was indicated by the representatives of other Governments that their States would undertake similar legislation. When uniform legislation comes into force in all the neighbouring States the tendency of shifting the industry will cease.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவிலே மட்டிலும், த்ரீ ஹார்ஸ் பீடி பாக்டரியும், ஹிமாலயா பீடி பாக்டரியும், எக்ஸ்பிரஸ் பீடி பாக்டரியும், தாரா பீடி பாக்டரியும், இது போன்ற பல பாக்டரிகள் ஆந்திரப் பிரதேசத்தின் பார்டரிலே இருக்கக்கூடிய சித்தூருக்கு மாற்றி 5 அல்லது 6 மாதங்கள் ஆகியிருக்கிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதோடு இன்னும் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து பல பாக்டரிகளைக் கொண்டு போக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காருக்கு இருக்கக்கூடிய தகவல் த்ரீ ஹார்ஸ் பீடி பாக்டரியும், ஹிமாலயா பீடி பாக்டரியும் பேர்ணாம்பட்டு, வட ஆற்காடு ஜில்லாவில் இருந்தது. இந்த இரண்டும் ஒன்று ஆந்திராவிற்கும், மற்றொன்று கன்னடத்திற்கும் கொண்டுபோகப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மற்ற தகவல் ஒன்றும் இல்லை. ஆனால் ஒரு இடத்தில் தொழிலை மூடிவிட்டு இன்னொரு இடத்திற்குக் கொண்டு போவதைத் தடுக்க முடியாது. இருந்தாலும் அவர்களோடு கலந்து பேசி இம்மாதிரி மாற்றிக்கொண்டு போவதைத் தடுக்க என்ன வழி என்று இப்போது கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[17th December 1959

SRI P. S. CHINNADURAI : ஸார், பரவலாக ஆங்காங்கு நேரடியாக பீடி முதலாளிகளும், தங்களுடைய ஏஜெண்டுகள் மூலமாகவும் பாக்டரிகளை மூடிவிட்டு இந்த மாத முடிவிற்குள்ளாக தொழிலாளர்கள் வேலையிழக்கக்கூடிய நிலைமையை உண்டாக்கியிருக்கிறார்கள். இதற்காக நோட்டீஸ் கொடுக்கப்பட்டும் விட்டது. தொழிலாளர்கள் உண்மையிலேயே வேலையிழந்து தவிப்பதற்கு முன்பாக உடனடியாக அரசாங்கத்தின் உயர்ந்த அளவில் முதலாளிகளையும் தொழிலாளர்களையும் கூப்பிட்டு வைத்துப் பேசி தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்புக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்தில் நாம் பீடித் தொழிலாளர்களைப்பற்றிச் செய்த சட்டம் மற்ற ராஜ்யங்களில் இல்லை. மற்ற ராஜ்யங்களிலும் இதே மாதிரியான ஒரு சட்டம் இருந்தால் ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்குக் கொண்டுபோக இயலாது. மற்ற ராஜ்யங்களிலும் இம்மாதிரியான ஒரு சட்டம் இருந்தால் இதைத் தவிர்க்கலாம் என்று சொல்லிப் பார்க்கிறோம். மற்ற ராஜ்யங்களோடு கலந்தபோது அவர்களும் இம்மாதிரிச் சட்டம் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. அவர்களும் செய்கிறோம் என்று சொன்னார்கள். அதிலே ஒரு ராஜ்யம் இப்போது சட்டம் கொண்டு வந்திருக்கிறது. மற்றொரு ராஜ்யம் இன்னும் நிறைவேற்ற முற்படவில்லை. அதோடு வருகிற 23-ம் தேதி பீடித் தொழில் நடத்துபவர்களை லேபர் கமிஷனர் அவர்கள் இந்தச் சட்டத்தைப் பொருத்த வரையில் என்ன செய்திருக்கிறார்கள் என்று கலந்து பேச ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்போது மேற்கொண்டு இந்தத் தொழிற்சாலைகளை வெளியே கொண்டு போகாமல் இருக்க என்ன செய்யலாம் என்று பார்க்கலாம். இதிலே அவர்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று உணர வேண்டும். உத்திரவு போடுவதால் மட்டும் இதைத் தவிர்க்க முடியாது. இம்மாதிரி போகாமல் இருக்க மற்ற ராஜ்யங்களுக்கும் உத்திரவு போட முடியாது, சிக்கிரம் சட்டம் செய்ய வேண்டுமென்று. அவர்களோடு கலந்து பேசி உண்மையில் ஏதாவது கஷ்டம் இருந்தால் அதை கவனித்து, இம்மாதிரி போகாமல் இருக்க என்ன வழி என்று லேபர் கமிஷனர் அவர்களோடு கலந்து ஆலோசிப்பார்கள். அதன் பிறகு அரசாங்கத்திற்கு தகவல் வந்த பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : இதிலே தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல, சர்க்காருடைய வருமானமும் பாதிக்கப்படுகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதைத் தடுக்க மத்தியச் சர்க்கார் கொடுக்கக்கூடிய புகையிலை லைஸென்ஸை கொடுக்காமலிருப்பதன் மூலம் இதைத் தடை செய்யவேண்டும் என்று முயற்சி செய்யப்பட்டதா ? அப்படி இல்லையென்று சொன்னால் அம்மாதிரிச் செய்வதன் மூலம் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முயற்சிக்கப்படுமா ?

17th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அங்கத்தினர் அவர்கள் சொல்வதுபோல் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறதா இல்லையா என்பது அல்ல பிரச்னை. தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டால் அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் வருகிறது.

SRI T. T. DANIEL : If the adjacent States fail to bring forward similar legislation, will the State Government apprise the Central Government of the situation and request them to interfere in the matter and ask those States to bring forward legislation?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir. Apart from the question whether the Central Government can interfere and direct the State Government to undertake legislation, there was a conference of the concerned Ministers of the Southern States and this matter was discussed and it was agreed that a similar legislation might be undertaken in other Southern States.

SRI S. M. ANNAMALAI : ஸார், அண்டைய ராஜ்யங்களில் இப்படிப்பட்ட சட்டங்கள் இல்லாத காரணத்தினால்தான் இப்படிப் பட்ட தொல்லை வருகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மத்தியச் சர்க்காரை இந்த மாநிலச் சர்க்கார் அணுகி பிற ராஜ்யங் களில் இந்த மாதிரிச் சட்டத்தைக் கொண்டுவரச் சொல்லவேண்டு மென்று

MR. SPEAKER : இந்தக் கேள்விக்கு இப்போதுதான் அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறாரே.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்விக் குத்தான் பதிலை ஆங்கிலத்தில் சொன்னது. மற்ற ராஜ்யங்களுக்கு மத்தியச் சர்க்கார்கூட இந்த மாதிரி உத்திரவு போடமுடியாது. ராஜ்யங்களோடு கலந்து பேசி அவர்களும் இம்மாதிரிச் சட்டத்தை இயற்றுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : திராவிட முன்னேற்றக் கழகம் கூட மத்தியச் சர்க்கார் தலையிட வேண்டுமென்று கூறிய கருத்தை நான் வரவேற்கிறேன்.

SRI N. K. PALANISAMI : Sir, though the Act has been passed about three or four months ago, why have the provisions of that Act not been implemented so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : What provisions have not been implemented, I would like to have notice to mention. I have just now stated that the Commissioner of Labour has convened a conference of the representatives of the Managements of the Beedi industry to discuss the question of implementation of this Act.

Water rates charged for unauthorised cultivation

4 *S.N. Q.*—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகாரம் பெறுமல் சாகுபடி செய்வதன்பேரில் விதிக்கப்படும் தண்ணீர் வரி வீதங்களிடையே ஏற்றத்தாழ்வு ஏதேனும் இருந்து வருகின்றதா ?

(ஆ) அப்படியானல், அதன் விவரங்கள் யாவை ?

(இ) இதைப்பற்றி கண்டனம் ஏதேனும் தெரிவிக்கப் பட்டதா ?

(ஈ) இது விஷயமாக அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes.

(*b*) The disparity is due to non-adoption of a uniform policy by the Revenue Divisional Officers of the Tirunelveli district. in exercising the discretion vested in them in the matter of reduction of water-rate penalties. The reduction of penalties is done on receipt of petitions protesting against such levy at the time of jamabandi. Variations in the rates levied are due to the different circumstances of the irregular irrigation and the number of times this practice is resorted to.

(*c*) Yes.

(*d*) The matter is being examined in consultation with the the Collector of Tirunelveli, Board of Revenue (L.R.) and the P.W.D. authorities.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : தலைவர் அவர்களே, ஒரு போக நஞ்சையாகவே இருந்த நிலங்களையும் இரு போக நஞ்சையாகப் பயிரிட்டு வருகிறார்கள். சுற்றி நஞ்சையாக இருந்து நடுவிலே புஞ்சை இருந்தால் தண்ணீர் பிடிப்பு தண்ணீர் கட்டு இருக்கிறது. அதோடு இந்த நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேல் பயிரிட்டு வருகிறார்கள். இந்த நிலையில் ஒரு தாலுகாவிற்கு ஒரு ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் ஒருவித வரி விதிப்பும், இதே தாம்பரபர்ணி தண்ணீர் பாசனத்தில் இருக்கக்கூடிய அடுத்த தாலுகா ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் மற்றொரு வரி விதிப்பும் செய்திருக்கிறார்கள். அம்மாதிரி டிஸ்பாரிட்டி இருக்கக் கூடாது என்று அப்பீல் செய்திருக்கிறோம். கலெக்டர் அவர்கள் ஸ்டே செய்து வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் அங்கு இருக்கும் விவசாயிகள் அவர்கள் கொடுக்க வேண்டிய வரி அதிகமாக இருப்பதால் அவர்கள் தங்கள் நிலங்களை விற்க ஆரம்பித்து விட்டார்கள். இதை உடனடியாகத் தடுக்க மந்திரி அவர்கள் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஒரு இடத்திலே சுற்றி நஞ்சை நிலம் இருந்து மத்தியிலே வேறு நஞ்சையில்லாமலிருந்தால் அங்கு நீர்ப் பிடிப்பு இருக்கும். ஆகையால் அங்கு நஞ்சை தானியம் பயிரிட ஏற்பாடு செய்யலாம். அது வேறு

17th December 1959]

விஷயம். இரண்டாவது ஆர்.டி.ஓ. பெனல்ட்டி போடுகிருர்கள். சாகுபடி செய்யக்கூடாது என்று சொல்லும்போது தொடர்ந்து செய்தால் ஒரு தடவைக்கு பிறகு, இரண்டாவது, மூன்ருவது நான்காவது தடவை என்று தொடர்ந்து செய்து கொண்டிருந்தால் பெனல்ட்டி அதிகமாக இருக்கும். அதனுல்தான் டிஸ்பாரிட்டி இருக்கிறது—அது ஒரு காரணம். பிற்பாடு இந்தத் தொந்தரவுக்கே காரணம், அரசாங்கம் முன்கூட்டியே பிரசுரம் செய்கிறது, அதாவது இந்த வருஷம் 10,000 அல்லது 20,000 ஏக்கருக்கு அட்வான்ஸ் காருக்கு தண்ணீர் கொடுக்க முடியும். அதற்குமேல் சாகுபடி செய்தால் தண்டத் தீர்வை போடப்படும் என்று பகிரங்கமாகச் சொல்லப்படுகிறது. அளவுக்குமேல் மீறி பயிர் செய்கிருர்கள். அதைத் தடுக்க அரசாங்கம் பெனல்ட்டி போடுகிறது. அதை ஏன் தடுக்கவேண்டுமென்று சொன்னுல், இதிலே முதல் பிரையாரிட்டி ஆயக்கட்டுக்குத்தான் அளிக்கவேண்டும். முதலில் அவர்களுக்கு இரண்டு போகத்திற்கும் தண்ணீர் கொடுக்கவேண்டும் அதற்காகத்தான் இதை அனுஷ்டித்து வருகிருேம். இதையெல்லாம் கவனித்து இதை எப்படி தவிர்க்கலாம் என்பதற்காக கூடிய சீக்கிரம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். கனம் மராமத்து அமைச்சர் அவர்களும் நானும் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு முன்பு இதை நேரிலேயே கண்டு வந்தோம். இன்னும் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்குள் அதிகாரிகளைக் கொண்டு இதற்கு ஒரு தக்க முடிவு கட்டப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: *தலைவர் அவர்களே, ஆர்.டி.ஓ.-க்களுக்குப் "பவர்" கொடுக்கப்பட்டு ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு விதமாகப் போடப்பட்டிருக்கிறது என்று சொன்ஞர்கள். திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் ஆகிய தாலுகாக்களில் 10 ரேட் போட்டிருக்கும்போது திருநெல்வேலியில் ஆர்.டி.ஓ. 20 ரேட் போட்டு 250 ரூபாய் வசூலிக்கிருர்கள் என்பது தெரியுமா? அந்த விஷயத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் முக்கியமாகக் கவனிப்பார்களா?*

THE HON. SRI M. A. MANICKAVELU: *அதைத்தான் நான் விளக்கமாக எடுத்துச் சொன்னேன். அதை அங்கத்தினர் புரிந்து கொள்ளவில்லையோ? அல்லது நான்தான் சரியாக எடுத்துச் சொல்லவில்லையோ? கூடாது என்று சொல்லியும் தொடர்ந்து செய்தால் பெனல்டி அதிகமாகிறது. முதல் தடவை 10 ரூபாய் என்ருல் இரண்டாவது தடவை 20 ரூபாய், மூன்ருவது தடவை 30 ரூபாய் என்று அதிகமாகிக்கொண்டு போகிறது. ஒரு லிமிட் இருக்கிறது. அதுவரை போகிறது. அதனுல்தான் இந்த வித்தியாசம்.*

Community Development Blocks in the Thanjavur district

* 226 Q.—SRI R. SRINIVASA IYER: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) when the Community Development Block, Pattukkottai, Tanjore district, was started;

(*b*) whether there is any proposal to include Sethubavachatram Block to be started in 1959–60;

(*c*) whether the Government are aware of the priority list of Blocks for Thanjavur district approved by the Thanjavur District Planning Board; and

(*d*) how many new Blocks are proposed to be started in the Thanjavur district in 1959–60 and what they are?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) 2nd October 1956.

(*b*) The Sethubavachatram Block has since been taken up as a Pre-extension Block with effect from 1st October 1959.

(*c*) Yes, Sir.

(*d*) During the year 1959–60, two Blocks were allotted to the Thanjavur district, viz., Budalur and Sethubavachatram.

Fertilisers

*227 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI P. U. SHANMUGAM): *கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

(அ) 1958-59, 1959-60-ம் ஆண்டுகளுக்காக மத்திய சர்க்காரிடம் நம் மாகாண சர்க்கார் கோரிய இரசாயன உர அளவு எவ்வளவு?

(ஆ) கிடைத்த அளவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) and (*b*) a paper[a] is placed on the Table of the house.

SRI S. M. ANNAMALAI: *ஸார், மேஜைமேல் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் 1959-60-ம் ஆண்டுக்கு மத்திய சர்க்காரைக் கேட்டது 2,93,400 டன்; ஆனால் அவர்கள் கொடுத்தது 76,757 டன், என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு மத்திய சர்க்கார் 4-ல் ஒரு பங்குதான் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் மேலும் வற்புறுத்தி மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இன்னும் அதிகமான இரசாயன உரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *இப்போது நாம் கேட்பதிலே பாதி கிடைக்கிறது. எல்லா ராஜ்யங்களுக்கும் பாதி தான் அவர்களால் சப்ளை செய்ய முடிகிறது. இந்த ராஜ்யத்துக்கும் பாதிக்குக் குறையாமல் வருகிறது. இந்தப் புள்ளி விவரங்கள் வருஷம் பூராவுக்கும் உள்ள புள்ளி விவரங்கள் அல்ல. இன்னும் வரவேண்டியிருக்கிறது.*

SRI S. LAZAR: ஜில்லா வாரியாக ஒதுக்கப்பட்ட கோட்டா கூட அந்தந்த ஜில்லாக்களுக்குத் தக்க காலத்தில் வந்து சேருவதில்லை என்ற புகார் வந்திருக்கிறதா? தக்க காலத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கையைச் சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா?

[a] Printed as Appendix I on page 568 infra.

STATE LEGISLATURE, MADRAS
16 APR 1960

[17th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தேவையள வுக்குக் கொடுக்க முடியாததால் புகார் வருகிறது. கூடியவரை அந்தந்தப் பருவத்துக்குத் தகுந்தவாறு, எந்தெந்த ஜில்லாக் களுக்குக் கொடுக்கவேண்டுமோ அந்த முறையில் எந்தெந்த ஜில்லாக்களுக்கு அவசரமாக வேண்டியிருக்கிறதோ அங்கெல்லாம் உடனடியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI K. RAMACHANDRAN : மேஜை மேல் வைக்கப்பட் டிருக்கும் குறிப்பிலே, *1958-59-க்கு 82,400 டன்னும், 1959-60க்கு 30,872 டன்னும் அம்மோனியம் சல்பேட் கிடைத்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1959-60-க்கு ஏன் குறைவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கொடுத்திருக்கக் கூடியது இரண்டாவது, வருஷம் பூராவுக்கும் அல்ல. முதல் 6 மாதத்திற்குத்தான். இன்னும் பூராவும் வந்து சேரவில்லை.

SRI T. T. DANIEL : May I know what exactly is the difficult of the Central Government in supplying the whole quantity which we are demanding?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The difficulty of the Central Government is, they are not able to get as much as the States require.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஏக்கருக்கு 100 பவுண்டு என்ற விகிதத்தில் கணக்கிட்டிருக் கிறார்கள். அதன்படி கணக்கிட்டுப் பார்த்தால் நம்முடைய நாட்டி லிருக்கும் நஞ்சை நிலங்களுக்கு மட்டும் 2½ லட்சம் டன் உரம் தேவைப்படுகிறது. புஞ்சைக்கும் சேர்த்து 3 லட்சம் டன் தேவைப் படுகிறது. நாம் கேட்பதிலே பாதிதான் கிடைக்கிற காரணத் தினால் கேட்கும்போதே ஏன் அதிகமாகக் கேட்கக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே ஒன்றும் வஞ்சனை இல்லை. பேரம் இல்லை. அவர்களிடம் இருப்பதைத்தான் பகிர்ந்து கொடுக்கிறார்கள். உரத் தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகியிருந்தும் போதவில்லை. இறக்குமதியும் ஆகிறது. ஓரளவுக் குத்தான் இறக்குமதி செய்ய முடியும். அதற்குமேல் இறக்குமதி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அடுத்த ஆண்டில் இன்னும் கொஞ்சம் அதிக இறக்குமதி செய்யப்பட்டு அதிகமாக ராஜ்யங் களுக்குக் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

SRI V. K. RAMASWAMI MUDALIYAR : Are we to approach only the Government of India for getting fertilisers? If we do not get sufficient quantity from them can we import from States like Kerala wherein fertilisers are produced by some factories?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Fertilisers produced in the factories in various States are put in the general pool and that is distributed by the Central Government to various States. That quantity is not sufficient at all. Therefore fertilisers are also

[17th December 1959

imported from various countries subject to the availability of foreign exchange. I do expect that more foreign exchange will be made available for the import of fertilisers in the next year.

SRI R. KRISHNASAMI NAIDU : சபாநாயகர் அவர்களே, ஜில்லாக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட இரசாயன உரம் கோட்டா விகிதங்கள் அங்குள்ள தேவையையும் அங்கு இதுவரை உபயோகப் படுத்தி வரும் அளவையும் பார்த்து நிர்ணயிக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இப்போது ஒவ்வொரு ஜில்லாவின் தேவை, உபயோகப்படுத்தும் அளவு ஆகியவற்றைப் பார்த்து அந்தக் கோட்டாவைப் புனர் நிர்ணயம் செய்ய ஏற்பாடுகள் செய்யப் படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இவ்வாறெல்லாம் ஏற்படுவதற்குக் காரணம் பற்றாக்குறைதான். ஆனால் கலெக்டர்கள் அந்தந்த ஜில்லாவின் நிலைமையை மீண்டும் மீண்டும் பரிசீலனை செய்து எந்த விகிதத்தில் சப்ளை செய்யவேண்டுமென்று தெரிவிக்கிறார்களோ அந்த விகிதத்தில் அவர்களைக் கலந்துதான் விநியோகிக்கப்படுகிறது. — — — — —

SRI A. R. SUBBIAH MUDALIYAR : "நான்-லைசென்ஸ் டீலர்கள்" சில சமயங்களில் "பர்மிலைசர்" விற்கிறார்கள். அவர்களைக் கேட்டால் சர்ப்ளஸ் ப்ராவின்ஸிலிருந்து கிடைத்தது என்று சொல்லுகிறார்கள். இதில் உள்ள உண்மை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மற்ற ராஜ்யங்களிலிருந்து வருகிறது என்றால், நாம் கவனிக்க முடியாது. பற்றாக்குறை இருப்பதால் கள்ள மார்க்கட் ஏற்படுகிறது. அதனால் லைசென்ஸ் இல்லாதவர்கள் வாங்கி விற்கிறார்கள். இந்த ராஜ்யத்தைப் பற்றித்தான் கவனிக்க முடியுமே தவிர மற்ற ராஜ்யங்களைப் பற்றி ஒன்றும் செய்ய முடியாது.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், பகிரங்கமாக அதிக விலைக்குக் கடைகளிலே லைசென்ஸ்தார்கள் விற்கிறார்களே. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இருக்கிறதா ? விலைக் கட்டுப்பாட்டை அமல் நடத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிக விலைக்கு விற்பதாகத் தகவல் கிடைத்தால் அவருடைய லைசென்ஸ் ரத்து செய்யப்படுகிறது.

SRI K. B. S. MANI : இந்த ஆண்டு கோட்டா இன்னும் வர வேண்டியிருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டாவது கோட்டா எப்போது வரும் ? எந்தக் காலத்தில் சப்ளை செய்யப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது வந்து கொண்டேயிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : நமக்குக் கிடைக்கக்கூடிய இந்தக் குறைந்தபட்ச இரசாயன உரத்தையும் கூட ஒன்றுக்கு இரண்டு மடங்கு விலையில் கள்ள மார்க்கட்டில் விற்கப்பட்டு

17th December 1959]

வருகிறது என்று பல ஜில்லாக்களில் இருந்து புகார்கள் வந்திருக்கின்றனவா? அவைகளின் பேரில் கடுமையான நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல ஜில்லாக்களிலிருந்து அவ்வாறு வந்திருக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. கேள்வி கேட்ட அங்கத்தினர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு தகவல் கொடுத்தார்கள். அதை விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன்.

Public Prosecutor, Tiruchirappalli

* 228 Q.—SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Home be pleased to state the action taken by the Government on certain observations of the High Court of Madras in the appeal filed by the State Government against the acquittal in the Public Prosecutor Acid throwing case, Tiruchirappalli?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Since the term of Office of the Public Prosecutor, Tiruchirappalli, is to expire on the 1st January, 1960, Government do not propose to take any action.

SRI K. ANBAZHAGAN : அந்த பப்ளிக் பிராசிகியூடர் மீது திராவகம் ஊற்றியது சம்பந்தமாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் நிரபராதிகள் என்று விடுவிக்கப்பட்டவர்கள் மீது மறுபடியும் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்தபொழுது அந்த பப்ளிக் ப்ராசிகியூட்டரின் தரம் எந்த வகையிலே குறைந்திருக்கிறது என்ற கருத்தை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு தெரிவித்திருக்கிறதா ? அப்படிப்பட்ட தரக்குறைவாக இருக்கக்கூடியவர்கள் பதவியிலிருந்து தானகவே விலகிக்கொள்ளும் வரையில் அரசாங்கம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டுமா? அல்லது அப்படிப் பட்டவர்கள் மீது முன்னதாக நடவடிக்கை எடுப்பதற்கு திட்டம் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உயர்நீதி மன்றம் சில அபிப்பிராயங்களை தெரிவித்திருக்கிறது. அரசாங்கம் இதை கவனித்து தக்கது செய்யும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதன்பேரில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவது பற்றி இந்தக் கேள்வி. ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது என்றால் முறைப்படிதான் எடுத்துகொள்ளவேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது இந்த பப்ளிக் பிராசிகியூடர் பதவி காலம் சீக்கிரத்திலேயே முடிவடைகிறது. அதற்குமேல் நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் பயன் இல்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : இந்த அப்பீல் வழக்கில் உயர் நீதி மன்றம் இந்த திருச்சி பப்ளிக் பிராசிகியூட்டர்மீது என்னவித கருத்துக்கள் தெரிவித்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கூறமுடியுமா ?

MR. SPEAKER : The hon. Member must put a separate question.

Renovation of temples

229 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to repair and renovate all the old and ancient temples in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI A. A. RASHEED : Under the Ancient Monuments Preservation Act, are these monuments kept in good repair, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that all these temples do not come under the Ancient Monuments Preservation Act.

The Madras Children Act

*230 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1959-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் தேதியிலிருந்து 20-ம் தேதி வரைக்கும் மதுரையில் நடைபெற்ற ராஜ்ய சமூக சேவா மகாநாட்டில் "குழந்தைகள் நலனுக்காக கொண்டுவரப்பட்டுள்ள சென்னை சர்க்கார் சட்டத்தை அமுல் செய்ய ஜில்லாவாரியாக தனி போலீஸ் அமைக்கவேண்டும்" என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter is under the consideration of the Government.

SRI P. G. MANICKAM : முக்கியமாக ரெயில்வேக்களில் பிச்சை எடுக்கின்ற சிறுவர், சிறுமிகளையும், பஸ் ஸ்டாண்டில் பிச்சை எடுக்கும் சிறுவர் சிறுமிகளையும் பிச்சை யெடுக்காமல் தடுப்பதற்கு ஒரு சட்டம் கொண்டுவர சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி தனியாக கேள்வி போடவேண்டும்.

Women as Stamp Vendors

*231 Q.—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

ஸ்டாம்பு வெண்டர் வேலை பெண்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆமாம். கொடுக்கப்பட்டிருக்கிறது.

(Sri V. Sankaran rose.)

MR. SPEAKER : Why does the hon. Member stand up? It is enough if he raises his hand. He is sufficiently visible.

[17th December 1959]

SRIMATHI A. S. PONNAMMAL : இதுவரையில் எத்தனை பெண்களுக்கு ஸ்டாம்பு வெண்டர் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எனக்குத் தகவல்கள் கிடைத்த வரையில் அத்திப் பூத்ததுபோல் ஸ்ரீரங்கத்தில் ஒருவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. (சிரிப்பு).

SRI V. SANKARAN : இந்த வேலை பெண்களுக்கு கொடுக்கப் பட்டால் ஆண் ஸ்டாம்பு வெண்டருக்குள்ள வியாபாரமும், வாடிக் கையும் அடியோடு போய்விடும் என்பதை சர்க்கார் உணர்ந்து இந்த முடிவை அடியோடு கைவிடுவார்களா ? (சிரிப்பு).

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் களுக்குத் தெரியும், ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்பது. இதிலும் அது மாதிரி இருக்க வேண்டும்.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : ஆண்களுடைய வேலை இதனுல் பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆண் களின் வருவாய் தங்களுடைய குடும்பத்தையும் குழந்தைகளையும் வைத்து நிர்வகிப்பதற்கு போதுமான அளவில் இல்லாததால், பெண்களுக்கு வீட்டிலே வேலை செய்யும் முறையில் குடிசைத் தொழில், கைத்தொழில் முதலியவைகளில் ஈடுபடு வதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று திட்டம் வகுத்திருக்கும் நல்ல சர்க்கார், புருஷர்களுக்கு பக்கபலமாக இருக்கும் பொருட்டு இன்னும் அதிகமான பெண்களுக்கு ஸ்டாம்பு வெண்டர் வேலை கொடுப்பதற்கு முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இன்னும் அதிகப்படி யான பெண்கள் இந்த வேலைக்கு முன் வந்தால் அவர்களுடைய தகுதியைப் பொருத்து முடிவு செய்யப்படும்.

SRI S. M. ANNAMALAI : ஸ்டாம்பு வெண்டர் வேலையை பெண்களுக்கு கொடுப்பதுதான் நலம். பத்திரங்களை விற்கும் பொழுது வீட்டிலிருந்தால்தான் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க முடியும். ஆண்கள் ஸ்டாம்பு வெண்டர்களாக இருப்பதினுல் அவர்கள் வேலைக்குப் போய்விடுகிறார்கள். அவர்கள் வீட்டில் இருப்பதில்லை. அதனுல் அவர்கள் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க முடியவில்லை. இந்தக் காரணத்தை யொட்டி இன்னும் அதிகமான பெண்களுக்கு ஸ்டாம்பு வெண்டர் வேலை கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : பெண்கள் அதிகப் படியாக இந்த வேலை செய்வதற்கு முன்வரும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

MR. SPEAKER : I think the majority is in favour of women. Why should the hon. Member Sri Sankaran bother? (Laughter.)

[17th December 1959

Bridge

* 232 Q.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any lands were acquired for the construction of Kundar Bridge in Shencottah taluk; and

(*b*) if so, when the lands were acquired?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) Twenty-seven cents of lands in Shencottah village were taken possession of by the Public Works Department of the erstwhile Travancore Cochin Government prior to the reorganisation of States on 1st November 1956 with the consent of the pattadars. The land acquisition proceedings have not yet been completed by the Revenue Department, as the Land Acquisition Act has not been extended to the transferred areas. The Collector of Kanyakumari has been requested to take necessary action urgently to acquire the lands in question under provisions of the Travancore Regulation XI of Land Acquisition till the Land Acquisition Act is extended to the transfered areas.

Sri K. SATTANATHA KARAYALAR : இது போல தென் காசியின் வில்லேஜைச் சார்ந்த பாலத்தின் ஒரு பகுதியில் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா? செங்கோட்டை வில்லேஜைச் சார்ந்த இடத்திலே நிலம் ஆர்ஜிதம் செய்ததற்கு 4 ஆண்டு காலங்கள் ஆகியும் பணம் கொடுக்கப்படவில்லை. இனி 6 மாத காலத்திற்குள்ளாவது பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

The Hon. Sri P. KAKKAN : நான் முன்பே என் பதிலிலே சொன்னேன். நில ஆர்ஜிதம் செய்வதிலும், பணம் கொடுப்பதிலும் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கலெக்டர் அவர்களுக்கு அரசாங்கம் சொல்லியிருக்கிறது.

Handicrafts

* 233 Q.—Sri K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) what were the various Indian handicrafts that were exported out of our State in 1958–59;

(*b*) what are the various aids given to the handicrafts industry to encourage them in 1958–59; and

(*c*) what is the amount of foreign exchange it has earned for our State in 1958–59?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) to (*c*) A statement[a] furnishing the particulars required is placed on the table of the House.

Sri K. VINAYAKAM : Sir, from the statement placed on the table of the House, it is evident that only about Rs. 13 lakhs worth of handicrafts are exported from our State. Will the Government take more effective steps to encourage this trade so as to earn more foreign exchange for our country?

TRUTH ALONE TRIUMPHS

[a] Printed as Appendix II on page 569 infra.

17th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the organisation of a Central Marketing Co-operative Society for the products of the cottage industries is under the consideration of the Government.

SRI A. GOVINDASAMY : பத்தமடை பாய்க்காக அரசாங்கம் எத்தகைய சலுகை கொடுக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பாக என்னென்ன சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்பது பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

Cultivable waste lands

*234 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்துக்கு லாயக்காகவுள்ள தரிசு நிலங்களை (Clutivable waste lands) விவசாயத்துக்குக் கொண்டு வருவதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதை ஜில்லா கலெக்டர் மூலமாகத் தெரிந்து கவர்மெண்டுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று ரெவின்யு போர்டுக்கு சர்க்காரால் உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறதா?

(ஆ) அவ்வாறு உத்திரவு அனுப்பப்பட்டிருப்பின், அதன் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A note is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : மேஜையின் மீது வைக்கப்பட்டுள்ள குறிப்பிலே ரெவின்யூ போர்டு மூலம் கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்பப்பட்டிருப்பதாகவும், அவர்கள் அந்த அறிக்கையை சர்க்காருக்கு சமர்ப்பிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி தரிசு நிலங்களின் லிஸ்டை கலெக்டர்கள் அனுப்பும்பொழுது அந்த தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக ஹரிஜனங்களுக்கு கூட்டுறவுப் பண்ணைத் திட்டத்தின் கீழ் கொடுப்பதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிதாக பரிசீலனை செய்யவேண்டியது ஒன்றுமில்லை. எல்லா அனுமதியும், யோசனைகளும் கலெக்டர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

SRIMATHI A. S. PONNAMMAL : வீணாகக் கிடைக்கும் தரிசு நிலங்களை எடுத்து கூட்டுறவு பண்ணை அமைத்துவிட்டால் மட்டும் அவைகளை விவசாயத்திற்கு தகுந்த நிலமாக ஆக்கிவிட முடியாது. ஆகையினால் சாகுபடிக்குத் தகுதியில்லாத தரிசு நிலங்களில் 'குட்ஸ்' (Kutzs) என்ற புல்லை விளைவித்தால் அது சாகுபடிக்கு தகுந்த நிலமாக ஆகிவிடுகிறது என்பது உண்மையா? அதன் பேரில் சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

*Printed as Appendix III on pages 570–571 infra.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இருக்கிற நிலத்தின் தன்மைக்குத் தக்கவாறு அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது.

SRI S. M. ANNAMALAI : நம் மாநிலத்தில் சாகுபடி செய்யப் படாத பட்டா நிலங்கள், தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் மொத்தம் சேர்ந்து எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு ஒரு முறை இம்மாதிரி விவரம் கொடுத்தேன் என்று நினைக்கிறேன். இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : சாகுபடி செய்யக் கூடிய
9-30 a.m. தரிசு நிலம் என்று குறிப்பிட்டிருக்கிறது. சாகுபடி செய்யக் கூடிய நிலங்கள், குடி வளம், நிலவளம் பெற்று இருப்பதால், அவை குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், சாகுபடிக்கு லாயக்கற்ற ஏராளமான நிலங்கள் இருக்கின்றனவா ? அந்த விவரம் சர்க்கார் கொடுக்க முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப் படுகிறது. அது ஒரு வகை. வேறு வகையிலும் இருக்கிறது.

SRI P. G. MANICKAM : இவ்விதம் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை சில இடங்களிலே, சர்க்கார் கிரயத்தை வசூலிக்கிறதாகத் தெரிகிறது. அதை ரத்து செய்து விட்டு ஏழை மக்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும், இலவசமாகப் பட்டா செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் குறிப்பிட்ட நிலத்தின் மீது செலவு செய்திருக்கும் தொகையை மட்டுந்தான் வசூலிக்கப்படுகிறது. மற்றபடி, அந்த நிலங்கள் இலவசமாகத் தான் வழங்கப்படுகிறது.

SRI P. S. CHINNADURAI : சாகுபடிக்கு லாயக்காக இருக்கக் கூடிய நிலங்களை பூமிதான போர்டார் வசம் கொடுத்து, அவர்கள் மூலம் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யும் கருத்து சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரேதான் தானம் செய்கிறதே.

SRI K. B. S. MANI : அந்தந்த ஜில்லாவில் எவ்வளவு தரிசு நிலங்கள் இருக்கின்றனவோ, அந்தந்த ஜில்லாவில் இருக்கும் மாஜி ராணுவ யூனிட்டுகளுக்கு கொடுத்து, சாகுபடிசெய்ய வசதி செய்து கொடுக்க முன்வருவார்களா ? தேவைப்பட்டபொழுது சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம் என்ற எக்ரிமெண்டிலாவது கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : யாராக இருந்தாலும், யார் சாகுபடி செய்கிறார்களோ அவர்களுக்கு நிலம் வழங்கப் படுகிறது.

SRI A. GOVINDASAMY : உணவு உற்பத்தியை முன்னிட்டு மாஜி பட்டாளக்காரர்களுக்கும், ஏழை ஹரிஜனங்கள், மற்ற பின் தங்கிய வகுப்பாருக்கும் நிலம் வழங்கப்பட்டு பயிர் செய்கிறார்கள். அந்த நிலங்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. அபராதத்தை ரத்து செய்து வசதி செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அனுமதியில்லாமல் சாகுபடி செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அபராதம் விதிக்கப் படுகிறது. நானே பார்த்தேன், ஒரு ஏரியோ, கண்மாயோ இருந்தால் அதில் சாகுபடி செய்து விடுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும்.

SRI N. MARUDACHALAM : இந்த தரிசு நிலங்களில் அவர்கள் வேலை செய்யும்படி வசதி செய்துகொடுக்க சர்க்கார் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிலும் அரசாங்கம் அவ்வப்பொழுது கவனம் செலுத்தி வருகிறது.

SRI R. SWAMINATHA MERKONDAR : தஞ்சை ஜில்லாவிலே சாகுபடிக்கு லாயக்கான தரிசு நிலங்களை ஹரிஜனங்களோ, ஏழை விவசாயிகளோ அடமானம் செய்து கொடுக்கும்படி மனுப்போடும் போது, கலெக்டர் ஆபீசிலிருந்து மார்க்கெட் ரேட்டை கட்டும்படி உத்தரவுகள் வருகின்றன. நானே உத்தரவுகளைப் பார்த்திருக் கிறேன். ஆகவே, சர்க்கார் இலவசமாக அடமானம் செய்து கொடுக்க முயற்சி செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி முன்பே சொன்னேன். அம்மாகிரி நிலத்தில் சர்க்கார் செலவழித் திருக்கும் தொகை வசூலிக்கப்படுகிறது. மற்றபடி நிலம் இல்லாதவர்களுக்கு, இலவசமாகத்தான் வழங்கப்படுகிறது.

SRI K. R. NALLASIVAM : பல தரிசு நிலங்களை நிலம் இல்லாதவர்கள் சிவாஜிமா பெற்று சாகுபடி செய்ய சீக்கிரம் கொடுக்க துரிதமான நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது அவ்வப் பொழுது கவனிக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that under the guise, 'Grow More Food Campaign', some agriculturists have encroached upon the KOLAVAI LAKE opposite the Chingleput Railway Station and they have almost gone into the interior of the lake thus preventing water-logging in the Lake? If so, may I know from the Hon. Minister what steps the Government propose to take in that connection?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information in the matter. If, however, the hon. Member puts a separate question, I can answer it, Sir.

[17th December 1959

Sri A. VEDARATHNAM: *சார், சர்க்கார் புரம்போக்கு நிலம் சாகுபடிக்கு லாயக்கானதை, அதற்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு, தலைக்கு 2 ஏக்கர் வீதம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அநேக வருஷங்கள் ஆகியும், இன்னமும் கொடுக்கப்படாமல் இருந்து, கனம் மின்சார அமைச்சர் அவர்கள் கூட இந்த விஷயத்தை அதிகாரிகளிடம் சொன்னார்கள். ஆனால் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வாய்மேடு என்ற இடத்தில், 2,500 ஏக்கர் இருக்கிறது. அதைப்பற்றி அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா ?*

The Hon. Sri M. BHAKTAVATSALAM: *அதைப் பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.*

Coffee and Tea

* 235 *Q.*—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the period of contract given to British and other Coffee and Tea Planters in the State for growing Tea and Coffee has come to a close;

(*b*) whether there is any proposal before the Government to cancel all contracts and take over all the estates for themselves; and

(*c*) if so, the details of the same?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Sri N. K. PALANISAMI: Soon after the contract comes to a close, may I know why the Government cannot take away the British plantations by paying some compensation to them in order to augment the revenues of the State on the lines of the Resolution passed in Nagpur on the Industrial Policy of the Government to take over some profitable industries and run them?

Mr. SPEAKER: From the answer, it seems that there is no contract at present coming to a close.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: From the information I have, I do not find there are any big estates which are under lease and whose leases are likely to expire.

Sri S. NAGARAJA MONIGAR: *சார், இப்படிச் செய்வது வெளிநாட்டார் இங்கே குடியேறக் கூடாது என்று தடுப்பதாக ஆகாதா? அது நமது சர்க்காரின் உத்தேசமா ?*

The Hon. Sri M. BHAKTAVATSALAM: *கேள்வி கேட்ட அங்கத்தினருக்குப் போட வேண்டிய கேள்வி அது.*

17th December 1959]

Colour Bar in clubs with bar attached

* 236 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to cancel the licences of the clubs to run a Bar, which practise colour bar and discrimination against non-whites?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter has been under consideration.

SRI A. A. RASHEED : Sir, is it not derogatory to the dignity of the Indian citizens that colour bar should be practised on the Indian soil?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I have already stated that the matter has been under examination.

Police Centenary Week

* 237. *Q*.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government propose to Celebrate Police Centenary Week;

(*b*) if so, when and where;

(*c*) what are the activities that would be gone through;

(*d*) whether it is a fact that a film is being shot on the subject of Police—Public Relations with the help of famous Cinema Stars; and

(*e*) the expenditure involved in it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) From 22nd August 1959 to 30th August 1959 in the districts and from 31st August to 7th September 1959 in the Madras City.

(*c*) A statement[a] is placed on the table of the House.

(*d*) Yes, Sir.

(*e*) Rs. 35,000.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that by the exhibition of a picture of that kind, there is already a rumour afloat that pickpocketing, being a highly technical art, is taught through that picture and if so, will the Government take some effective steps to prohibit the exhibition of such kinds of films at least in the future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am not aware of any such rumour. But, I do not think that the film that is exhibited, encourages or gives instruction in pickpocketing. Rather, it reveals how the Police help could be sought and obtained.

a Printed as Appendix IV on pages 571-572 infra.

[17th December 1959

Transport Co-operative Society

* 238 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. Minister for Electricity be pleased to state—

(a) whether this Government have received any communication from the Centre to set up a Transport Co-operative Society, and

(b) if so, the steps taken by the Government thereon?

The Hon. Sri V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) The proposals of the Government of India are under consideration of the Government.

Sri N. K. PALANISAMI : May I know whether this Government has received any information from the Planning Commission that the Government should form the Transport Corporation or else, they would not help this Government with funds in that regard?

The Hon. Sri V. RAMAIAH : That is entirely a different question.

Sri S. NAGARAJA MONIGAR : இப்படி கூட்டுறவு சங்கம் அமைப்பது ஆலோசனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மாநிலம் பூராவாக ஒரு சங்கமா அல்லது பலபல இடங்களில் பலபல சங்கங்களா அமைக்கப் போகிறார்கள்? பஸ் தொழில் சம்பந்தமாக ஒவ்வொரு இடங்களிலும் ஆரம்பிப்பார்களா?

The Hon. Sri V. RAMAIAH : கூட்டுறவு அடிப்படையிலே, "குட்ஸ்" போக்குவரத்து சம்பந்தமாக ஒரு பைலட் ஸ்கீம் ஆரம்பிக்க ஆலோசனை ; 50 அங்கத்தினர்களைச் சேர்த்து திட்டம் அமுலாக்கப்படும். இதற்குக் காரணம், படித்தவர்களுக்கு வேலை தேடிக்கொடுக்கும் நோக்கத்தோடு பரீட்சார்த்தமாக ஒரு திட்டம் அமுலாக்கப்படவேண்டும் என்பது யோசனை. விதி முறை முதலியவை ரெஜிஸ்ட்ராரிடமிருந்து வந்திருக்கிறது, அதெல்லாம் ஆலோசனையில் இருக்கிறது.

Sri N. K. PALANISAMI : May I know who are all benefited by this and whether any grant is expected from the Central Government?

The Hon. Sri V. RAMAIAH : This is to benefit, as I have earlier stated, the educated young men of this State. As a pilot scheme, we have decided to organise a Co-operative Goods Transport Society with 10 vehicles in the beginning.

Sri M. KALYANASUNDARAM : பரீட்சார்த்தமாக நடத்தும் திட்டத்தில் முதலில் பஸ்களை எடுக்க வேண்டிய காரணம் என்ன? அப்படி எடுத்தால் அதில் நஷ்டம் ஏற்படும். அதனால் கூட்டுறவு முறையில் நடத்துவது சாத்தியம் இல்லை என்பதை நிரூபிக்கவா அப்படி முதலில் இதை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

17th December 1959]

THE HON. SRI V. RAMAIAH : அதில் நஷ்டம் ஏற்படாது என்று நம்புகிறோம்.

SRI P. S. CHINNADURAI : கூட்டுறவு முறையில் பஸ் போக்கு வரத்து நடத்துவதற்கு யாரேனும் முன் வந்தால் அந்தப் பகுதியைச் சார்ந்த பொதுமக்கள் அதற்கு தயாராக இருந்தால் அப்படிப்பட்ட தனியாருக்கு உதவி அளிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : கூட்டுறவு முறையில் பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்த யாராவது ஆசைப்பட்டால் அதற்கு ஓரளவு அரசாங்கம் சலுகை காட்டிக்கொண்டுதான் வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : கூட்டுறவு போக்குவரத்து சங்கம் ஏற்படும்போது அந்தப் பக்கத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் மட்டும் அதில் இருக்கலாமா அல்லது தொழிலாளர்கள் அல்லாதவர்களும் அதில் இருக்கலாமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கேள்வி ஒரு தனிப்பட்ட பிரச்னையாக வந்திருக்கக்கூடிய கேள்வி. கனம் அங்கத்தினர் இப்பொழுது கேட்கக்கூடிய கேள்வி ஒரு குறிப்பிட்ட ஸ்கீமைப் பற்றியது. கூட்டுறவு இயக்க அடிப்படையில் பஸ் போக்குவரத்து, குட்ஸ் ட்ரான்ஸ்போர்ட் முதலியவைகளை எடுத்து நடத்த வேண்டுமானால் அது சம்பந்தப்பட்டிருக்கக்கூடியவர்களையும் அங்கத்தினர்களாக சேர்க்கப்படும்.

SRI K. B. S. MANI : பரிட்சார்த்தமாக நடத்த இருக்கும் இந்த பைலட் கூட்டுறவு இயக்கத்தில் சேர்க்கப்படப்போகிற ஐம்பது அங்கத்தினர்களும் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா அல்லது லட்சாதிபதி வர்க்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த திட்டத்தை எடுக்கும் நோக்கமே வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்குதான் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கப் போகிறோம். அதற்குத்தான் இதை நடைமுறைக்குக் கொண்டு வரப்போகிறது. லட்சாதிபதிகளும் வேலை இல்லாமல் இருக்கலாம். அப்படி அவர்களும் இருந்தால் அவர்களையும் அதில் சேர்த்துக் கொள்வதில் கஷ்டம் இல்லை.

SRI S. M. ANNAMALAI : வேலை இல்லாதவர்களுக்கு வேலை தேடித் தருவதற்கு என்று இந்த இயக்கம் ஆரம்பிக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் சொன்னார். மாஜி ராணுவத்தினர் பஸ் போக்குவரத்தை நடத்தி வருகிறவர்களுக்கு மேலும் உதவி அளிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI V. RAMAIAH : அவர்களுக்கும் நிறைய உதவி செய்து கொண்டிருக்கிறோம்.

[17th December 1959

Sri A. GOVINDASAMY : மாஜி ராணுவத்தினருக்கு நிறைய உதவி அளிக்கப்படுவதாக கனம் அமைச்சர் குறிப்பிட்டார். தென்ஞர்காடு ஜில்லாவில் மாஜி ராணுவத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட பஸ் ரூட் கொடுக்கவேண்டியது நியாயமாக இருக்கும்போது அதை தனியாருக்கு வழங்கி இருக்கிறார்கள். அதைப்பற்றிய வழக்கு ஹைகோர்ட்டுக்கு வந்தது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

The Hon. Sri V. RAMAIAH : ஹைகோர்ட்டுக்குப் போகக் கூடியதாக இருப்பதால் நாம் அதில் நேரடி தலையிடுவதற்கு ஒன்றும் இல்லை.

Aid from U.S.A. for Higher Agricultural Education

* 239 Q.—**Sri A. VEDARATHNAM :** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

விவசாய மேற்படிப்பிற்கு அமெரிக்கா அளித்திருக்கும் ரூ. 40 லட்சம் உதவியில் இந்த மாநிலத்திற்கு எந்தெந்த கல்லூரிக்கு எந்தப் பாடத்திட்டம் போதிக்க எவ்வளவு ரூபாய் உதவியளிக்கப் பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It has been ascertained from the Indian Council of Agricultural Research, New Delhi, that during the last five years a number of agreements have been concluded between the Government of India and Technical Co-operation Mission for providing technical assistance to the Agricultural and Veterinary Colleges in India. However, no agreement for the specific amount of Rs. 40 lakhs referred to in the question has been concluded. The following are the institutions in this State which will benefit and the value of equipment and books approved for allotment :—

Name of the Institution.	*Value.* $
1. Annamalai University, Chidambaram	7,812·00
2. Veterinary College, Madras	90,304·00
3. Agricultural College and Research Institute, Coimbatore	73,612·00
4. Institute of Veterinary Preventive Medicines, Ranipet	794·00
Total ...	172,522·00
	or Rs. 8,19,479·50 nP.

Sri A. VEDARATHNAM : இந்த உதவியின் மீது எந்தக் கல்லூரிகளில் என்ன பாடத் திட்டம் மேல் படிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை தயவுசெய்து அறிவிக்க முடியுமா ?

17th December 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விவசாய இலாகா வைப்பற்றியும் கால்நடை இலாகாவைப்பற்றியும்தான் அந்தப் பாடம்.

SRI A. VEDARATHNAM : இங்கேயிருந்து மேல் படிப்புக்கு போக விரும்பும் மாணவர்களுக்கு இந்த நாட்டிலிருந்து உபகாரச் சம்பளம் கொடுத்து வெளி நாடுகளுக்கு அனுப்ப முடியுமா? அதற்கு இதில் ஏதாகிலும் வழி உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடைக் கல்லூரி யிலும் விவசாயக் கல்லூரியிலும் போஸ்ட் கிராடுவேட் கோர்ஸ் இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் ஸ்பெஷல் ஸ்டடிக்கு குறிப்பிட்ட திட்டத்திற்கு அனுப்புவதைப்பற்றி அது சம்பந்தமாக தனியாக கவனிக்கப்படும்.

SRI V. SANKARAN : மேற்படி கல்லூரிகளில் கொடுக்கப்படும் தொகை ரூபாய் அளவிலா அல்லது டாலர் அளவிலோ என்பதை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டும் ஒன்று தான். டாலரைப் பற்றியும் ரூபாயைப் பற்றியும்தான். டாலராக இருந்தால் அதன் ரூபாய் மதிப்பில் கொடுக்கப்படுகிறது. டாலர் மதிப்புக்குச் சமமான ரூபாய் கொடுக்கப்படுகிறது.

SRI S. LAZAR : உதவி பணம் கொடுக்கப்படுகிறபோது கல்லூரி களில் உயர்ந்த படிப்புக்கு அதாவது ரிசர்ச், எம்.எஸ்.சி.-க்கு விவசாயக் கல்லூரிகளில் போகக்கூடியவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்றும் தனியார் மூலமாக படிக்கக் கூடிய சலுகைகள் கொடுக்கப்படுவது இல்லை என்றும் அண்ணாமலை கலாசாலைக்கு சலுகை இல்லை என்றும் சொல்லப்பட்டது. இதை மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மாணவர்களுக்குக் கொடுப்பது இல்லை. அந்தந்த ஸ்தாபனக் கல்லூரிகளில் அவர் களுக்கு டெக்னிகல் அசிஸ்டெண்ட் படிக்க உதவி பெறவேண்டும் என்றுதான் சொன்னேன்.

Grant of loans to Industrialists

*240 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Home be pleased ot state—

(*a*) the loans so far given to industrialists both for small scale as well as large scale industries;

(*b*) the amount of arrears to be realised till date;

(*c*) the number of defaulters and the amount; and

(*d*) the number of industrialists who have been given loans more than a lakh?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The loans so far given to industialists both for small scale as well as for large scale industries from 1948–49 to 1959–60 (up to July 1959) amount

to rupees one crore eightly-six lakhs, seventy-four thousand and six hundred and eighty and three naye Paise only (Rupees 1,86,74,680·03).

(*b*) The amount of arrears to be realised as on 31st March 1959 is rupees thirty four lakhs fifty thousand and three hundred and thirty-two and thirty-six naye Paise only (Rs. 34,50,332·36).

(*c*) The number of defaulters : One thousand three hundred and six (1,306). *Amount* : Rupees thirty four lakhs fifty thousand and three hundred and thirty-two and thirty-six naye Paise only (Rs. 34,50,332·36).

(*d*) Twenty-two (22) ; *Amount* : Rupees one crore four lakhs and five thousand only (1,04,05,000).

SRI K. VINAYAKAM : Were any steps taken to recover the loan given to the defunct Sudarsan Oil Mills, Katpadi and if so how much was realised?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Steps have been taken and the amount recovered. I do not have the exact figures with me.

SRI V. K. KOTHANDARAMAN : *தொழில் அபிவிருத்தி என்கிற பேரில் ஐந்து லட்சத்துக்குமேல் கடன் உதவி கொடுத்து வசூலாகாமல் இருக்கக்கூடிய கடன்கள் அவரவர்கள் எந்தெந்த ஜில்லாவைச் சார்ந்தவர்கள்? அவை வசூலாகாது என்ற முடிவுக்கு சர்க்கார் வந்திருக்கிறார்களா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *அதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.*

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Waht are the steps taken to recover the arrears from the Villupuram Oil Mills?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government have arranged to auction the buildings and other equipment. The auction has been postponed since there has been an offer by a party to take it on lease, in which case the Government could recover what is due to them. That is being looked into.

SRI A. GOVINDASAMY : *விழுப்புரம் வனஸ்பதி ஆலையை எலம் விடுவதன் மூலம் அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய தொகை கிடைக்குமா என்ற சந்தேகம் இருக்கிற காரணத்தால் அதை தனியாருக்குக் குத்தகைக்கு விட்டு அந்தத் தொழிலை நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *இதுதான் அரசாங்கத்தினுடைய யோசனை என்று நான் ஏற்கெனவே பதில் சொல்லி இருக்கிறேன்.*

SRI V. SANKARAN : இந்தக் கடன்கள் எல்லாம் தகுந்த ஜாமீன்கள் மீது, கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? அம்மாதிரி இருந்தால் அது வசூலாவதற்கு தாமதமாவதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விழுப்புரம் பாக்டரிக்குச் சொன்ன மாதிரி வசூலிப்பதில்தான் தாமதமாகிறது. ஜாமீன் எல்லாம் எடுத்துக்கொண்டுதான் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI K. RAMACHANDRAN : லட்சத்துக்கு மேல் கொடுக்கப் பட்ட கடன் இம்மாதிரியான தொழில்களுக்குக் கொடுக்கப்பட் டிருக்கிறது. அவற்றில் எவ்வளவு வசூலாகி இருக்கிறது? எவ் வளவு பாக்கி இருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு வேண்டிய விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை.

Increase in Electricity Rates

* 241 Q—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have received any protest from the Public against the recent increase in the electricity rate?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that the high electricity rate stands in the way of quick industrialisation of our State?

THE HON. SRI V. RAMAIAH : I do not accept the statement of the hon. Member, Sir. Our difficulty is to meet the demand for extra energy which we will have to generate.

SRI A. A. RASHEED : What was the necessity to increase the rate for electricity, when the people are already groaning under high price of other articles?

THE HON. SRI V. RAMAIAH : I request the hon. Member to go through the entire tariff structure in which we have recently made some alterations. Generally we find that this change is necessary because, before the change, there were so many additions such as war time surcharge and other surcharges. The old rate came into force as early as in 1932. To have a uniform rate for the different consumers, a Committee was set up and the Committee went into it very thoroughly and it was later considered by the Electricity Board. More than that, it was again considered by the Electricity Consultative Committee. After going through all these processes, the Electricity Board has brought into effect the change in the tariff structure.

SRI A. GOVINDASAMY : விழுப்புரம் போன்றயிடங்களில் வெய்யில் காலங்களில் தண்ணீர், நீர்மட்டம் குறைந்திருக் கிறபோது மோட்டாரை கீழே இறக்கி வைத்து இறைக்க வேண்டி

[17th December 1959

அதிலும் குறிப்பாக ஏழை விவசாயிகள் ரசாயன உரம் கிடைக்காமல் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறுர்கள். இப்போது ரசாயன உரம் வழங்குவதற்கு சமுதாய நலத்திட்டங்கள் அமுலாகியிருக்கிற இடங்களில் அந்தப் பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளிடத்திலும், அது இல்லாத இடங்களில் தாசில்தாரிடத்திலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சில பண வசதி படைத்தவர்கள், அவர்கள் நான்-பிளாக் ஏரியாவில் இருந்தாலும்கூட, பிளாக் அதிகாரிகளிடத்தில் போய் தொந்தரவு பண்ணி வாங்கிக்கொள்கிறுர்கள். அதே போன்று பிளாக் ஏரியாவில் இருக்கின்ற பண வசதி படைத்தவர்களும் தாசில்தார்களிடத்தில் போய் வாங்கிக்கொள்கிறுர்கள். இவ்விதம் இரண்டு முறையிலும் அவர்கள் இந்த ரசாயன உரத்தை பெறுகின்ற நிலைமை ஏற்படுகிறது. பொதுவாக கூட்டுறவு சங்கங்கள் மூலம் வினியோகம் செய்யவேண்டும் என்று சொன்னுலும், அப்போது பொதுவாக இந்த கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு சலுகை காட்டக்கூடிய நிலைமையில் தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலைமையை தவிர்க்க அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். விழுப்புரத்தில் சமீபத்தில் நடந்த விவசாயிகள் மகாநாட்டில்—உணவு உற்பத்தியை பெருக்குவதற்காக நடந்த மகாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர் அவர்களிடத்தில் அங்குள்ள விவசாயிகள் தங்களுக்கு போதுமான அளவு ரசாயன உரம் கிடைக்கவில்லை என்ற குறையை தெரிவித்தார்கள். அவற்றை உடனடியாக கவனிக்கலாம் என்று அமைச்சர் அவர்களும் உத்திரவாதம் அளித்தார்கள். அதன்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும் புதுவை ராஜ்யத்திலிருந்து—புதுவை ராஜ்யம் சமீபத்தில்தான் இந்திய யூனியனோடு சேர்ந்திருக்கிற காரணத்தால்—விழுப்புரம், கடலூர், திண்டிவனம் போன்ற தாலூகாக்களுக்கு கள்ளமார்க்கட்டில் ரசாயன உரம் வந்து கொண்டிருக்கிறது. கண்ட்ரோல் ரேட் 19 ரூபாய் என்று சொன்னுல் கள்ளமார்க்கட்டில் 25 ரூபாய் கொடுத்தால் எவ்வளவு வேண்டுமானுலும் சுலபமாக வாங்கலாம் என்கின்ற நிலைமை அங்கு இருந்து கொண்டிருக்கிறது. நான் இதைப்பற்றி அங்கு கண்டித்து சொன்ன நேரத்தில் அங்குள்ள ஒரு பெரிய

விவசாயி இதைப்பற்றி கண்டித்துச் சொல்லாதீர்கள், அவ்விதம் நீங்கள் கண்டித்து பேசுவதாக இருந்தால் இப்போது கள்ள மார்க்கட்டில் கிடைத்துக் கொண்டிருப்பதும் கிடைக்காமல் போய் விடும் என்று தெரிவித்தார். (குறுக்கீடு.) கனம் அமைச்சர் அவர்களும் இந்த வாதத்தை ஒத்துக்கொள்வதாக தெரிகிறது. அமைச்சர் அவர்கள் இதை ஒத்துக்கொள்வதாக இருந்தால் நான் சொல்லுகிற குற்றச்சாட்டு இதில் நிச்சயமாக தொக்கி நிற்பதாக ஆகும். எப்படி அவர்கள் உரத்தை வேண்டிய அளவுக்கு பெற்றுக்கொள்ள முடிகிறது என்றால் அவர்களுக்கு இருக்கிற பணபலத்தாலும், அவர்களுக்கு இருக்கின்ற அரசியல் செல்வாக்கினாலும், பொருளாதார துறையில் இருக்கின்ற செல்வாக்கினாலும், அவர்கள் அதிகமாக வாங்கி பதுக்கி வைத்துக்கொள்வார்கள். இவ்விதம் அதிகமாக குறைந்த விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு, ஏழை விவசாயிகளுக்கு அதிக விலையில் கொடுத்து வருகின்ற நிலையும் இருந்து கொண்டிருக்கிறது. இவ்விதம் நடந்து கொண்டிருக்கின்ற நிலைமை நீடிக்கவேண்டும் என்று சொன்னால், அமைச்சர் அவர்கள் இதற்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்றுதான் கருதுகிறார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். நாம் எப்படி ஏழை விவசாயிகளிடத்தில் போய் நெல் கொள்முதல் செய்கின்றோமோ, அதேபோன்று ஒவ்வொரு விவசாயிக்கும் தேவையான அளவு ரசாயன உரம் கிடைப்பதற்கு வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே பூச்சி மருந்து அரை விலைக்கு கொடுக்கப்படும் என்று பிரசாரம் செய்கிறோம். ஆனால் விவசாயிகளுக்கு பூச்சி மருந்து சரியான முறையில் கிடைக்காத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் கவனித்து, விவசாயிகளுக்கு வேண்டிய ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், இவைகள் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் படும் கஷ்டங்களை உணர்ந்து—அவர்களுக்கு கண்ட்ரோல் ரேட்டிற்கு கிடைக்கும்படியாக செய்வதற்கு—வேண்டிய வழிவகை செய்யவேண்டும் என்று கூறி, இந்த விஷயங்களை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Deputy Speaker, Sir, this is a matter given notice of under Rule 41 of the Assembly Rules but the hon. Member spoke as if he was moving an Adjournment Motion. (Interruption) I did not raise objection then because I did not want to stand in his way. Therefore, I should not be expected to refer to every point that he has made.

Now I would like to make a statement about the supply position of ammonium sulphate and pesticides in the South Arcot district.

The allotments of nitrogenous fertilisers are made by the Government of India under the Central Pool arrangements. As the indigenous production of fertilizers in this country is inadequate

to meet the demand, imports are being made by the Government of India. But, in view of the present difficult foreign exchange position the centre is not able to meet the full requirements of this State. The Government of India were able to supply to this State up to 15th October 1959 only 19 per cent of our requirements of ammonium sulphate, for the curent yaar 1959–60. In respect of other fertilizers, the percentages of actual supply was 41 per cent for urea, 14 per cent for ammonium sulphate nitrate and 25 per cent for calcium ammonium nitrate. As the supply position of fertilizers was not satisfactory, I recently took up the matter with the Union Minister for Food personally and as a result, the Government of India have since allotted a further quantity of 4,000 tons of ammonium sulphate from Sindhri, for which despatch instructions have been issued telegraphically and the Chief Director of Movements has also been asked by telegram to move the quantity to the destination stations on highest priority basis.

Out of the quantity made available to this State, roughly 25 per cent is set apart for distribution to the manure mixing firms for use in the preparation of manure mixtures and the balance is being distributed to each district on a rational basis according to its needs. The stock and supply position as indicated by the fortnightly returns received from the district stockholders is reviewed and issue of despatch instructions to the district is so arranged as to ensure adequate supplies to the needy areas and to maintain a reserve stock of three months' requirements at any time at all centres of distribution, as far as possible, consistent with the suppiy. with a view to meet adequately and in time the demands of the ryots for the fertilizers.

The shortage of fertilizers is being experienced throughout the State and it is not peculiar to the district of South Arcot alone. The quantity allotted to South Arcot district up to December 1959, during the current year is, ammonium sulphate 5,500 tons, Urea 1,325 tons, ammonium sulphate nitrate 100 tons and calcium ammonium nitrate 60 tons. Further, out of the special allotment of 4,000 tons of ammonium sulphate made from Sindri for this quarter a quantity of 400 tons has been allotted to South Arcot district. This special quota has been given only to five districts and South Arcot is one of them. It is therefore clear that South Arcot district has neither been neglected nor given an unfair treatment in the matter of allotment of fertilizers. With the poor allocations made to this State, every effort is being made to see that the minimum needs of all districts are met proportionately without any discrimination whatsoever consistent with the acreage, demand from the ryots for chemical fertilizers and stock position.

As regards insecticides, they are being supplied at concessional rates to food crops throughout the year. Recently, the Director of Agriculture has issued instructions to all District Agricultural

Officers to stock pesticides and fungicides in adequate quantities to meet the demand of this Rabi season. I assure the House that if any specific complaints regarding distribution of insecticides are brought to the notice of the Government, they will be immediately looked into for prompt action.

IV. PRESENTATION OF REPORTS.

(1) THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI K. SATTANATHA KARAYALAR : Mr. Deputy Speaker, Sir, I, Chairman of the Committee on Government Assurances, present the Sixth Report of the Committee on Government Assurances.

(2) THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI T. SAMPATH : Mr. Deputy Speaker, Sir, I, Chairman of the Committee on Subordinate Legislation, present the Sixth Report of the Committee on Subordinate Legislation.

V. GOVERNMENT BILLS.

(1) THE MADRAS (TRANSFERRED TERRITORY) INCORPORATED AND UNINCORPORATED DEVASWOMS BILL, 1959 (L.A. BILL NO. 25 OF 1959).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, Sir, I move—

¶ "That the Madras (Transferred Territory) Incorporated and Unincorported Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959) be taken into consideration."

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டைத் தாலுக்காவும் சென்ற 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டது. மாற்றப்படுவதற்கு முன்பு அந்தப் பிராந்தியத்திலுள்ள அறநிலையங்களையெல்லாம் முன்பு இருந்த தேவஸ்வம் போர்டு நிர்வகித்து வந்தது. அங்கு இருந்த தேவஸ்வம் போர்டானது 1950-ம் ஆண்டில் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் இயற்றப்பட்ட திருவாங்கூர்-கொச்சி அற நிலயப் பாதுகாப்புப் சட்டப்படி அமைந்தது. 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி அந்தப் பிராந்தியங்கள் இந்த ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டவுடன், ஸ்டேட்ஸ் ரீ-ஆர்கனைஸேஷன் சட்டத்திலே—1956-வது வருஷத்திய சட்டத்திலே—122-வது பிரிவுப்படி இந்தப் பிராந்தியங்களுக்கு தேவஸ்வம் போர்டு இல்லை. இந்த ராஜ்யத்தி லிருக்கிற அற நிலையப் பாதுகாப்பு போர்டு கமிஷனர் அவர்கள் தேவஸ்வம் போர்டு அதிகாரங்களைப் பெற்று, கமிஷனரே நிர்வகிப் பது என்று 122-வது பிரிவிலே இருக்கிறது. அது முதற்கொண்டு அற நிலயப் பாதுகாப்புக் கமிஷனர் அதிகாரங்களைச் செலுத்திக் கொண்டு வருகிறார். அந்த திருவாங்கூர்-கொச்சி சட்டம் ஓரளவுக்கு மாற்றப்பட்டது. அந்தப் பிராந்தியங்கள் இந்த ராஜ்யத் திற்கு மாற்றப்படுவதற்கு முன்பு இருந்த சட்டம் ஓரளவுக்கு

மாற்றப்பட்டது. அதைப் பரிசீலனை செய்து பார்த்ததில், அதை அப்படியே நாம் ஏற்றுக்கொள்வதானால் இந்த அற நிலையங்களின் மீது போதிய அளவுக்கு திருப்திகரமாக கவனம் செலுத்த முடியாது என்று பட்டது. அதோடு கூட இந்த ராஜ்யத்தில் அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் என்று முன்பு இருந்த சட்டத்தை மாற்றி புதிய ஒரு சட்டத்தை இந்த மன்றம் நிறைவேற்றியது. அந்த சட்டம் அமுலுக்கும் வந்திருக்கிறது. இது பொதுவாக அற நிலையங்களை பாதுகாப்பதற்காக இருக்கக் கூடிய சட்டம். அந்தச் சட்டம் ஓரளவுக்கு கன்னியாகுமரி, செங்கோட்டைப் பகுதிகளும் இந்த ராஜ்யத்தின் ஒரு பகுதி என்ற முறையில் அங்கும் அமுலுக்கு உண்டு. இதிலே இந்தப் பிராந்தியம், அந்தப் பிராந்தியம் என்று பாகுபாடு செய்துகொண்டே போக முடியாது. அந்தப் பிராந்தியங்களும் இந்த ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டு விட்டன. இணைப்பது என்றால் என்ன அர்த்தம்? முன்பு இருந்ததையே நினைத்துக் கொண்டு அப்படியே இருக்கவேண்டும் என்று சொன்னால், ஒரு தனி ராஜ்யமாக இருப்பது என்று சொன்னால் இணைப்பு என்ற வார்த்தைக்கு அர்த்தமில்லை. முன்பு இருந்த பழக்க வழக்கங்கள், முறைகள், சட்டங்கள், இவைகளை உடனடியாக ஒரேயடியாக மாற்றி விட முடியாது. சிற்சில சட்டங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. சிற்சிலவைகள் பழைய முறையிலேயே நீடிக்கப்பட்டு வருகின்றன. இங்கே அற நிலையப் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு தேவஸ்வம் போர்டு கமிஷனர் பார்வையில் இருக்கிறது. கன்னியாகுமரி, செங்கோட்டைப் பகுதியில் அற நிலையங்களின் மேற்பார்வைக்கு ஒரு தேவஸ்வம் போர்டு அமைக்கப்பட்டு வந்திருக்கிறது. இங்கே எப்படி அமைப்பது என்பதைப் பார்த்தபோது அதற்காகத் தான் திருவாங்கூர்-கொச்சி சட்டம் ஓரளவுக்கு இந்த ராஜ்யத்திற்கென்று மாற்றப்பட்டது. அதை மேலும் பரிசீலனை செய்து அதை எப்படி மாற்றவேண்டும் என்று பார்த்து இப்போது இந்த மசோதா இங்கே வந்திருக்கிறது. இந்த மசோதாவை இவ்வாறு கொண்டு வருவதற்கு முன்பு மத்திய சர்க்காரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கிறது. இது வரையில் இவ்வளவு தாமதம் ஆனதற்கு காரணம் நன்றாகப் பரிசீலனை செய்து, இந்த மசோதாவைத் தயாரித்து, மத்திய சர்க்காரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி அவர்களுடைய அங்கீகாரத்தையும் பெற்று மசோதாவாக கொண்டு வந்திருப்பதால் தான். இதை மத்திய சர்க்காரும் நன்றாகப் பரிசீலனை செய்ததால் இன்னும் கொஞ்சம் காலம் ஆயிற்று. அந்தப் பிராந்தியங்கள் திருவாங்கூர்-கொச்சியில் இருந்தபோது திருவாங்கூர்-கொச்சி மகாராஜா அவர்களுக்குச் சில உரிமைகள், உரிமைக்கு உகந்த சில பழக்கங்கள் இருக்கின்றன. அவைகள் எவ்விதத்திலும் பாதுகாக்கப்படவேண்டும் என்று அந்தப் பிராந்தியங்கள் நம் தமிழ் நாட்டுக்கு மாற்றப்பட்டபோது ஸ்டேட்ஸ் ரீ-ஆர்கனைஸேஷன் சட்டத்திலேயே காணப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவைப் பற்றி முடிவு செய்வதற்கு முன் திருவாங்கூர்-

கொச்சி மகாராஜாவின் அபிப்பிராயமும் கேட்டு கலக்கப்பட்டது. அவ்வாறு இந்த மசோதா இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவுக்கு கனம் அங்கத்தினர்கள் சில திருத்தங்கள், சில பிரேரணைகள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைப் பார்க்கும் அளவில் முக்கியமாக நான் சொல்வேன், இந்த மசோதா சிறிய மசோதா என்று சொல்வேன். அங்கே இருக்கிற அற நிலையங்கள் பாதுகாக்கப்படவேண்டும், கவனிக்கப்படவேண்டும். அங்கே முன்பு இருந்தது போல தேவஸ்வம் போர்டு ஏற்படவேண்டும். ஆனால் அந்த தேவஸ்வம் போர்டை நியமிக்கிற காலத்தில் எவ்வாறு அமைப்பது என்பது தான் நாம் யோசிக்கவேண்டிய விஷயம். தேவஸ்வம் போர்டு அந்த அற நிலையங்களை சரியான முறையில் நிர்வாகம் செய்து வரவேண்டும், அவர்களுடைய நிர்வாகத்தில் ஊழல் இருக்குமானால் அதைத் திருத்துவதற்கு கமிஷனருக்கு அதிகாரம் இருக்கவேண்டும், இவர் அதிகாரத்தையும் மேல்பார்வை செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து. இதற்கு முக்கியமான காரணம் நிர்வாகம் நல்ல முறையில் நடக்கவேண்டும் என்பது தான். ஆனால் கனம் அங்கத்தினர்கள் கொடுத்திருக்கிற திருத்தப் பிரேரணைகளைப் பார்க்கிறபோது இதில் தான் கருத்து வேற்றுமை தெரிகிறது. இன்னொன்று, அந்த தேவஸ்வம் போர்டை எவ்வாறு அமைப்பது என்பதுபற்றியது. முன்பு திருவாங்கூர்-கொச்சி ஸ்டேட்டில் அந்த தேவஸ்வம் போர்டு எவ்வாறு அமைக்கப்பட்டது என்றால் அதற்கென்று மூன்று அங்கத்தினர்கள். திருவிதாங்கூர்-கொச்சி மகாராஜா கூறுகிற ஒருவர் அங்கத்தினராக இருப்பது. திருவாங்கூர்-கொச்சி சட்டமன்றத்தில் உள்ள இந்து அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் ஒரு அங்கத்தினர். திருவாங்கூர்-கொச்சி அரசாங்கத்தின் மந்திரி சபை ஒருவரைத் தேர்ந்தெடுப்பது. ஆக இப்படி மூன்று வகையாக பொறுக்கப்பட்ட மூன்று அங்கத்தினர்கள் தேவஸ்வம் போர்டை நிர்வகித்து வந்தார்கள். இந்த மூன்று பேருக்கும்தான் எல்லா அதிகாரங்களும் கொடுக்கப்பட்டது. அவர்கள் பார்த்து எது வேண்டுமானாலும் செய்யலாம். நாமும் அந்தமாதிரி அமைப்பது சரியா? அதில் ஏதாவது தவறு நடந்தால் அதைக் கண்காணிப்பது எப்படி? ஆகவே தான் இதர பகுதியில் உள்ள அற நிலையங்களை எல்லாம் நிர்வாகம் செய்வதற்கு எந்த மாதிரியாக சட்டம் ஏற்படுத்தியிருக்கிறோமோ அது போலவே ஏற்படுத்த வேண்டும் என்கிற கொள்கை அடிப்படையில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அற நிலைய பாதுகாப்புச் சட்டத்தில் கமிஷனர் இருக்கிறார். அந்தச் சட்டத்தில் அவருக்கு முக்கியமான இடம் இருக்கிறது. எல்லா நிர்வாகங்களையும் மேற்பார்வை செய்வது அவர் தான். அவருக்கு மேலே அரசாங்கம் மேற்பார்வை செய்யவும் அதிகாரம் இருக்கிறது. ஆகவே இந்த மசோதாவிலும் தேவஸ்வம் போர்டு நிர்வாகம் செய்யும் கமிஷனருக்கு மேல்பார்வை செய்ய அதிகாரம் இருக்கிறது. தவறு நடந்

தால் அரசாங்கமும் தலையிடுவதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆகவே இந்த இரண்டும் இதில் சேர்ந்திருக்கிறது. இந்த இரண்டையும் பற்றித்தான் கமிஷனர் எதற்கு, இவருக்கு மேல்பார்வை செய்யவும், அரசாங்கம் தலையிட அதிகாரமும் இருக்கவேண்டிய அவசியம் என்ன என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மற்றொரு கருத்து என்னவென்றால் தேவஸ்வம் போர்டு எவ்வாறு அமைவது என்பது தான். இந்த மசோதாவின்படி தேவஸ்வம் போர்டில் மூன்று பேர்கள் இருப்பார்கள். இரண்டு அங்கத்தினர்கள், ஒரு பிரிசிடென்டு. திருவாங்கூர்-கொச்சி மகாராஜா ஒரு அங்கத்தினரைத் தேர்ந்தெடுப்பார். ஒரு அங்கத்தினரையும், ஒரு பிரிசிடென்டையும் அரசாங்கம் தேர்ந்தெடுக்கும். செயலாளராக எக்சிக்யூடிவ் ஆபிசராக ஒருவர் இருப்பார். திருவாங்கூர்-கொச்சி மகாராஜாவுக்கு அந்த அற நிலையம் சம்பந்தமாக என்ன என்ன உரிமைகள் இருக்கின்றனவோ அவ்வளவும் இதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் தலையிடவில்லை. சில கனம் அங்கத்தினர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் பழைய திருவாங்கூர்-கொச்சி சட்டத்தில் உள்ளது போலவே அரசாங்கம் எதற்காக ஒரு அங்கத்தினரை நியமிக்க வேண்டும், சட்டசபை இந்து அங்கத்தினர்களால் அந்த ஒரு அங்கத்தினர் ஏன் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்பது. அதுவும் கன்னியாகுமரி, செங்கோட்டை பகுதியில் இருந்து வந்திருக்கும் இந்து அங்கத்தினர்களால்தான் அந்த ஒரு அங்கத்தினர் தேர்தெடுக்கப்பட வேண்டும் என்பது. இன்னொரு கருத்து அந்தப் பிரிவு வேண்டாம், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அங்கத்தினர் யாராக இருந்தாலும் பரவாயில்லை, அவர்கள் எல்லோராலும் ஒரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது. இந்த இரண்டையும் அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. இந்த மசோதா தயாரிக்கப்பட்டபோதே இதைப் பரிசீலனை செய்துவிட்டோம். மற்ற மாவட்டங்களில் இருப்பது போலவே இங்கும் அமையவேண்டியது அவசியம். ஆனால் மகாராஜாவுக்கு உள்ள உரிமையில் தலையிடவில்லை.

இன்னொன்று, ஸ்டேட்ஸ்-ரீ-ஆர்கனைசேஷன் சட்டப்படி இப்போது அதனுடைய நிர்வாகம் கமிஷனரிடம் இருந்துகொண்டிருக்கிறது. பிரிவு 122-படி கமிஷனர்தான் அந்த நிர்வாகத்தை இப்போது நடத்திக்கொண்டிருக்கிறார். அதை நீக்கி தேவஸ்வம் போர்டை அமைக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் நோக்கம். இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பலாம் என்றால் அவ்வாறு அனுப்புவதனால் வீணான காலதாமதம்தான் ஆகும். அது வரையில் கமிஷனரிடமேதான் அந்த அதிகாரம் இருக்கும். அந்த அறநிலையங்களைப் பொறுத்த மட்டில் நாம் 13½ லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். ராஜ்ய புனர் அமைப்புச் சட்டத்தின்படி ஒப்புக்கொண்டது அது. மற்ற அறநிலையங்களுக்கு வருமானம் வருவது போலவே இதற்கும் வந்துகொண்டிருக்கிறது. இவ்வளவு தொகை இருக்கிறபோது அதைச் சரியாக நிர்வாகம் செய்ய

வேண்டும், ஒழுங்காக அந்த நிர்வாகம் அமையவேண்டும் என்கிற பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த ஆவல் இருக்கிறது. (ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் : தேவஸ்வம் போர்டு என்று பெயர் இருக்கவேண்டுமா ?) இருக்கவேண்டுமா, கூடாதா என்பதைப் பொறுத்த வரையில் என் அபிப்பிராயம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஏற்கனவேயே அந்தப் பகுதியில இருந்து வந்தவர்கள் என்ன என்னவோ மாற்றப்படுவதாகச் சொல்கிறார்கள். தனியாக அதற்கென்று ஒரு போர்டு அமைக்கிறோம். அதனுடைய பெயரே அதற்கு இருந்துவிடட்டும் என்றுதான் தேவஸ்வம் என்பது அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை மாற்றவேண்டாம் என்பது என் அபிப்பிராயம். இதுவரையில் அங்கத்தினர்கள் கொடுத்திருக்கிற திருத்த நோட்டீஸ்கள் எல்லாவற்றையும் பார்த்தால் பொதுவாக இரண்டு கருத்துக்களில் தான் வேற்றுமை இருக்கிறது. ஆகையால் இதற்காக பொறுக்குக் கமிட்டிக்குப் போகவேண்டியது இல்லை. ஆகவே, இப்போதே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிற என்னுடைய மோஷனை பிரேரேபிக்கிறேன். யாவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Motion moved :

"That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959) be taken into consideration."

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

"That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959, be referred to a Select Committee consisting of . . . Members of this House with instructions to report to the Assembly before the next session."

SRI K. SATTANATHA KARAYALAR : I second the amendment.

DEPUTY SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

SRI T. S. RAMASWAMY கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இப்போது இந்தச் சட்டசபையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்தோம். ஸ்டேட் ரீ-ஆர்கானிசேஷன் ஆக்ட் நடைமுறையில் வந்தவுடன், பின்னால் கூடிய முதல் சட்டசபை பேரவைக் கூட்டத்திலே இந்த மசோதா கொண்டு வரப்படும் என்று. ஏனென்று கேட்டால் ஏற்கனவே அங்கே ஒரு சட்டம் இருந்தது. கன்னியாகுமரி, செங்கோட்டையைப் பொறுத்த அளவில் அங்குள்ள அறநிலையங்களைப் பாதுகாப்பதற்

காக தனியாக ஒரு சட்டம் இருந்தது. அங்குள்ள ஆலயங்கள் மிகவும் சரித்திரப் பிரசித்தி பெற்றவை. அங்குள்ள மக்களும், மன்னரும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அதற்கு எழுதி வைத்திருக்கிறார்கள். நல்ல முறையில் பூசை முதலிய ஆராதனைகள் எல்லாம் நடந்து வந்துகொண்டிருக்கக்கூடிய ஆலயங்கள் அவை. மன்னர் காலத்தில் மன்றோ அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் அதை எடுத்துக்கொண்ட காலத்தில் மக்கள் கிளர்ச்சி பெரும் அளவில் நடந்தது. ஆனால் சுதந்திரம் கிடைத்த பின்னால்தான் எங்கள் கிளர்ச்சி வெற்றி பெற்றது. சட்டசபையில் உள்ள இந்து அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினர், மன்னரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினர், மந்திரி சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அங்கத்தினர் ஆக மூன்று பேர்
10-30 a.m. கள் சேர்ந்து அதை நிர்வாகம் செய்து வந்தார்கள். சகல உரிமைகளும் அதிகாரங்களும் இந்த மூன்று பேர்களுக்குத்தான் இருந்தது. அதுவும் இப்போது நமது அரசாங்கம் செக்குலர் ஸ்டேட், மதக்கலப்பற்றது என்று இயங்கிக்கொண்டிருக்கிறபோது அந்த ஆலயங்களின் நிர்வாகத்தை முன்போலவே நடப்பதற்கு வழி செய்யாமல் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது சரியாக எனக்குத் தோன்றவில்லை. அரசியல் சட்டத்திற்கு உகந்த ஒரு சட்டமே அங்கே அமலில் இருந்துவந்திருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி, ஹிந்து மதத்தின் பிரதிநிதிகள் ஒரு அடானமஸ் போர்டாக இயங்க வேண்டும். அவர்கள்தான் ஹிந்து தேவாலயங்களில் எல்லாவற்றையும் நடத்தி வந்தனர். அத்தகைய போர்டு 1850-ல் வருஷத்திய திருவாங்கூர்-கொச்சி ஹிண்டு இன்ஸ்டிட்யூஷன்ஸ் ஆக்டின்படி இயங்கி வந்தது. 1956-ம் வருஷம் நவம்பர் முதல் தேதி அந்த ராஜ்யத்தில் சில பகுதிகள் சென்னை ராஜ்யத்துடன் சேர்ந்தன. இதற்கிடையில் நடந்த வேறொரு விஷயத்தையும் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். அந்த தேவாலயங்களையெல்லாம் மன்றோ சர்க்காருக்கு எடுத்துக்கொண்டபோது அவைகளின் சொத்துக்களும் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டன. எனவே, இந்த தேவாலயங்கள் பரிபாலனம் சர்க்காரின் தனி இலாகாவின்கீழ் நடந்துவந்தது. இந்த நிலை அரசியல் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன் இருந்து வந்தது. அரசியல் சட்டம் இயற்றப்பட்டபோது இந்த தேவாலயங்களுக்கென ஒரு தனி இலாகா இருக்க முடியாது என்று கருதப்பட்டதால் இவைகளுக்கென ஒரு தனி போர்டு அமைப்பதற்கான சட்டம் 1950-ம் வருடம் இயற்றப்பட்டது. மக்கள் தேவாலயங்களுக்குக் கொடுத்திருந்த சொத்துக்களை அரசாங்கம் அதற்கு முன் எடுத்துக்கொண்டிருந்ததால் அப்போது தேவாலயங்களுக்கென 60 லட்ச ரூபாயை தேவஸ்வம் பண்ட் என்று அரசாங்கத்தார் ஒதுக்கினார்கள். அந்தத் தொகை 'சார்ஜ்ட் ரெவின்யூ' ஆகியது. 1956-ம் வருஷம் கன்னியாகுமரியும் அதைச் சார்ந்த பகுதிகளும் இந்த ராஜ்யத்திற்கு வந்தபோது அந்தத் தொகையிலிருந்து 13 லட்ச ரூபாயை சார்ஜ்ட் அக்கௌண்டில் நான் முன்பு குறிப்பிட்ட பகுதி

17th December 1959] [Sri T. S. Ramaswamy]

களிலுள்ள தேவாலயங்களுக்காக ஒதுக்கினார்கள். இப்போது நாம் செய்ய வேண்டியது மிகவும் இலகுவான ஒன்று தான். இந்த தேவாலயங்களுக்கென, முன்பு இவைகளுக்கென இருந்த போர்டைப் போலவே ஒரு போர்டை முந்தைய போர்டுக்கு இருந்த அதே அதிகாரங்களுடன் அமைத்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அது மக்களுக்குத் திருப்தியாக இருக்கும். அத்தகைய ஏற்பாட்டை நாம் செய்திருந்தால் நாம் மதவிஷயங்களில் தலையிடாதவர்களாக இருந்திருப்போம். அத்தகைய ஏற்பாடு ஜனநாயகப் பண்புக்கு உகந்ததாக இருக்கும். ஆனால் இந்த அரசாங்கத்தார் ஏனோ அவ்வாறு செய்யாமல் இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கும் மூன்று வருஷங்கள் தாமதம் செய்தார்கள். இந்த மசோதா கூட ஒரு வாரம் முன்னதாகத் தான் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த தேவாலய விஷயங்களில் திருவாங்கூர்-கொச்சி மகாராஜாவின் (ரூலரின்) பிரத்தியேக உரிமைகள் அரசியல் சட்டத்தில் பல திருத்தங்கள் செய்யப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அவருக்கு இந்த பிரத்தியேக உரிமைகள் அளிக்கப்பட்டிருப்பதற்குக், காரணம் என்னவென்றால், திருவாங்கூர்-கொச்சி சமஸ்தானம் இந்திய தேசத்தோடு இணைந்தபோது அந்த மகாராஜா சில உரிமைகளைக் கோரினார். தேவாலயங்கள் சம்பந்தமாக அவருக்கு அளிக்கப்பட்டுள்ள சில பிரத்யேக உரிமைகள் அந்தக் 'கவனெண்ட்'-இல் சில முக்கியமான பகுதிகள். நமது கனம் அமைச்சரைப் போல அவரும் மிகவும் பக்திமான். தேவாலயங்களில் அவருக்கு மிகுந்த அக்கறை உண்டு. எனவே அவர் தமக்கு தேவாலயங்கள் சம்பந்தமாக சில உரிமைகள் வேண்டும் என்று கேட்டார்கள். அதன்படி அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளின்படி, அவரால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இந்த போர்டில் அங்கம் வகிக்கவேண்டும். இந்த உரிமைகள் அரசியல் சட்டத்தில் ஷரத்து 290எ-ல் இடம் பெற்றிருக்கின்றன என்று நினைக்கிறேன். இந்த மசோதாவில், இந்த உரிமைகளும் அங்குள்ள தேவாலயங்கள் பால் அங்குள்ள ஹிந்து மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளும் எவ்வளவு தூரம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்றும், இந்த மசோதாவில் உள்ள ஷரத்துக்கள் ஜனநாயகத்திற்கு உகந்தவையாக இருக்கின்றனவா என்றும் பார்ப்போம். இந்த மசோதாவை இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது அந்த போர்டுக்குள்ள அதிகாரங்கள் எல்லாம் பறிபோய்விட்டன என்பது தெரிகிறது. அங்கே முன்பு இருந்த சட்டப்படி, அங்குள்ள போர்டு தான் கமிஷனரை நியமிக்க வேண்டும்; அதுதான் டெபுடி கமிஷனர்களையும், அஸிஸ்டென்ட் கமிஷனர்களையும் நியமிக்க வேண்டும்; அந்த போர்டு தான் பட்ஜெட்டுகளைத் தயாரிக்க வேண்டும். அது ஏதாவது தவறுகள் செய்தால் அதற்கெதிராக கோர்டில் வழக்குத் தொடரப்படலாமே தவிர, மற்றபடி அது அடானமஸ் பாடியாக இருந்தது. இப்போது இந்த மசோதாவில் அது பெயரளவில்

போர்டாக இருக்கிறது; அதற்கு இருந்த அதிகாரங்கள் பறிக்கப் பட்டுவிட்டன. சூத்திரதாரிகள் இருக்கிறார்கள். கண்ட்ரோல் சூபர்விஷன் முதலியவைகளுக்கான அதிகாரங்கள் எல்லாம் இந்த மசோதாவில் கமிஷனருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. மசோதாப்படி, கமிஷனர்தான் டைரக்ட் பண்ண வேண்டும், சூபர்வைஸ் பண்ண வேண்டும். கமிஷனரை டைரக்ட் பண்ண வேண்டியவர்கள், சர்க்கார். எதற்காக இந்த நாடகம்? கமிஷனரை வைத்தே எல்லாவற்றையும் நடத்திக்கொண்டு போகலாமே! எதற்காக இதற்கு 2 பேர், அதற்கு 3 பேர்? போர்டின் ப்ரெஸிடெண்டைக் கூட அரசாங்கமே நியமித்து விடலாம்! இது எவ்வளவு தூரம் அரசியல் சட்டத்திற்கு உகந்ததாக இருக்கிறது, ஜனநாயகப் பண்புக்கு உகந்ததாக இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. நான் ஒன்றை மட்டும் இந்த சபையில் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாங்கள் பல வருஷங்களாக, தலைமுறை தலைமுறையாக, தேவாலயங்களை ஒரு முறைப்படி நடத்தி வருகிறோம். அங்குள்ள கோவில்களை ஒரு முறைப்படி, அங்குள்ள மக்களின் பண்புக்கு உகந்தபடி, ஜனநாயக முறைப்படி, அந்த ஊர்க்காரர்கள் தாங்களாகவே நடத்திவந்தார்கள். அந்த ஊர்களில் இவ்வாறு கோவில்களை நடத்தி வருபவர்களை பிடாகைக்காரர்கள் என்று சொல்வார்கள். சுசீந்திரம் கோவிலைச் சேர்ந்த பிடாகைக்காரர்கள் இவைகளை நடத்திவந்தார்கள். இந்த அரசாங்கத்தார், தாங்கள் மகாத்மா காந்தியின் தத்துவங்களைக் கடைப்பிடிப்பதாகக் கூறுகிறார்கள். செண்ட்ரலைஸேஷன் கூடாது, அதிகாரங்கள் குவிந்தால் அது கரப்ஷனுக்கு இடம் கொடுக்கும் என்று போதிக்கும் அரசாங்கத்தார் எதற்காக இந்த அதிகாரங்களையெல்லாம் குவிக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்கிறேன். அங்கே அதிகாரங்கள் பரவலாக இருக்கும் முறையில் அங்குள்ள மக்கள் ஒரு முறையை உருவாக்கியிருக்கிறார்கள். They have evolved a fool proof and eficient system. Why should we attempt to disturb it?

அந்த முறை அரசியல் சட்டத்தின் ஷரத்துகளுக்குப் புறம்பானது அல்ல. அது அரசியல் சட்டத்தின் ஷரத்துக்களுக்கு உட்பட்டது தான். இந்த மசோதாவிலுள்ள ஷரத்துக்கள் அரசியல் சட்டத்திற்கு முரணானவையாக இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். இவை கோர்டில் எவ்வளவு தூரம் நிற்கப்போகின்றனவோ, எனக்குத் தெரியவில்லை. இந்த மசோதாவிலுள்ள ஷரத்துகளை நன்றாகப் படித்துப் பரிசீலிக்கக் கூட எங்களுக்கு நேரம் இல்லை. அதற்குக் கூட போதிய அவகாசம் கொடுக்கப்படவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே மசோதாவின் பிரதிகள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டன. திருவாங்கூர்-கொச்சி ஹிண்டு ரிலிஜியஸ் இன்ஸ்டிட்யூஷன்ஸ் ஆக்டின் பிரதி கூட லெஜிஸ்லேசர் லைப்ரரியில் இல்லை. அதை ஸெக்ஷனிலிருந்து தான் கேட்டுப் பெறவேண்டும். இந்த மசோதாவில் உள்ள ஷரத்துக்கள் அரசியல் சட்டத்திற்கு முரணானவையாக இல்லாமல் இருக்கின்றனவா, அந்தப் பகுதிகளிலுள்ள இந்து மதத்தினரின் உரிமைகள் இந்த மசோதாவில் பாது

17th December 1959] [Sri T. S. Ramaswamy]

காக்கப்பட்டிருக்கின்றனவா, இதிலுள்ள ஷரத்துக்கள் ஜனநாயக முறைக்கு உகந்தவையாக இருக்கின்றனவா என்றெல்லாம் பரிசீலனை செய்வதன் பொருட்டு இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டும். இந்த சபையின் பொறுப்பு வாய்ந்த அங்கத்தினர்களையும் சட்டம் தெரிந்த அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு இதை அனுப்ப வேண்டும். அரசாங்கத்தார் இவ்வளவு காலம் காத்திருந்தார்கள். இப்போது ஏன் அவசரப்பட வேண்டும்? கமிஷனர் ஒரு ஸூபர்-மடாதிபதி என்று யாரோ சொன்னார்களாம்? இவ்வளவு நாட்கள் அவருடைய கண்ட்ரோலில் இருந்த நாங்கள் இன்னும் கொஞ்ச காலம் இருக்கத் தயாராயிருக்கிறோம். அங்குள்ள மக்கள் ஜாதி, மத வித்தியாசம் பாராட்டாமல் ஒரு முறையை வகுத்திருக்கிறார்கள். அந்த முறை எல்லோருக்கும் திருப்திகரமாக இருக்கும் போது அதை ஏன் குலைக்க வேண்டும்? அந்த முறையை பரீட்சார்த்தமாகக்கூட மாற்ற வேண்டாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அதை மாற்ற வேண்டுமானால் அதற்கு தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா இல்லையா என்று செலக்ட் கமிட்டியில் நன்றாக விவாதிக்க முடியும். எனவே இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, சர்க்கார் தரப்பில் இருந்து இந்த மசோதா கொண்டு வந்ததற்கு ஒரு முக்கிய காரணம், நம்முடைய மாநிலம் முழுவதுக்கும் ஒன்றுபட்ட ஒரு சட்டம் அவசியம் என்பதாகும். நீண்ட நெடுநாட்களாகப் பல இடங்களில் பல்வேறு சட்டங்கள் வைத்துக் கொண்டிருப்பது சரியல்ல, என்ற காரணத்தால் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். இந்த மசோதா இந்த மாதம் 9-ம் தேதி பிரசுரமாகி இன்று சட்டசபையில் நிறைவேற இருக்கிறது. மூன்று ஆண்டுகள் காத்திருந்த சர்க்கார் இன்னும் 3 மாதங்களுக்குக் காத்திருக்கத் தயங்குகிறது. என்னைப் பொறுத்தமட்டில் ஒரு மாநிலத்திலே பல சட்டங்கள் நிலவவேண்டுமென்று நினைப்பவன் அல்ல. பல சந்தர்ப்பங்களில் இதைப் பற்றி ஊர்ஜிதப்படுத்தி இந்தச் சபையிலும் சொல்லியிருக்கிறேன். சட்டங்களை ஒன்றுபடுத்தவேண்டியது அவசியமானது. இந்தச் சட்டத்தை ஒன்றுபடுத்த வேண்டியதும் அவசியந்தான். எனக்கு முன்பு பேசிய நண்பர் சொன்னது போல் செங்கோட்டை பகுதியிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் தற்சமயம் நிலவி இருக்கும் ஸிஸ்டம் "பூல் ப்ரூவ்" ஸிஸ்டம் அல்ல. என்னைப் பொறுத்த வரை, செங்கோட்டை பகுதியிலும் இதர பகுதியிலும் இருக்கக்கூடிய தேவாலயங்களில் பூஜைக் கிரமங்கள் நடக்கவேண்டிய நியமப்படி நடப்பதில்லை. சர்க்காரிலிருந்து கொடுக்கக்கூடிய 13½ லட்சம் போதுமானதல்ல என்று வாதிக்கக் கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கக்கூடிய குறிப்பிட்ட நபர்கள்

கையில் இருந்து நல்ல முறையில் நடப்பதில்லை என்ற குறைபாடு சொல்லப்படுதலும் உண்டு. மற்றும் எந்த முறையில் கட்டுப்பாடும், மேற்பார்வையும் அவசியம் என்பதைப் பரிசீலனை செய்யவேண்டியது அவசியம். ஆயினும் இதை இவ்வளவு அவசரமாகக் கொண்டு வரவேண்டிய காரணம் புரியவில்லை. இத்தனை காலம் பொறுத்திருந்தவர்கள் இன்னும் 2, 3 மாதங்கள் பொறுத்திருந்து ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களில் என்னென்ன பாதகம் இருக்கிறதோ அதையெல்லாம் பரிசீலித்து நீக்கி இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

ஒரு காலத்தில் கோயில் நிலங்கள் முழுவதையும் சர்க்கார் எடுத்த ஒரே காரணத்திற்காக இந்தப் பணத்தைச் சர்க்கார் கஜானாவில் இருந்து கொடுக்கிறோம். இந்த நிலங்கள் சர்க்கார் வசத்தில் இருக்கிறது. சர்க்காருக்கு வருமானம் வரக்கூடிய வருமானத்தில் இருந்து ஒரு சில பகுதிகளைக் கோயில் நிர்வாகத்திற்குக் கொடுக்கிறோம். ஆனால் கோயில் நிர்வாகத்திற்காகக் கொடுக்கக்கூடிய பணம், தேவசம் சட்டம் வந்து, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் வந்து எந்தெந்த முறையிலே செலவழிக்கப் படவேண்டுமென்று விதித்தோம். அதே முறையிலே இந்த வட்டாரத்திலும் மக்கள் பயன்படுத்தக்கூடிய முறையில், சாதாரண மக்கள் இந்து மத தர்மத்தில் நம்பிக்கை இழக்காத நிலைமையை ஏற்படுத்தவேண்டியது அவசியம். அங்கிருக்கக்கூடிய சட்டமும், இங்கிருக்கக்கூடிய சட்டமும் இணைக்கக்கூடிய முறையில் ஆராய வேண்டியது அவசியம். ஒரு சில மாதங்கள் பொறுத்து, பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி, தனிப்பட்ட மகா ராஜாக்களுக்கு—திருவாங்கூர் மகாராஜாவுக்கு—எந்த அளவுக்கு உரிமை இருக்க வேண்டுமென்பதையும் பரிசீலனை செய்யவேண்டியது அவசியம். ஏற்கனவே இருக்கக்கூடிய உரிமைகள் அப்படியே பாதுகாக்கப் படவேண்டுமா ? அவர்கள் மேலும் இந்த உரிமைகளைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்று நினைப்பதாகத் தெரியவில்லை. அது போன்ற உரிமைகளை அவர்களாக விட்டுக்கொடுக்க முடியாமல் இருந்தால் அதையும் வாங்கி சட்டத்தை நல்ல முறையில் மாற்றியமைக்க முடியும். அதற்கு இரண்டு, மூன்று மாதங்கள் பொறுத்திருந்தாலும் பாதகம் இல்லை. ஆகவே, பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு அதன் முடிவுப்படி சட்டத்தை நிறைவேற்றினால் நல்ல முறையில் சட்டம் அமையும். அந்தக் காலதாமதத்தினால் ஒரு குறையும் ஏற்பட்டுவிடாது என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI A. CHIDAMBARANATHA NADAR : உப தலைவர் அவர்களே, இன்று நம் முன்னிலையிலே பரிசீலனைக்காக வைத்திருக்கப் படும் இந்த அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஒரு சில திருத்தங்களோடு வரவேற்கிறேன். எங்கள் அற நிலையங்களைப் பற்றிப் பேசும்போது அதற்கு ஒரு சரித்திரம் உண்டு என்பதைத் தெரிவித்

17th December 1959] [Sri A. Chidambaranatha Nadar]

துக்கொள்ளுகிறேன். நான் இன்று ஹிந்துவாக இருக்கிறேன் என்று சொன்னால் அந்தப் பொறுப்பு எங்கள் நாட்டில் திவானாக இருந்த சர் சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள்தான் என்று சொல்லுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். ஸ்ரீமான் டி. எஸ். ராமசாமி பிள்ளையவர்கள் சொன்னது மாதிரி கர்னல் மன்றோ எங்கள் நாட்டில் வெள்ளையர்களின் ஏஜெண்டாக இருந்த காலத்தில், உமையபார்வதி ராணியாக இருந்த காலத்தில், சர். சி. பி. அவர்கள் திவானாக இருந்த காலத்தில் எங்கள் அற நிலையங்களுக்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்ததோ அத்தனையும் சர்க்கார் எடுத்துக்கொண்டு அதன் பின்னர் செலவு மாத்திரம் கொடுக்கப் பட்ட காலம் இருந்தது. அங்கிருந்த ஹிந்துக்களுடைய மனம் சர்க்கார் இவற்றையெல்லாம் எடுத்துக் கொள்ளுகிறார்களே என்ற எண்ணத்தில் இருந்தது. அப்போது சில சமுதாயங்கள் ஆலயத்தில் நுழைய முடியாத நிலைமை இருந்தது. அது ஸ்ரீமான் ராமசாமிப் பிள்ளை அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஸ்ரீமான் சட்டநாத கரையாளர் அவர்களுக்கும் தெரியும். நானோ, ஸ்ரீமான் சட்டநாத கரையாளர் அவர்களோ 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கோயிலுக்குள் போக முடியாது. நாடார்கள் போகக்கூடாது. கரையாளர் போகக்கூடாது. மந்திரி ஐயா கக்கனுடைய சமுதாயத்தினரும் போகக்கூடாது. 1929-ல் என்று நினைக்கிறேன். நான் அப்போது பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் கன்னியாகுமரி அறநிலையத்திற்குப் போகும் நிலைமை ஏற்பட்டது. விழா அழகாக நடந்து கொண்டேயிருக்கிறது. என்னுடன் படித்த மாணவன் ஒருவன் "நாடான் போகிறான்" என்று சொன்னான். இதைக் கேட்டவுடன் நான் ஓட்டம் பிடித்தேன். ஏனென்றால், எங்கள் நாட்டில் ஒரு பழக்கம் உண்டு. கலசம் கழிப்பு என்று ஒரு பழக்கம் உண்டு. தேவஸ்தான விதிகளுக்கு முரண்பாடாக எந்த ஹிந்து நடக்கிறானோ அவனைப் பிடித்து மொட்டையடித்து, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி ரோட்டிலே ஊர்வலமாக அழைத்துச் செல்லுவார்கள். அந்த ஏற்பாடு அந்த நாளையில் இருந்தது. அந்த நிலையில் இருந்த சமுதாயத்தினர் இதுவரை ஏன் ஹிந்துக்களாக இருந்தார்கள் என்று பார்த்தால் அது நீங்களும் நாங்களும் செய்த யோகந்தான் என்று சொல்லவேண்டும். அந்த நாட்டில் பெருவாரியாக இருப்பவர்கள் ஹிந்து நாடார்களும், ஹரிஜனங்களுந்தான். இந்த இரண்டு சமுதாயத்தினருக்கும் எவ்விதமான உரிமையும் கிடையாது. இந்த நிலையில் ஒரு தேவசம் போர்டு 1950-ல் வந்தது. அது வந்த உடனே அங்கிருந்த ஹிந்துக்கள் எல்லோரும் ஆலயத்திற்குள் செல்ல சர். சி. பி. ராமசாமி அய்யர் அவர்கள் ஆலயத்தை திறந்து வைத்தார்கள். அவர்களுக்கு என்றென்றும் ஆண்டவனுக்கு அடுத்தபடியாக நன்றி. அதற்கு அடுத்தபடியாக ஸ்ரீ . . .

DEPUY SPEAKER : May I know how all these are relevant to the Bill?

[17th December 1959

SRI A. CHIDAMBARANATHA NADAR : என்றால் அதைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சீக்கிரம் சொல்லி முடித்து விடுகிறேன். நாங்கள் புதியதாகச் சேர்ந்தவர்கள் நிலைமையை உங்களிடம் சொல்லவேண்டும் என்ற ஏக நோக்கத்துடன் தான் சொல்லுகிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. நமது மாநில அமைச்சர் என்னைவிட பெரிய பக்திமான். நமது மாநிலத்தில் இருக்கும் அறநிலைய பாதுகாப்புக் கமிஷனர் என்னைவிட பக்திமான். ஒரு வேளை நான் மாதத்திற்கு ஒரு தடவை திருநீர் வைத்துக்கொள்வேனே என்னவோ. ஆனால் எனக்கு பக்தி இல்லாமல் இல்லை. எனக்கு பக்தி உண்டு. என்னைவிட நமது அறநிலைய பாதுகாப்பு கமிஷனர் அவர்களுக்கும் பக்தி உண்டு. அந்த நிலையிலே நமது மாநில அமைச்சர் அவர்களின் பிரசங்கத்தைக் கேட்டால் அது நன்றாகத்தான் இருக்கும். கேட்பதற்கு மிக இனிமையாகத்தான் இருக்கும். நான் எதைச் சொன்னாலும், அவர் மனதில் இருக்கும் முடிவையொட்டித்தான் இந்தச் சட்டத்தை பாஸ் செய்யப் போகிறோம். எனக்கு முன் பேசிய ஸ்ரீமான் சட்டநாத கரையாளர் அவர்களும், ஸ்ரீமான் டி. எஸ். ராமசுவாமி அவர்களும் சொன்ன பிரகாரம் இந்த மசோதாவை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி, அதை நல்ல முறையில் பரிசீலனை செய்து, எங்கள் மாவட்டத்தில் இருக்கிற, எங்கள் செங்கோட்டைப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு திருப்தியாகும் சந்தர்ப்பம் வரை இதை வைத்து பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு நமது அசெம்பளியில் கொண்டு வந்தால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Deputy Speaker, while considering this sacred Bill which deals with the religious rights and feelings of a few lakhs of people of my district in respect of about 460 temples, I have to tell the Government that it really pains me that this Bill at this juncture does not satisfy the wishes and feelings of the people of the district. So far as I am concerned I am of the firm belief and opinion that our Government should as far as possible devise only a democratic machinery or set-up to administer the temples whenever they find that an occasion has arisen for the purpose. As far as possible, temples and religion should be in the hands of the people and they should have the right to have a voice in the management of the temples or the temple properties. If any crisis arises and if the Government feel that in certain cases the people are unable to run the temples properly, then, Sir, perhaps there may be justification for the Government to interfere with the religious rights of the people of the State. It is from that angle that I have to say that this Bill is only an attempt on the part of the Government to take over the temples under their direct control. There would have been no harm if a Devaswom Board as was constituted by the Travancore-Cochin State under the Devaswom Act was created under this Bill. If the Government have found that the Devaswom Board failed to

manage the temples properly, then they could bring in a Bill of this type, and tell the people that they have not risen to that level to manage the temples properly in a democratic manner. An opportunity was given to the people by the Travancore-Cochin Act and an autonomous Devaswom Board was formed. It was managed properly. There was no complaint from the people and from the Government. Therefore, I ask, why not such a Board be constituted in this State also? Why not the people of the district be given a chance to continue the Board as it existed previously? If the Government find that the people have not come up to their expectation, then they can think of a Bill of this kind.

So far as the institution which the present Bill seeks to create is concerned, it is only an enlarged Area Committee. The members of the Board are either nominated by the Ruler of Travancore or nominated by the Government here. Even the president is a nominee of the Government. To administer the temples in a democratic way, it would have been really good if the Government constituted a Board consisting of a member nominated by the Ruler of Travancore, another nominated by the Government and the third elected by both Houses of the Legislature. Then, out of the three members so selected, one could be elected as president. I think that will satisfy the people.

SRI A. CHIDAMBARANATHA NADAR: On a point of information, Sir.

எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து ஒரு ஆள் எடுக்கவேண்டுமா அல்லது ஹிந்து மெம்பர்கள் எடுக்கவேண்டுமா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

SRI T. T. DANIEL: The election may be by the Hindu members of both Houses. That will suit the wishes of the Hindu population. Then, coming to the powers of the Board, it is stated that the Board will prepare the annual budget and that the Commissioner will have power to alter or modify the budget. It would be more or less a budget to be framed by the Commissioner and not a budget of the Board. I would suggest that the power to frame the budget may be given to the Board once and for all. If any defalcation is made, action can be taken by the Government. The budget may be framed by the Devaswom Board subject to the approval of the Government. The Devaswom Commissioner and the Assistant Commissioner have got more powers than the actual members of the Board. It is said that the Devaswom Commissioner can delegate his powers to the Deputy Commissioner. This provision is unnecessary. Even regarding payment to servants, the Board has no control over the servants of the Board. Their right

has been interfered with even in that respect. I want to know whether their powers cannot be enlarged and whether the Board cannot be constituted on the lines of the Devaswom Board constituted under the previous Act.

Clause 19 says:

"The Devaswom Fund constituted for the incorporated Devaswoms shall consist of—

(i) the sum of thirteen lakhs and fifty thousand rupees mentioned in Article 290-A of the Constitution of India as payable to the Devaswom Fund in the State of Madras and the share of the Devaswom Surplus Fund mentioned in sub- section (2) of section 112 of the States Reorganisation Act, 1956 (Central Act 37 of 1956), as transferred to the said Devaswom Fund;"

11-00 a.m. I wish to bring to the notice of the Government that out of the surplus of these funds the Kerala Government have to pay us nearly Rs. 30 lakhs. There is so much of delay on the part of that Government to hand over that to this Government. We are anxious that this Government should take steps to recover the amount from the Kerala Government. They should get not only the surplus from the Kerala Government but also interest on the amount due from 1st November 1956.

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இதைப் பொருக்குக் கமிட்டிக்குப் பரிசிலனைக்கு விடவேண்டும் என்ற தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று சொல்லிக் கொள்ளுகிறேன். முன்பே அதை விளக்கிக் கூறினேன். கனம் அங்கத்தினர்கள் அவ்வளவுக்குப் பிறகும் இரண்டு மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அடிப்படையானது, இந்த மசோதாவின்படி, ஒரு போர்ட், தேவஸ்வம் போர்டு இருக்கும்; ஆனால் அது ஆடானமஸ் போர்டு இல்லை. அது தான் வித்தியாசம். கமிஷனரின் மேற்பார்வை இருக்கிறது; அரசாங்கத்தின் மேற்பார்வை இருக்கிறது. மற்ற மாவட்டங்களுக்குச் செய்திருக்கும், அறநிலைய பாதுகாப்புச் சட்டம் இந்த சபையில் சமீபத்தில்தான் நிறைவேற்றியிருக்கிறது. அந்த சட்டப்படி, இங்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதே தவிர, தனியாக ஒரு முறை வேண்டாம், என்றுதான் அதை ஆடானமஸ் ஆக வைக்கவில்லை. போர்டு இருந்து நிர்வாகம் நடத்தும். ஆனால், அதற்கு கமிஷனர் மேற்பார்வை இருக்கும், அதற்கும் மேல் அரசாங்கத்தின் மேற்பார்வை இருக்கும். மற்ற மாவட்டங்களிலே, ஏரியா கமிட்டிகள் இருக்கின்றன; அஸிஸ்டண்ட் கமிஷனர், டெபுடி கமிஷனர் இவர்கள் இருக்கிறார்கள். இங்கே அதெல்லாம் இல்லை. கமிஷனர் தன் அதிகாரத்தை டெலிகேட் பண்ணலாம் என்றிருக்கிறது; அதுதானே தவிர, வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை.

17th December 1959] [Sri M. Bhaktavatsalam]

இதிலே, டிசென்ட்ரலைஸ் ஆகவேண்டும், குவியல் ஆக இருக்கிறது, டிசென்ரலைஸ் என்று போடவேண்டும் என்றார்கள். அந்த வார்த்தைகளுக்கு அவசியமில்லை. தேவஸ்வம் போர்டு பரிபாலனம் செய்கிறது. அது நமது அறநிலைய பாதுகாப்பு சட்டத்தை ஒட்டியிருக்கிறது. அதெல்லாம் வேண்டாம் என்றால், சட்டமே வேண்டாம் என்று சொல்லலாம். அவர்களே நிர்வகித்துக்கொண்டு போகலாம் இஷ்டப்படி. ஆடானமஸ் ஆக இருந்தால், அப்படி வைத்துவிட்டால், தவறுகள் செய்தாலும், பார்த்துக் கொண்டு தான் இருக்கவேண்டும. ஆண்டுதோறும் ரூ. 13;5 லட்சம் கொடுக்கப்படுகிறது, நிர்வாகம் நடக்கிறது. இந்த அறநிலையங்களில் தவறுதல்கள் ஏற்பட்டால், பார்த்துக்கொண்டு இருப்பது சரியில்லை. ஆகவேதான், அறநிலயப் பாதுகாப்பு சட்ட அடிப்படையில், ஆடானமஸ் ஆக்கவில்லை; கமிஷனரும், அரசாங்கமும் மேற்பார்வை பார்ப்பது என்று வைத்திருக்கிறோம். அதற்கும் மேற்கொண்டு இதை செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்ய என்ன இருக்கிறது? அந்த அடிப்படையை ஒத்துக்கொண்டால்,—ஒப்புக் கொள்கிறோம் அல்லது வேண்டாம் என்று சொல்லலாம்—செலக்ட் கமிட்டிக்குப் போகவேண்டிய அவசியம் என்ன? சிக்கல்கள் இருந்தால், செலக்ட் கமிட்டிக்குப் போகலாம், மறு பரிசீலனை செய்யலாம். அம்மாதிரி இங்கு ஒன்றும் இல்லை.

இது வரை அங்கத்தினர்கள் குறிப்பிட்டது, தேவஸ்வம் போர்டில் திருவாங்கூர் மகாராஜாவுக்கு அதிகாரம் வேண்டும் என்று. அது மசோதாவில் இருக்கிறது. மற்றொன்று அரசாங்கம் நியமிப்பது பற்றி, அதுவும் மசோதாவில் இருக்கிறது. வேற்றுமை என்னவென்றால், இன்னொரு அங்கத்தினரை அரசாங்கமே நியமிப்பது என்பது. ஒருவர் பிரசிடெண்டாகவும், மற்றவர் அங்கத்தினராகவும் நியமிக்கிறது என்று இருக்கிறது. முன்பு திருவாங்கூரில் இருந்தபோதும் அப்படித்தான். ஹிந்து அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்த கருத்தில் கூட, சம்பந்தப்பட்ட கன்யாகுமரி-செங்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர்களாலே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று ஒரு கருத்து. அம்மாதிரி ஹிந்து மெம்பர்களுக்கு ஒரு உரிமையா? ஹிந்து மெம்பர்கள்தான் ஹிந்துக்களுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிறார்களா? அப்படி யென்றால், மற்ற கிறிஸ்தவர்கள், மற்ற மதத்தைச் சேர்ந்தவர்கள் ஹிந்துக்களுக்கு பிரதிநிதிகள் அல்லவா? கடைசியாகப் பேசிய அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள், ஜில்லாவினுடைய உரிமை, ஜில்லா மக்களின் உரிமை பாதிக்கப்படுகிறது என்று. தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் இருக்கும்போது, அரசாங்கம் ஜில்லா உரிமைகளைப் பாதுகாக்கும்போது, ஜில்லா உரிமை பாதிக்கப்படுகிறது என்று சொல்வது விளங்கவில்லை.

இன்னொரு திருத்தம், கன்யாகுமரி-செங்கோட்டை பிராந்தியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஹிந்து மெம்பர்களால் போர்ட் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது. அவர்கள் எத்தனை பேர் இருப்பார்கள். அரசாங்க காபினட்டில் உள்ள

[Sri M. Bhaktavatsalam] [17th December 1959

ஹிந்துக்களைவிட குறைவாகத்தான் இருப்பார்கள். அப்படியெல்லாம் சட்டம் போடுவது திருப்திகரமாக இருக்காது. ஹிந்துக்கள் அல்லாதவர்கள் ஹிந்துக்களுக்கு பிரதிநிதிகள் அல்ல என்று சொல்ல முடியாது. ஆகவே, இப்பொழுது அரசாங்கம் நியமிப்பது என்பதற்கு பதிலாக வேறு செய்யவேண்டிய அவசியமில்லை. இதில் ஒன்றும் ஜனநாயகம் பாதிக்கப்படவில்லை. ஒன்று சொல்லுகிறேன். 1956, நவம்பரிலேயிருந்து கமிஷனரே தேவசுவம் போர்டாக இருந்து கவனிக்கிறார். தவறுதல் என்ன நடந்துவிட்டது? அபிவிருத்திகள்தான் ஏற்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய கனம் நிதி அமைச்சரவர்களும் நானும் 1956, நவம்பர் 1-ம் தேதி அங்கேயிருந்தோம். அன்றுதான் இணைக்கும் நாள். வழிகளிலே ஒரே இருட்டாக இருந்தது. கன்யாகுமரியிலே கடலிலே ஸ்நானம் செய்துவிட்டு செல்லலாம் என்று சென்றோம். இருட்டாக இருந்ததால் ஒரே கவலையாக இருந்தது. விளக்கு வெளிச்சமே கிடையாது. இப்பொழுது பார்த்தால் தெரியும் வித்தியாசம். பிரகாசமாக இருக்கிறது. யாத்திரிகர்கள் ஸ்நானம் செய்ய வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பிரயாணிகளுக்கு தங்க விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சுசீந்தரத்தைப் பார்த்தாலும் தெரியும். அங்கும் அபிவிருத்தி வேலைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. இதையெல்லாம் பார்த்தால் அங்கத்தினர்கள் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன என்று சொல்ல இடமே இல்லையென்பது தெரியும். ஆகவே, ஜில்லாவிலுள்ள மக்கள் தாங்கள்தான் தேர்ந்தெடுப்போம் என்று அபிப்பிராயம் கூறவில்லை. திருவாங்கூர் மகாராஜாவைப்பற்றி முன்பே சொன்னேன். அவர்களுக்கு அறநிலையங்கள் பரிபாலனத்தில் அக்கறை இருக்கிறது. அதைத் தெரிந்தே சொல்கிறேன். ஆகவே, அது நீடிக்கவேண்டும் என்று இங்கே இருக்கிறது. உரிமைக்கு ஒன்றும் குந்தகம் இல்லை. அதுதான் ஸ்டேட்ஸ் ரீஆர்கனைஸேஷன் காலத்திலேயே, கனம் ராமசாமி பிள்ளை கான்ஸ்டிடுஷன் ப்ரொவிஷனுக்கு முரணாக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். முக்கியமாக கவனிக்கப்படவேண்டியதில் உறுதி அளிக்கப்பட்டு திருவாங்கூர் மகாராஜா அவர்களின் உரிமைகள், பழக்கவழக்கங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு முரணாக ஒன்றும் இல்லை.

ஆடானமஸ் ஆக இருப்பதா, இல்லையா என்பது அடிப்படையான பிரச்சினை. அறநிலையப் பாதுகாப்பு சட்டத்திற்கு இணங்க இதைச் செய்திருக்கிறோம். செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்ய இதில் ஒன்றும் இல்லை. அவர்கள் அடிப்படையை மாற்றப் போவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதா அல்லது அரசாங்கமே நியமிப்பதா என்பதும் அடிப்படைப் பிரச்சினை. இதில் செலக்ட் கமிட்டி பார்த்து செய்ய வேண்டியதற்கு இடம் இல்லை. ஆகவே, இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு பரிசீலனைக்கு விடவேண்டும் என்ற பிரேரபணையை நான் எதிர்க்கிறேன்.

17th December 1959]

DEPUTY SPEAKER : Is the hon. Member withdrawing the amendment?

SRI T. S. RAMASWAMY : I am pressing the amendment, Sir.

DEPUTY SPEAKER : The question is :

" That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959 be referred to a Select Committee consisting of . . . Members of this House with instruction to report to the Assembly before the next session ".

The amendment was put and lost.

DEPUTY SPEAKER : The question is :

" That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959) be taken into consideration "

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

DEPUTY SPEAKER : The motion is :

" That clause 2 do stand part of the Bill."

SRI T. T. DANIEL : Sir, I move the amendment standing in my name, namely :

" *Omit* item (ii) ".

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY : Sir, I move the amendment standing in my name, namely :

" *For* item (ii), *substitute* the following :

means Commissioner of Devaswoms or Assistant Commissioner appointed under this Act. "

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI T. T. DANIEL: Sir, my amendment is to the effect that wherever the words 'Commissioner', 'Deputy Commissioner' or 'Assistant Commissioner' occur in the Bill they should be deleted. They can insert the word 'Government' in those places. Government can exercise control over the Board instead of the Commissioner, or the Deputy Commissioner or the Assistant Commissioner.

SRI A. CHIDAMBARANATHA NADAR: ஸார், நமது அற நிலைய பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், அந்த அடிப்படையில் நான் அவற்றை ஒத்துக்கொண்டு என்னுடைய திருத்தங்கள் அத்தனையும் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

SRI T. S. RAMASWAMY: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய திருத்தம் Commissioner or Assistant Commissioner என்பதற்குப் பதிலாக "Commissioner of Devaswoms or Assistant Commissioner appointed under this Act". என்று இருக்கிறது. ஒரு அடானமஸ் பாடியாக அமைந்தால் நல்லது, அப்படி இயங்கி வருவதற்கு இடம் இருக்கவேண்டும். கன்யாகுமரி மாவட்டத்தில் அடானமஸ் பாடியாக இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தத்தின் நோக்கம். அங்கு நியமிக்கக்கூடிய கமிஷனரோ அல்லது அஸிஸ்டெண்ட் கமிஷனரோ அவர் யாராக இருந்தாலும் சரி அவர் தனியாக இருக்கவேண்டும் அல்லது அவர் அந்த போர்டின் கீழ் இயங்கவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கமிஷனர் இல்லாமல் அரசாங்கம் நேராக கவனிக்க வேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு சாத்தியம் அல்ல. அற நிலைய பாதுகாப்புச் சட்டத்தை இயற்றும்போது இப்படிப்பட்ட கமிஷனர் வேண்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். அந்த நிலைமையில் இப்பொழுது இதை எதிர்ப்பதை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. ஆகவே இந்த திருத்தங்கள் அத்தனையும் நான் எதிர்க்கிறேன்.

The amendment of Sri T. T. Daniel was by leave withdrawn.

The amendment of Sri T. S. Ramaswamy was put and lost.

The Clause was put and carried.

Clause 3 was put and carried.

Clause 4.

DEPUTY SPEAKER: The motion is:

"That clause 4 do stand part of the Bill".

SRI T. T. DANIEL: Sir, I move the amendment standing in my name, namely:

In sub-clause (1), *for* the words ' one member . . . Ruler of Travancore, ' *substitute* the following :

" one member shall be nominated by the Government, another member by the Ruler of Travancore and the other member shall be elected by both the Houses of the Legislature. The members of the Board shall elect the President and the Secretary from among themselves ".

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY : Sir, I move the amendment standing in my name, namely :

For sub-clause (1), *substitute* the following :

" (1) The Board shall consist of the President and two other members, of whom, one shall be nominated by the Ruler of Travancore, one shall be elected by the Hindu Members of the Madras Legislature representing the transferred territory and the third shall be elected or nominated by the Hindu Members of the Madras Cabinet. The President of the Board will be elected from out of these three members."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : Is the hon. Member Chidambaranatha Nadar moving his amendment?

SRI A. CHIDAMBARANATHA NADAR : Sir, I am not moving any of the amendments given notice of by me.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI T. T. DANIEL : As the clause stands at present even the President of the Board if nominated by the Government I submit that the President should be selected by the Members of the Board as also the Secretary. Again, one member may be nominated by the Government and another elected by the members of both Houses.

SRI T. S. RAMASWAMY : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் டேனியல் அவர்கள் கொண்டு வந்த திருத்தத்தையாவது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன். அங்குள்ள கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் அங்குள்ள மக்கள் கொடுத்த சொத்துக்களில் அந்த பரிபாலனம் நடந்துகொண்டு வருகிறது. பல அரசியல் காரணமாக பல மாறுதல்கள் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறபடியால் அரசாங்கம் கொடுக்க வேண்டிய நிலை எற்பட்டிருக்கிறது. அங்குள்ள தேவஸ்தானங்களை எடுத்து நடத்த வேண்டிய பொறுப்பு, அந்தக் கடமை அங்குள்ள இந்து மக்களைச் சார்ந்ததாகும். ஆகையால் ஆடானமஸ் பாடி அல்லது போர்டாகவோ அதைப்போலவே அங்கே ஏற்படுத்த வேண்டும் என்பது ஒன்று.

இரண்டாவதாக அந்த போர்டை அமைக்கும்போது அந்த ராஜப்பிரமுகர் அதாவது திருவாங்கூர் ராஜாவினுடைய பிரதிநிதி ஒருவர் இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது பொருத்தமானது என்று இதற்குமுன் கனம் அமைச்சர் குறிப்பிட்டார். ராஜபிரமுகருடைய உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அந்த உரிமை எவ்வளவு தூரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் இதற்குமுன் இருந்த சட்டப்படி அங்குள்ள ராஜப்பிரமுகருடைய பிரதிநிதி அந்த போர்டுக்கு பிரசிடெண்டாக இருக்கமுடியும். இப்பொழுதுள்ள மசோதாவின் ஷரத்துப்படி பார்த்தால், அதாவது நாலாவது விதியைப் பார்த்தால் அவர்கள் பிரசிடெண்டாக வரவே முடியாது. இரண்டு அங்கத்தினர்களை சென்னை அரசாங்கம் நியமிக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் அவருடைய பிரதிநிதி பிரசிடெண்டாக இருக்க முடியாது. அந்த அளவில் அவருடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி வேறு விதிகள் வரும்போது குறிப்பிடுகிறேன். இதைப் பொறுத்த அளவில் நிச்சயமாக சொல்லலாம் அவருடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று. இதற்கு முன்னால் பேசியபோது அங்குள்ள இந்து அங்கத்தினர்கள் பிரதிநிதி, இங்கேயுள்ள அரசாங்கத்திலுள்ள

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவர் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்திற்கே அவர் மாறுபட்டுப் பேசுவதாகத் தெரிகிறது. அவர் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தைப் பார்த்தாலும் ராஜப்பிரமுகருடைய பிரதிநிதி பிரசிடெண்டாக வர முடியாது என்று தோன்றுகிறது. அதனால் திருவாங்கூர் மகாராஜாவினுடைய உரிமை எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை.

SRI T. S. RAMASWAMY : திருவாங்கூர் ராஜாவின் பிரதிநிதி பிரசிடெண்டாக இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. நான் சொல்வது அவர் பிரசிடெண்டாக வருவதற்கு இதற்கு தடை இல்லாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது தடை ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது அவர் பிரசிடெண்டாக வரமுடியாது என்று இருக்கிற நிலைமையில் அவருடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட உரிமை அரசியல் சட்டத்தில் இடம் பெற்று அதிஷ்டவசமாகவோ அல்லது துரதிருஷ்ட வசமாகவோ அது அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய உரிமைகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. அதனால் இந்த ஷரத்து நீதி மன்றத்திற்குப் போனால் என்னவாகுமோ ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சந்தேகம் வேண்டாம். திருவாங்கூர் மகாராஜாவை கலந்துகொண்டுதான் இப்படி கொண்டு வரப்பட்டிருக்கிறது.

17th December 1959]

SRI T. S. RAMASWAMY : அவர் சம்மதித்து விட்டார் என்றால் சந்தோஷம்தான். அது எவ்வளவு தூரம், திருவாங்கூர் அரசாங்க மகாராஜாவுக்கும் இந்தியா அரசாங்கத்திற்கும் ஏற்பட்ட கவனெண்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். கவனெண்டில் அப்பொழுது இருந்தது இப் பொழுது இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். நான் இப்படிச் சொல்லுவதால் அந்த ராஜ்யத்திற்கு மன்னர் ஆட்சி வேண்டும் என்று வாதிப்பதாக எண்ணிக்கொள்ளக்கூடாது. இந்த ஷரத்து நீதி மன்றத்தில் எவ்வளவு தூரம் நிற்கும் என்பதைப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்த அளவில் அது நிச்சயமாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கருதுவேன். அது மட்டு மல்ல இதற்கு முன்னால் இந்த முறை உருவாகிக்கொண்டிருக்கும் போது இதை ஏன் திணிக்க வேண்டும் என்பதைப்பற்றி எனக்குத் தெரியவில்லை. அறநிலய சட்டம் இப்பொழுது உருவாகி இருக்கிறது. ஆகவே என்னுடைய திருத்தத்தை அல்லது கனம் டேனியல் அவர்களுடைய திருத்தத்தையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, நான் முன்பு குறிப்பிட்டபடி பார்த்தால், அவர் களுடைய திருத்தத்திலே 'the President of the Board will be elected from out of these three members.' என்று கொடுத்திருக் கிறார். திருவாங்கூர்-கொச்சி மகாராஜாதான் பிரசிடெண்டைப் போடவேண்டுமென்று கனம் அங்கத்தினர் கேட்கவில்லை. ஆனால் கனம் அங்கத்தினர் அந்தப் பகுதியைச் சேர்ந்த சட்டசபை இந்து அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கொடுத்திருக்கிறார். கனம் டேனியல் இந்தச் சட்டசபை அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று சொல்கிறார். இந்த இரண்டையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. முன்பு இருந்ததை இப்போது மாற்றுவதால் தவறு ஒன்றும் இல்லை. அரசாங்கம் நியமித்தால்தான் சரியான முறையில் இருக்கும் என்று நான் முன்பே விளக்கிக் கூறியிருக் கிறேன். ஆகையால் இந்த இரண்டு திருத்தங்களையும் நான் எதிர்க்கின்றேன்.

SRI T. T. DANIEL : Sir, with regard to the Area Committee we have formed for the management of other temples, the Members of the Area Committee alone have got the right to select the Chairman of the Committee. Should not that power at least be given to the Members of the Board?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I may remind the Hon. Member that according to the provisions of the Act that has been enacted, the President of the Area Committee is to be nominated by the Government.

The amendment of Sri T. T. Daniel was, by leave, withdrawn.
The amendment of Sri T. S. Ramaswamy was put and lost,
The Clause was put and carried
Clause 5 was put and carried.

Clause 6.

DEPUTY SPEAKER : The motion is—

" That Clause 6 do stand part of the Bill. "

SRI T. T. DANIEL : Mr. Deputy Speaker, Sir, I move—

" *Add* the following after item (v) to Clause 6,

' (vi) does not profess the Hindu religion;

(vii) has an adverse interest in the Devaswom properties;

(viii) conducts any legal proceedings against the Devaswoms;

(ix) is a member of any recognised political party '."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI T. T. DANIEL : Sir, the object of my amendment to Clause 6 is only to add some more disqualifications to the member nominated to the Board. The clause as it stands contains certain disqualifications which have been numbered and according to me those disqualifications are not sufficient and some more qualifications have to be added. Hence my amendment runs as follows :—

" *Add* the following after item (v) to Clause 6,

" (vi) does not profess the Hindu religion;

(vii) has an adverse interest in the Devaswom properties;

(viii) conducts any legal proceedings against the Devaswoms; and

(ix) is a member of any recognised political party ".'

According to this amendment, a member of the Board who does not profess the Hindu religion, who has an adverse interest in the Devaswom properties, who conducts any legal proceedings against the Devaswoms and who is a member of any recognised political party, should be disqualified from being a member of the Board."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவில் இருக்கிற டெபினிஷனே போதும் என்று நான் சொல்வேன். அரசாங்கம் நியமிக்கிறது இந்த மசோதாவின்படி. எல்லாவற்றையும் பார்த்துத்தான் அரசாங்கம் நியமிக்கும். மேலும் கனம் அங்கத்தினருடைய திருத்தங்கள்படி பார்த்தால் அதற்கு அவசியமே இல்லை. ஆறு, ஏழு, எட்டு எல்லாம் முன்பே இருக்கிறது. ஒன்பதில்தான் புதிதாக ஒரு கருத்தைத்

தெரிவிக்கிறார். அதாவது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் அங்கத்தினர் என்றால் அதை எப்படிக் கண்டு பிடிப்பது? அங்கத்தினராக இருக்கலாம். இல்லாமல் இருக்கலாம். இந்த நூதனமான கருத்தை யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகையால் இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கின்றேன்.

The amendment of Sri T. T. Daniel was, by leave, withdrawn.

The clause was put and carried.

Clause 7 was put and carried.

Clause 8.

DEPUTY SPEAKER : The motion is—

'That clause 8 do stand part of the Bill.'

SRI T. T. DANIEL : Sir, I move—

For the clause *substitute* the following :

"8. The Government may *suo motu* or an application from a person professing the Hindu Religion by order remove from office a nominated member of the Board on the ground of—

(i) being guilty of misappropriation of the Devaswom Fund;

(ii) having acquired adverse interest to the Devaswom properties;

(iii) conducting any legal proceeding against the Devaswom;

(iv) if the Board cannot function due to his conduct or his wilful absence from attending the meeting of the Board; and

(v) misbehaviour or incapacity;

Provided no such order shall be passed unless such Member has had a reasonable opportunity of making his representations to Government against such removal.

Explanation.—If a member does any act which is intended, or is likely, to endanger communal harmony or which tends to promote feelings of enmity or hatred between different classes of citizens of India, he shall for the purpose of this section be deemed guilty of misbehaviour."

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

For the existing clause, *substitute* the following :

"8. The High Court may on application from a person professing Hindu Religion by order remove from office any member of the Board on the ground of misbehaviour or incapacity :

Provided that no such order shall be passed unless such member has had a reasonable opportunity of making his representations against such removal".

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

SRI T. T. DANIEL : Mr. Deputy Speaker, Sir, the object of my amendments is only this. According to the clause as it stands now, a member who has been nominated can be removed only on the ground of misbehaviour or incapacity. In the Explanation it is stated—

'If a member does any act which is intended or is likely to endanger communal harmony or which tends to promote feelings of enmity or hatred between different classes of citizens of India/in the State of Madras, he shall, for the purpose of this section, be deemed to be guilty of misbehaviour.'

Only if a member is guilty of misbehaviour, then only the Government have got power to remove him. But if a member has committed misappropriation of the Devaswom Board, it appears, according to the clause as it stands now, that the Government have no right to remove him from the Board. Therefore, I have given this amendment and I hope the Hon. Minister will kindly consider it.

SRI T. S. RAMASWAMY : என்னுடைய திருத்தம் இந்த போர்டினுடைய அங்கத்தினர்களை மாற்றும் அதிகாரம் கவர்மெண்டுக்கு இருக்கக்கூடாது, ஹைக்கோர்ட்டுக்கு இருக்கவேண்டும் என்பதுதான். போர்டு அடானமஸ் பாடியாக இருக்கவேண்டும். அதனுடைய நிர்வாகத்தில் அரசாங்கத்தினுடைய தலையீடு இல்லாமல் இருக்கவேண்டும். கவர்மெண்டில் இன்றையதினம் இந்துக்கள் அதிகமாக இருக்கலாம். நாளையதினம் யார் வரப்போகிறார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. அதுபோலவே இன்று ஆஸ்திகர்கள் அதிகாரிகளாக இருக்கலாம். நாளையதினம் நாஸ்திகர்கள் வரமாட்டார்கள் என்று சொல்ல முடியாது. அறநிலையத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற கொள்கை உடையவர்கள் வரலாம். அந்த எண்ணம் இல்லாதவர்களும் வரலாம். ஆகையால்தான் இன்றையதினமே புத்திசாலியான முறையில் நம்முடைய அரசியல் சட்டத்தில் அரசாங்கத்தை எப்படி மத சார்பற்றதாக வைத்துக்கொள்வது என்று செய்திருக்கிறோமோ அப்படியே அறநிலையங்களிலும் அரசாங்கம் தலையிடாது என்கிற கொள்கையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். அரசாங்கத்தின் தலையீடு, அதிகார வர்க்கத்தின் தலையீடு, அறநிலைய பாதுகாப்பு நிலையங்களில் இல்லாமல் இருந்தால் தேவாலயங்களின் நிர்வாகம் திருப்பணி எல்லாம் நன்றாக இருக்க முடியும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். ஆகையால் இந்தத் திருத்தத்தைப் பிரேரிக்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ டேனியல் கொண்டுவந்த திருத்தத்தைப் பற்றி நான் முன்பே குறிப்பிட்டேன். அவர் கொடுத்துள்ளவைகள்

17th December 1959] [Sri M. Bhaktavatsalam]

எல்லாம் இதில் இருக்கின்றன. இன்னும் அதிகமான புது பிரிவுகளும், விளக்கமும் அவசியமில்லை. கனம் டி. எஸ். ராமசாமி அவர்கள் ஹைக்கோர்ட்டுக்கு எல்லாவற்றையும் விடவேண்டும் என்கிறார். நாம் முன்பே நிறைவேற்றியிருக்கிற அறநிலைய பாதுகாப்புச் சட்டத்தில் அரசாங்கம் தலையிடக்கூடிய சில பகுதிகள் இருக்கிறது. சிலவற்றுக்கு ஹைக்கோர்ட்டுக்கும் அதிகாரம் இருக்கிறது. எல்லாவற்றையும் ஹைக்கோர்ட்டினிடத்திலேயே விடவேண்டும் என்கிற அவசியம் இல்லை. வேலை துரிதமாக நடக்காது. ஆகையால் அரசாங்கம் இதை கவனிக்க வேண்டுமென்று போடப்பட்டிருக்கிறது. முன்பு ஒரு திருத்தத்திலே கனம் அங்கத்தினர் கமிஷனர்கூட வேண்டாம், எல்லாம் அரசாங்கத்தின் மேற்பார்வையிலேயே போடவேண்டும் என்று சொன்னவர் இப்போது ஏன் இப்படிச் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகையால் இந்தக் திருத்தங்கள் இரண்டையும் எதிர்க்கிறேன்.

The amendment of Sri T. T. Daniel was, by leave, withdrawn.

The amendment of Sri T. S. Ramaswamy was put and lost.

Clause 8 was put and carried.

Clause 9.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 9 do stand part of the Bill."

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

" In sub-clause (1), (2) and (4) *for* the word ' nominate ' wherever it occurs, *substitute* the word ' elected '."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI T. S. RAMASWAMY : இதற்கு முன்னால் நான் கொண்டு வந்த திருத்தத்தைப் போன்றதுதான் இது. ஆகையால் இதைப் பற்றியும் நான் அதிகம் பேசவேண்டியது இல்லை.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I am not accepting the amendment.

The amendment of Sri T. S. Ramaswamy was put and lost.

The clause was put and carried.

Clauses 10 and 11 were put and carried.

Clause 12.

DEPUTY SPEAKER : The motion is :

" That clause 12 do stand part of the Bill."

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

"In sub-clause (2), omit the words 'subect to properly administered'."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI T. S. RAMASWAMY : *12-வது விதியைப் பொறுத்த ளவில், இது ஒரு முக்கியமான விதி.*

11-30 a.m. All rights, authority and jurisdiction belonging to or exercised by the Travancore Devaswom Board immediately before the 1st day of November 1956, in respect of Devaswoms shall vest and be exercised by the Board.

என்றிருக்கிறது. திருவாங்கூர் தேவஸ்வம் போர்டில் என்ன வெல்லாம் அதிகாரங்கள் இருந்தனவோ, என்னென்ன உரிமைகள் இருந்தனவோ அவைகள் எல்லாம் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது, ஸெல்ப் காண்ட்ரடிக்டரியாக இருக்கிறது. அந்த அதிகாரங்கள் இல்லை, அவைகள் எடுக்கப்பட்டு விட்டன. அந்த உரிமைகளும் இப்பொழுது கிடையாது. இருந்த போதிலும் அந்த அத்தாரிட்டி இருக்கிறது என்று நம்மை நாமே என் ஏமாற்றிக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. அங்குள்ள உரிமை, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களால் வருகிறது. அங்கு, ஆட்டானமஸ் பாடியாக இருந்தது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *முதல் பாராவில்*

All rights, authority and jurisdiction belonging to or exercised by the Travancore Devaswom Board immediately before 1st day of November 1956 in respect of Devaswoms shall vest in and be exercised by the Board *in accordance with the provisions of this Act.*

என்றிருக்கிறது.

SRI T. S. RAMASWAMY : *முதலாவது, எல்லா உரிமைகளும் இருக்கிறது என்று சொல்லிவிட்டு அதற்குப் பிறகு இந்தச் சட்டப் படி அவர்கள் செயல்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறது. திருவாங்கூர் தேவஸ்வம் போர்டின் அதிகாரம் இந்தச் சட்டபடி இருக்கிறதா இல்லையா என்பது எல்லோருக்கும் தெரியும், பட்டவர்த்தனமாக. சர்க்காருக்கும் தெரியும், மற்ற அங்கத்தினர்களுக்கும் தெரியும். அங்கு, அது ஆட்டானமஸ் பாடியாக இருந்தது. அரசாங்கத்தால் அந்த அங்கத்தினர்களை மாற்ற முடியாது. அதன்கீழ்தான் கமிஷனர் மற்ற சிப்பந்திகள் எல்லோரும் இருந்தார்கள். அவர்களை மாற்றுவதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது. ஹைக்கோர்ட்டைத் தவிர, கான்ஸ் டிட்யூஷன்படியுள்ள பாதுகாப்பு இருக்கிறது என்று தெரிவிக்கப்*

பட்டது. இதிலுள்ள ஒரே ஒரு பாதுகாப்பு ரூலர் ஆப் ட்ருவன்கூரைப் பொறுத்தளவில் இருக்கிறது. அதற்கும் வரம்பு இருக்கிறது. அதிலுள்ள அங்கத்தினர்களை, யாரையும் மாற்றுவதற்குள்ள அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. கமிஷனருக்குக் கூட ஆட்டானமஸ் பாடியாக இருந்தபோதுள்ள அதிகாரத்திற்கும் இப்பொழுதுள்ள அதிகாரத்திற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது.

Subject to general powers of superintendence, control and revision by the Commissioner and such superintendence and control by the Commissioner shall include the power to issue directions which may be deemed necessary to ensure that the Devaswoms are properly administered.

இதில் தொக்கி நிற்பது, தேவஸ்வங்களை நடத்துவதில் பிரதிநிதிகளைவிட கமிஷனருக்குத்தான் அதிக அக்கரையிருப்பதாக இதில் தொக்கி நிற்கிறது. அதை மறுக்கிறேன். அந்த கமிஷனரிடம் எனக்கு மதிப்பு உண்டு. அது வேறு விஷயம். ஜனநாயக முறைப்படி பிரதிநிதிகளைக் கொண்ட போர்டைப் பார்த்து என் பயப்படவேண்டும். கமிஷனருக்கு கண்ட்ரோல், ரிவிஷன் போன்ற பவர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. காபினெட்டின் மேல் கண்ட்ரோல் பிரதம காரியதரிசிக்கு இருந்தால் அது எப்படியிருக்குமோ, அவர் காபினெட்டில் வேலைகளை சூப்பர்வைஸ் செய்தால் அது எப்படியிருக்குமோ அதேபோல் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு போர்டின் மேல் கமிஷனருக்கு சூப்பர்வைஸ் செய்வதற்குள்ள அதிகாரம் இருக்கிறதென்றால் அது யுக்திக்கு உகந்ததல்ல.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உதவி சபாநாயகர் அவர்களே, முன்பே இதைப் பற்றி சொன்னேன். இது ஆட்டானமஸ் பாடியா இல்லையா என்பதல்ல பிரச்னை. மற்ற அறநிலையங்களின் விஷயத்தில் எப்படி சட்டம் செய்திருக்கிறோமோ அதே போல் இதற்கும் செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, இதை எதிர்க்கிறேன்.

The amendment was put and lost.

Clause 12 was put and carried.

Clauses 13 to 15 were put and carried.

Clause 16.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 16 do stand part of the Bill.'

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

Add at the end the following words :

"including the Commissioner of Devaswoms, Kanyakumari district."

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI T. S. RAMASWAMY : எனது திருத்தம், கமிஷனரையும் சேர்க்கவேண்டும் என்பது. போர்டின் கீழ் கமிஷனர் இருக்க வேண்டும். அவர் ஒரு எக்ஸிக்யூட்டிவ் ஆபீசராக இருக்க வேண்டுமென்ற கருத்தோடு கொண்டு வந்தேன். அவர் ஒரு எலெக்டட் போர்டுக்குமேல் இருக்கக்கூடாது. இன்டயரக்ட் தேர்தல் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இப்பொழுது நிறைவேற்றியிருக்கின்ற விதிகளைப் பார்த்தால் அரசாங்கத்திலிருந்து நியமனம் செய்யக் கூடியவர்கள் போர்டில் வருவார்கள். அவர்களுக்கு மேல் கமிஷனர் இருக்க வேண்டுமா? இந்த போர்ட் ஒரு ஆட்டானமஸ் பாடியாக இருக்க வேண்டும். கமிஷனர் அந்த போர்டின் அதிகாரத்திற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : 'Including the Commissioner of Devaswoms, Kanyakumari district" என்று சட்டம் செய்வதற்கில்லை. ஆகவே, இதை எதிர்க்கிறேன்.

The amendment of Sri T. S. Ramaswamy was, by leave, withdrawn.

The clause was put and carried.

Clauses 17 and 18 were put and carried.

Clause 19.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 19 do stand part of the Bill."

SRI T. T. DANIEL : Sir, I move—

"In item (1) *after* the words 'Devaswom surplus fund' *insert* the words 'and interest thereon'."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are now before the House for discussion.

SRI T. T. DANIEL : The object of my amendment is this. In (i) it is said as follows :—

"(i) the sum of thirteen lakhs and fifty thousand rupees mentioned in Article 290-A of the Constitution of India as payable to the Devaswom Fund in the State of Madras and the share of the Devaswom Surplus Fund mentioned in sub-section (2) of section 112 of the States Reorganisation Act, 1956 (Central Act XXXVII of 1956), as transferred to the said Devaswom Fund."

I would suggest to hon. Members that our Government is entitled to only to 1/3rd share of the Devaswom Surplus Fund prior to the date of integration. That I understand comes to Rs. 31 lakhs. We should not only get that amount but also the interest on the same from the date of integration up to the date when it is handed over to this State. Hence, I want to include the words "and interest thereon".

17th December 1959]

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : டானியல் அவர்கள் இந்த தேவஸ்வம் சர்ப்ளஸ் பண்டைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இது, கேரள அரசாங்கமும் சென்னை அரசாங்கமும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டிய விஷயம். ரீ-ஆர்கனேசேஷன் சட்டப் படி இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் கணக்குகள் பற்றி இரு அரசாங்கங்களும் சேர்ந்து முடிவு செய்யவேண்டும். இரண்டு அரசாங்கங்களும் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்றால் மத்திய அரசாங்கம் அதற்கு தீர்ப்புக் கொடுக்க வேண்டும். அதுதான் முறை. ஆகவே, இந்தச் சட்டத்தில் வட்டியோடு சேர்த்து வர வேண்டுமென்று போடுவது சரியல்ல. அவர்கள் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது என்றால் அது வாங்கப்படும். அதுபற்றிப் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தில் இண்டரஸ்ட்டோடு வாங்கவேண்டுமென்று போடவேண்டியது அவசியமில்லை என்று சொல்லிக்கொண்டு கனம் அங்கத்தினர் இந்தத் திருத்தத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The amendment of Sri T. T. Daniel was, by leave, withdrawn.

The clause was put and carried.

Clause 20.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 20 do stand part of the Bill."

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"(i) in sub-clause (1) *omit* the brackets and figure '(1)'; and

(ii) *omit* sub-clause (2)".

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

In sub-clause (1), *omit* the words "and approved by the Commissioner" and for the last sentence, *substitute* the following :

"The Devaswom Surplus Fund shall be administered by the Board".

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : I put the Government amendment to the vote of the House. The question is—

(i) in sub-clause (1), *omit* the brackets and figure "(1)"; and

(ii) *omit* sub-clause (2).

The amendment was put and carried.

The amendment of Sri T. S. Ramaswamy was put and lost.

The clause, as amended, was put and carried.

Clauses 21 and 22 were put and carried.

Clause 23.

DEPUTY SPEAKER : The motion is—

" That clause 23 do stand part of the Bill."

SRI T. T. DANIEL : Sir, I move—

" (i) In sub-clause (1), *for* the word ' Commissioner ' *substitute* the word ' Government '.

(ii) In sub-clause (3), *omit* the words ' Assistant Commissioners . . . to the '.

(iii) In sub-clause (4), *for* the words ' Assistant Commissioner, Kanyakumari ' *substitute* the word ' President '. "

DEPUTY SPEAKER : The amendment falls through for want of a seconder.

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

" In sub-clauses (1), (2), (3 and (4) *for* the word ' Commissioner', wherever it occurs *substitute* the words ' Commissioner of Devaswoms '. "

The amendment was duly seconded.

The amendment was put and lost.

The clause was put and carried.

Clauses 24, 25 and 26 were put and carried.

Clause 27.

DEPUTY SPEAKER : The motion is :

" That clause 27 do stand part of the Bill."

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

" In sub-clause (1), *for* the words ' Board ' and ' Commissioner ' *substitute* the words ' Commissioner of Devaswoms ' and ' Board ' respectively. "

The amendment was duly seconded.

The amendment was put and lost.

The clause was put and carried.

Clauses 28, 29 and 30 were put and carried.

Clause 31.

DEPUTY SPEAKER : The motion is :

" That clause 31 do stand part of the Bill."

17th December 1959]

SRI T. S. RAMASWAMY : Sir, I move—

" In the clause *for* the words ' by the Commissioner ' *substitute* the words ' prescribed by the Government '. "

The amendment was duly seconded.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am not accepting the amendment, Sir.

The amendment was put and lost.

The clause was put and carried.

Clauses 32 to 38 were put and carried.

Schedules I, II and III were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959), as amended be passed."

DEPUTY SPEAKER : Motion moved :—

" That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959), as amended be passed.

The motion is before the House for discussion.

SRI T. S. RAMASWAMY : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் கூடுதலாக பேசுவதற்கு ஒன்றுமில்லை. சென்னை ராஜ்யத்திலிருந்து அறநிலைய பாதுகாப்பு மசோதாவை அங்கும் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தோடு அரசாங்கம் இந்த மசோதாவை கொண்டு வந்து அதை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். கன்னியாகுமரியைப் பொறுத்த அளவில் இதற்கு முன்னால் அங்கு உருவாக்கியிருந்த அமைப்பு அப்படியே இருக்க வேண்டு என்பதற்காக அந்தப் பகுதியில் இருந்து வந்திருக்கின்ற அங்கத்தினர்களாகிய நாங்கள் அனைவரும் கட்சி பேதம் இல்லாமல், ஜாதி பாகுபாடு இல்லாமல், எந்தவிதமான வித்தியாசமும் இல்லாமல், இந்த மசோதாவில் ஒவ்வொரு ஷரத்தையும் பரிசீலனை செய்து பார்த்து, ஒவ்வொன்றுக்கும் விரிவான திருத்தத்தை கொடுத்திருந்தோம். ஆனால் அவைகளில் ஒன்றுகூட அங்கிகரிக்கப்படவில்லை என்றிருந்த போதிலும்கூட, இப்போதுள்ள முறைப்படி அங்குள்ள அதிகாரிகளின் கையில்தான் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றிருந்தாலும்கூட, இவைகள் எல்லாம் எவ்வாறு அங்கு அமுல் செய்யப்பட போகின்றன என்பதைப் பொறுத்துத்தான் இந்த மசோதாவின் வெற்றி தோல்விகள் அமைந்திருக்கும் என்பதை நான் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். இதை மனதில் வைத்துக்கொண்டு அங்குள்ள இந்து மக்களின் உரிமை, அவர்களுடைய அதிகாரம் இவைகள் எல்லாம் சீரிய முறையில் பாதுகாக்கப்பட வேண்டும், அங்குள்ள

அறநிலையங்கள் எல்லாம் சீரிய முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே முன்னால் அதிகமான அதிகாரங்கள், உரிமைகள் இவைகள் எல்லாம் பெற்றிருந்தவர்கள், இந்த மசோதாவின் காரணமாக அவர்களின் ஜனநாயக உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டிருக்கின்றனவோ என்று எண்ணுகிற நிலைமையில் இதை அமுல் நடத்தவேண்டும் என்று அரசாங்கத்தினிடத்தில் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதா நீண்டகால பரிசீலனைக்குப்பின் தான் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அதில் எல்லா பிரச்னைகளைப்பற்றியும் விவாதிக்கப்பட்டது. அதனால்தான் கனம் அங்கத்தினர்கள் கொடுத்திருந்த திருத்தங்களை ஏற்றுக் கொள்ள முடியாமல் போய்விட்டது. இதைப்பற்றி பல கருத்துக்களை கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். நான் ஒரு காரியத்தை மட்டும் உறுதி கூறுகிறேன். அங்குள்ள அற நிலையங்கள் எல்லாம் சீராக நடைபெற வேண்டும் என்கின்ற கருத்தோடு தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. இதைப்பற்றி நாம் கவனிக்கும் போது "அதிகாரம், உரிமை" என்றெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு பேசுவது சரியல்ல என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அங்குள்ள அற நிலையங்கள், கோவில் எல்லாம் பொது நிலையங்கள்தான். அவைகள் எல்லாம் சரியான முறையில் நடைபெறுவதற்கு நாம் எல்லோரும் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக கன்னியாகுமரி பகுதியிலுள்ள அற நிலையங்கள் எல்லாம் பல வகைகளில் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன என்பதை நான் முன்பே குறிப்பிட்டேன். அவைகளுடைய பரிபாலனத்தை மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்தப் பரிபாலனம் 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியில் இருந்ததைவிட இன்னும் சீராக இருக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகத்தான், இந்த மசோதாவை இங்கே கொண்டுவருவதில் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டது. இந்த விஷயத்தில் அதிகாரங்களையும் உரிமைகளையுமே பற்றி எண்ணிக்கொண்டிருக்க வேண்டாம் என்று கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். போர்டின் பொறுப்பேற்றுள்ள அங்கத்தினர்கள் ஆலயங்கள் பரிபாலனத்தில் சீரிய முறையில் கவனம் செலுத்தினால் அங்குள்ள அகில இந்தியப் பிரசித்திபெற்ற ஆலயங்களை பரிபாலனம் மிகவும் நன்றாக நடக்கும். ஆலயங்களைக் கண்காணித்து வருபவர்களின் நலம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், இந்தச் சட்டத்தின் மூலம் அமைக்கப்படும் போர்டு செயல்படும் என்ற நம்பிக்கையுடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

17th December 1959]

DEPUTY SPEAKER : The question is :—

"That the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959 (L.A. Bill No. 25 of 1959), as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

(2) THE MADRAS SLUM IMPROVEMENT (ACQUISITION OF LAND) AMENDMENT BILL, 1959*.

THE HON. SRI V. RAMIAH : Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959 and move—

"That the Bill be taken into consideration."

The Statement of Objects and Reasons sets out the purpose of the Bill and the need for it. The Madras Slum Improvement (Acquisition of Land) Act 1954 was enacted with the main object of acquiring lands covered by slums on payment of reasonable compensation related to the annual income from the land and superstructure. The intention was that the land should be available at reasonable price for slum improvement and clearance. Under Section 6 of the Madras Slum Improvement (Acquisition of Land) Act, the amount payable as compensation in respect of any land acquired under the Act shall be an amount equal to twelve times the net average annual income actually derived from such land during the period of five consecutive years immediately preceding the date of publication of the notice referred to in sub-section (2) of section (3). In the actual working of the Act, it has been found that, in a number of cases, the compensation worked out on the basis of the principle laid down in the Act, far exceeds the compensation that would be payable if the land were acquired under the Land Acquisition Act. In other words, the rate of compensation at twelve times was found to be unreasonably excessive and also more than that payable under the Land Acquisition Act. The very purpose for which the Act was enacted is therefore defeated. The Amendment Bill seeks to remove this anomaly by providing for payment of compensation at five times the net average annual income or the compensation payable under the Land Acquisition Act, 1894, whichever is less. Five times the net average annual income will be a fair basis. Even during the discussions of the main Bill in this House, in 1954, some members wanted to reduce the compensation to five times the net average annual income. The Government of India have also since provided the same basis of compensation, viz., five times the net average annual income in their Slum Areas (Improvement and Clearance) Act, 1956. With a view to provide against the contingency of even this five times exceeding the market value in some cases, the Bill provides for limiting the maximum compensation to the market value under the Land Acquisition Act.

* Published in the *Fort St.George Gazette*, dated 2nd December 1959.

[Sri V. Ramiah] [17th December 1959

The Government of India have requested the State Governments to enact Slum Clearance legislation on the lines of the Central Act. The question of enacting a comprehensive Slum Clearance Bill is separately under consideration, and a Bill will be introduced in the Legislature in due course. It will take some time to get ready this comprehensive Bill. Hence the need for the interim legislation to provide for payment of a reasonable compensation.

The existing Act provides that, if the amount of compensation claimed by the person concerned exceeds Rs. 25,000, a second appeal will lie to the High Court, as it will be open to the person concerned to claim any amount, it has been considered that the question of appeal should not depend on the amount claimed by the person, but should depend on the amount as determined by the prescribed authority if such amounts exceed Rs. 25,000. The Bill seeks to remove this anomaly also.

As a number of cases of acquisition of slum areas is held up on account of the anomaly of having to pay higher and unreasonable compensation, I request that the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959, be taken into consideration at once.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959, be taken into consideration."

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of . . . Members (. . . Members of the Legislative Assembly and . . . Members of the Legislative Council) to consider the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959 and that the following members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee (The number and the list of names to be furnished later)."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"That the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959 be referred to a Select Committee consisting of Members of the Assembly. (The number and the list of names to be furnished later)."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

DEPUTY SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, சேரி ஒழிப்புத்திட்டத்தின் கீழ் சர்க்காரால் ஆர்ஜிதம் செய்யப்படும் நிலங்களுக்கு நஷ்ட ஈடு தரப்பட வேண்டும், அந்த நஷ்டஈடு, சம்பந்தப்பட்ட நோடிபிகேஷன் வந்த தேதிக்கு முந்திய ஐந்து ஆண்டுகளில் சம்பந்தப்பட்டவருக்கு அந்த நிலத்தின் மூலம்

17th December 1959] [Sri S. M. Annamalai]

வந்த சராசரி ஆண்டு வருமானத்தைப் போல் 12 மடங்காக இருக்க வேண்டும் என்று இப்போது அமுலிலுள்ள சட்டம் கூறுகிறது. அது 12 மடங்காக இருக்க வேண்டாம், 5 மடங்காக இருந்தால் போதும் என்று விதிப்பது இந்த மசோதாவின் ஒரு நோக்க மாகும். இப்போதுள்ள சட்டப்படி, நிலக்காரர் 25,000 ரூபாய்க்கு மேல் நஷ்டயீடு கோரினால் யாராவது ஆட்சேபிக்கும்பட்சத்தில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துக்கொள்ளலாம். இந்த ஷரத்தை மாற்றி, சர்க்கார் நிர்ணயிக்கும் தொகை 25,000 ரூபாய்க்கு மேல் இருந்தால்தான் ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ளலாம் என்று விதிப்பதும் இந்த மசோதாவின் ஒரு நோக்கம். இந்த நோக்கங்களுடன் இந்தத் திருத்த மசோதா சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நமது சர்க்கார் விதைப் பண்ணைகளுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது பல குறைபாடுகளைக் காண்கிறோம். அதாவது, நிலச்சொந்தக்காரர்கள் 500 ரூபாய் பெறாத நிலத்திற்கு 2,000 ரூபாய் மதிப்பு போடுகிறார்கள். அதற்காக அவர்கள் பக்கத்தி லுள்ள நிலங்கள் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டதாகப் பத்தி ரங்களைக் காண்பிக்கின்றனர். அந்த அடிப்படையில் அவர் களுடைய நிலத்திற்கும் மதிப்புப் போடவேண்டும் என்று கோரி அதிகமான நஷ்டயீட்டைப் பெற்றுவிடுகின்றனர். இப்போதுள்ள சட்டம் அதற்கு இடம் கொடுக்கிறது. செல்வாக்குள்ளவர்கள் சர்க்கார் விதைப் பண்ணைகளுக்கு நிலங்களைக் கொடுக்கும்போது, தங்களுடைய நிலங்கள் தரிசு நிலங்களாக இருந்தாலும், அவை 500 ரூபாய் பெறாதவையாக இருந்தாலும், நான் முன்பு கூறிய வழியை கையாண்டு 5,000 ரூபாய் பணம் பெற்று விடுகிறார்கள். அதற்காக பக்கத்திலுள்ள நிலங்களுக்குத் தவறான பத்திரங்களை எழுதிவாங்கி விடுகிறார்கள். இவர்கள் இம்மாதிரி சர்க்காரிடமிருந்து பெரும் பணத்தைப் பறித்திருக்கிறார்கள். இதை, சர்க்கார் விதைப் பண்ணைகளுக்காக நில ஆர்ஜிதம் செய்ததில் கண்டிருக்கிறோம். இயற்றப்படும் சட்டம் இத்தகைய காரியங்களுக்கு இடம் கொடுக் கக்கூடாது என்ற நோக்கத்துடன்தான் இந்த மசோதா கூட்டுப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பட வேண்டும் என்று நான் பிரேரணை கொடுத்திருக்கிறேன். இத்தகைய காரியங்கள் நடக் காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமானால், நோடிபிகேஷன் வந்த தற்கு ஒரு வருடத்திற்கு முன்பு சம்பந்தப்பட்ட நிலத்திற்கு என்ன மதிப்பு இருந்ததோ அந்த மதிப்பின்படிதான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும். அதற்கு வகை செய்யும் முறையில் சட்டமியற்ற வேண்டும். இப்போதுள்ள நில ஆர்ஜிதச் சட்டத்தின்படி, கெஜட் நோடிபிகேஷன் வரும்போது நிலத்திற்கு என்ன மதிப்பு இருக் கிறதோ அந்த மதிப்பின்படி நஷ்டஈடு கொடுக்கலாம். இதன் காரணமாக பலர் தவறான பத்திரங்களைத் தயாரித்து அவைகளின் ஆதாரத்தில் அதிகமான பணத்தை நஷ்டஈடாகப் பெறுகின்றனர்.

மேலும், அதிகாரிகள் நிர்ணயிக்கும் தொகை 25,000 ரூபாய்க்கு மேல் இருக்குமானால், ஆட்சேபகரமான சந்தர்ப்பங்களில், ஹைக் கோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போகலாம் என்ற ஷரத்தை பெரும்

நிலக்காரர்கள் பயன்படுத்திக்கொண்டு ஹைக்கோர்ட்டுக்குப் போய்க்கொண்டிருப்பார்கள். இதன் காரணமாக, நாம் சேரி ஒழிப்புத் திட்டத்திற்கு நிலங்களை காலாகாலத்தில் ஆர்ஜிதம் செய்யமுடியாது போய்விடும். இந்தக் குறைகளையெல்லாம் மசோதாவிலிருந்து நீக்க வேண்டும். எனவே மசோதாவை கூட்டுப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். இது கூட்டுப் பொறுக்குக் கமிட்டிக்குப் போனால் பலரை நேரில் விசாரித்து அவர்களுடைய அபிப்பிராயங்களையும் குறைகளையும் அறியமுடியும். அவைகளை அறிந்து நல்லவிதமாகச் சட்டமியற்றலாம். எனவே தான் இந்த மசோதாவை கூட்டுப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று பிரேரணை கொடுத்திருக்கிறேன். அந்தப் பிரேரணையை அங்கீகரிக்க வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள் கிறேன்.

12-0 noon. **SRI N. K. PALANISAMI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நஷ்ட ஈட்டுத் தொகை 12 பங்காக இருப்பதை 5 பங்காகக் குறைப்பதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். ஆனால் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று நான் சொல்லுவது, இன்னும் இதில் குறைபாடுகள் இருப்பதன் காரணமாகத்தான். 1954-ம் வருஷத் தில் இது சட்டமாகக்கூடிய காலத்தில் உடனடியாக சேரி களையெல்லாம் அபிவிருத்தி செய்கிறோம் என்று சொல்லப் பட்டது. ஆனால் இதுவரையில் எந்த அளவுக்கு சேரிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று நாம் பார்க்க வேண்டும். இரண்டு வருஷங்களுக்கு ஒரு தரம் அடிக்கடி பெருமழை பெய்வதன் காரணமாக சேரிகளில் இருக்கக்கூடிய ஜனங்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. சர்க்கார் அந்தந்த சமயங்களில் சிறு உதவி செய்கிறார்களே தவிர அம்மாதிரியான குறைபாடுகளைத் தவிர்க்க சரியான நடவடிக்கை களை எடுக்கவில்லை. போதுமான அளவுக்கு அந்த சேரிகளில் இருக்கும் பள்ளங்களைத் தூர்த்து தண்ணீர் தேங்காத முறையில் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இது வரையில் செய்ய வில்லை.

அதுமட்டுமல்ல. இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னை நகர கார்ப்பொரேஷன் 30 ஸ்லம்களை எடுத்து அபி விருத்தி செய்வது என்ற திட்டம் இருக்கிறது. சர்க்கார் 20 ஸ்லம் களை எடுத்து அபிவிருத்தி செய்வது என்று திட்டம். இந்த இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிட்டத்தட்ட 50 சேரிகளை அபி விருத்தி செய்வது என்ற திட்டத்தில் எந்த அளவுக்கு சேரிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன? கிட்டத்தட்ட கார்ப்பொ ரேஷன் இரண்டு அல்லது மூன்று சேரிகளையும் சர்க்கார் இரண்டு சேரிகளையும்தான் அபிவிருத்தி செய்ய முடிந்திருக்கிறது. ஐந்து வருஷ காலத்தில் 50 சேரிகளை அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக 3 வருஷத்தில் 5 சேரிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. எப்படி பாக்கி இருக்கக்கூடிய இரண்டு ஆண்டு காலத்தில் மற்ற

17th December 1959] [Sri N. K. Palanisami]

சேரிகளை அபிவிருத்தி செய்யப் போகிறார்கள்? வருஷா வருஷம் மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய மான்யத்தை எடுத்துக் கொண்டாலும், அதைச் சரியாகச் செலவு செய்ய முடியவில்லை. இதற்குக் காரணம் என்ன என்று நமக்குத் தெரியவில்லை.

அதுமட்டுமல்ல. ஏற்கெனவே சேரிகளை அபிவிருத்தி செய்துள்ள இடங்களில் உள்ள ஜனங்களுடைய நிலைமை என்ன? சைதாப்பேட்டையில் இக்கக்கூடிய ஜனங்களை கோடம்பாக்கத்திற்கு மாற்றுகிறார்கள். அவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் மூங்கில் அல்லது ஓலைதான். அதை வைத்துக்கொண்டு . . .

DEPUTY SPEAKER : This is an Amendment Bill. The hon. Member must read the statement of objects and reasons. He cannot discuss extraneous things. He must also be brief.

SRI N. K. PALANISAMI : ஆகவே, இந்த நஷ்ட ஈட்டுத் தொகையை 1,200 ஸ்கொயர் ஃபீட்டுக்கு கணக்குப்போட்டு மத்திய சர்க்கார் மான்யம் கொடுக்கிறார்கள். கிட்டத்தட்ட 8 லட்சம் அல்லது 9 லட்சம் வரையில் ஆகிறது. ஆகவே, இம்மாதிரி 9 லட்சம் ரூபாயை அநாவசியமாகச் செலவு செய்வதை விட ஏற்கெனவே எங்கு வசிக்கிறார்களோ அங்கு அபிவிருத்தி செய்ய வேண்டும். இன்றைக்கு பம்பாய் இருக்கிறது. அங்கேயே அவர்களுக்கு மாடி வீடுகள்—இரண்டு அடுக்கு, மூன்று அடுக்கு வீடுகள் —கட்டிக் கொடுக்கிறார்கள். ஏனென்றால் சேரிகளில் இருக்கக்கூடியவர்கள் அந்த இடத்திலிருந்து வேறு இடங்களுக்குப் போவதற்கு மறுப்பதன் காரணமாகத்தான். அவர்களை அந்த இடத்திலிருந்து மாற்றி, அவர்கள் வேலை செய்யக்கூடிய இடத்திற்கும் அந்த இடத்திற்கும் 5 மைலுக்கு மேல் இருப்பதால் அவர்கள் அந்தச் சேரிகளை விட்டு வெளியே செல்ல மறுக்கிறார்கள். ஆகவே, அநாவசியமாக 9 லட்சம், 10 லட்சம் செலவு செய்வதைவிட அதே சேரியை அபிவிருத்தி செய்து மாடி வீடுகள் கட்டுவதன்மூலம் சர்க்காருக்குச் செலவு குறையும், திட்டமும் நிறைவேறும்.

இன்னும் நஷ்ட ஈடு நிர்ணயிக்கக்கூடிய நேரத்தில் முதலில் நெகொஷியேஷன் செய்கிறார்கள். இது எதற்காக என்று தெரியவில்லை. இன்றைக்கு சட்டம் இருக்கிறது. எமெர்ஜென்ஸி அக்விஸிஷன்மூலம் அந்த பூமியை அக்வொயர் செய்ய முடியும். இருந்தாலும் முதலில் நெகோஷியேஷன். அந்த பூமிக்கு உடைமைக்காரர் கிரவுண்டுக்கு 2,000 அல்லது 2,500 ரூபாய் கேட்கிறார்கள். உடனே 250 ரூபாய் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையில்தான் இருக்கிறது. அக்விஸிஷன் செய்வதிலே 2 அல்லது 3 வருஷங்கள் ஆகின்றன. முக்கியமாக இன்றைய தினம் அதிகமாக வீடு கட்டாததற்குக் காரணம் அக்விஸிஷன் ப்ரொஸீடிங்ஸ்தான் என்று நினைக்கிறேன். ஆகவே, நெகோஷியேஷன் முறை கூடாது, எமெர்ஜென்ஸி அக்விஸிஷன் முறையில் அக்வொயர் செய்யவேண்டும்.

[Sri N. K. Palanisami] [17th December 1959

இன்னென்று மார்க்கெட் வால்யூ என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மார்க்கெட் வால்யூ என்று சொல்லும்போது சாதாரணமாக நகரத்தில் அதிகமான விலே இருக்கிறது. குறைந்தது மார்க்கெட் வால்யூ நிர்ணயிக்கக்கூடிய காலத்தில் 500 ரூபாய்க்கு மேல் போகக்கூடாது என்று இருக்க வேண்டும்.

அதோடு 200 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கக்கூடிய என்.ஜி.ஓ.-க்களே ஸ்லம் ட்வெல்லர்ஸ் என்று டிக்ளரேஷன் செய்ய வேண்டும். அவர்கள் டவுனில் இருக்கிருர்களே தவிர அவர்கள் வசிக்கக்கூடிய இடங்களே கண்ணுல் பார்க்க முடியாது. அவர்களேயும் ஸ்லம் ட்வெல்லர்ஸ் என்று டிக்ளேர் செய்து அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுத்து வசதி செய்யவேண்டும்.

சென்னே நகரத்தில் இருக்கக்கூடிய சேரிகளே மட்டும் அபிவிருத்தி செய்தால் போதாது. பஞ்சாயத்துப் பகுதிகளில் இருக்கக்கூடிய சேரிகளேயும் அபிவிருத்தி செய்யவேண்டும். அம்மாதிரி செய்யாவிட்டாலும் ஏற்கெனவே வசிக்கக்கூடிய ஹரிஜனங்களே வெளியேற்ருமல் இருப்பதற்குச் சட்டம் கொண்டு வர வேண்டும். அடுத்தபடியாக எடுத்துக்கொள்ளப் போகிற மசோதா அதற்கு மாருக இருக்கிறது.

ஆகவே, இந்த மசோதாவை நன்ருகப் பரிசீலனே செய்ய வேண்டுமென்பதற்குத்தான் இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் என்று எனது திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன் என்று கூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை நான் ஆதரிக்கக் கடமைபட்டிருக்கிறேன். ஏனென்ருல் 5 வருஷங்களுக்கு முன்பே முந்திய சட்ட சபையில் இந்த மசோதா விவாதத்தில் இருக்கும் காலத்தில், நஷ்ட ஈட்டுத் தொகையானது 5 மடங்குக்கு மேல் இருக்கக்கூடாது என்று ஒரு திருத்தம் கொடுக்கப்பட்டது என்னுடைய கட்சியின் சார்பில்தான் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்து வருஷங்களுக்கு முன்பு சொன்னதை 5 வருஷங்களுக்குப் பிறகாவது ஒப்புக்கொண்டதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்காமல் இருக்க முடியாது. ஆகவே, முதலில் நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

இந்த மசோதாவின் நோக்கம் என்ன? குறிப்பாக சென்னே நகரத்தை—மற்ற நகரங்கள் இருக்கட்டும்—இது சென்னே நகரத்தைப் பொருத்தது. இந்த சென்னே நகரமானது உலகத்திலேயே முதல் வரிசையில் வைக்கக்கூடிய அளவுக்கு இயற்கை அழகுகள் கொண்டதாக இருக்கிறது என்ருலும் இதே நகரத்தில் 300-க்கும் அதிகமான சேரிகள்—நல்ல உடம்பில் புற்று நோய் வந்த மாதிரி—சென்னே நகரத்திற்கே கேவலம் இழைக்கக்கூடிய முறையில் சேரிகள்—இருக்கின்றன. அவைகளே அபிவிருத்தி செய்வதற்காக வேண்டி நஷ்ட ஈடு கொடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை

17th December 1959] [Sri M. Kalyanasundaram]

ஆதரிக்கிறேன். இன்றைய தினம் தனி நபர் சுதந்திரம், தனி நபர் உரிமை இவைகளைப்பற்றி பத்திரிகைகளில் எல்லாம் அடிபடும் காலத்தில், தனி நபர்களிடமிருந்து மலிவான விலைக்குப் பெற்று மலிவாக ஏழை மக்களுக்கு, வீடில்லாத மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்த மசோதாவின் அடிப்படைத் தத்துவம். இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் குடி இருக்க 9 அடி மனையாவது இருக்கவேண்டும் என்றால் அதுதான் தனி நபர் சுதந்திரம், அதுதான் தனி நபர் உரிமை. அந்த அடிப் படையில் மலிவு விலையில் வாங்கிக்கொடுக்கும் நோக்கத்தைக் கொண்ட இந்தத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன்.

ஆனால், இதை எப்படி அமுல் நடத்தப் போகிறார்கள்? அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன என்று சர்க்காருடைய கவனத் திற்குக் கொண்டு வருவதற்காக சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை நகரத்தைப் பொருத்த வரையில் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி கார்ப்பொரேஷனுக்கு விடப்பட்டிருக் கிறது—அதாவது வடசென்னை சம்பந்தப்பட்ட மட்டில்.

(Mr. Speaker in the Chair.)

தென் சென்னை சம்பந்தப்பட்ட மட்டில் 120-க்கும் அதிகமான சேரிகள்—சேரி என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறேனே என்று யாரும் வருத்தப்பட வேண்டாமென்று கேட்டுக்கொள்கி றேன்—அவற்றை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு ஸிடி இம்ப்ரூவ் மென்ட் டிரஸ்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஸிடி இம்ப்ரூவ் மென்ட் டிரஸ்ட்—நகர அபிவிருத்தி தர்மகர்த்தாக்கள்—பொறுப்பு ஏற்றிருக்கக் கூடியவர்கள், அவர்கள் தான் இந்த நிலத்தை ஆர் ஜிதம் செய்து, அதைத் திருத்தி, அபிவிருத்தி செய்து மக்களுக்குக் கொடுக்க வேண்டிய பெரிய ஒரு தர்ம கைங்கர்யத்தைச் செய்யக் கடமைபட்டவர்கள். அது எப்படி நடைபெற்றுக் கொண்டிருக் கிறது? சில திட்டங்களை நான் பார்த்தேன். பணம் ஒதுக் கப்பட்டு "சிடி இம்ப்ரூவ்மென்ட் ட்ரஸ்டிடம்" கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆறு மாதத்திற்குப் பிறகு "அந்த திட்டத் தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்" என்று சர்க்கார் உத்தரவு போடுகிறார்கள். ஒதுக்கப்பட்ட பணம் வேறு திட்டத்திற்குச் செலவழிக்கப்படுகிறது. சேரியிலே வாழக் கூடிய மக்களுக்கு அபிவிருத்தி செய்து குடியிருப்பு மனைகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா? சேரிவாழ் மக்கள் இருக்கும் பகுதிகள் சேரி அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரால் எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு அவர்கள் குடியிருக்கக்கூடிய மனை களையும் இழந்து நிற்கிறார்கள். சேரிகள் அப்புறப்படுத்தப்படு கின்றன. அவர்கள் புதிதாகப் போகும் இடங்களில் புதிய சேரிகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அந்த நிலங்களை நகர அபி விருத்தி ட்ரஸ்ட் எடுப்பதன் காரணமாகப் பயன் அடையக்கூடிய வர்கள் "லோ இன்கம் குரூப், மிடில் இன்கம் குரூப்" என்று சொல்லக்கூடியவர்கள்தான். சர்க்கார் அகராதிப்படி "லோ

இன்கம் குரூப்" என்றால் 500 ரூபாய்க்கு உள்ளிட்ட வருமானம் உடையவர்கள். "மிடில் இன்கம் க்ரூப்" என்றால் 500 ரூபாய்க்கு மேலிட்டு வருமானம் உடையவர்கள். அங்கிருந்து அப்புறப் படுத்தப்படுபவர்களுக்கு மனை கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஆயிரம் பேரை அப்புறப்படுத்திவிட்டு 300 பேருக்கு மனை கொடுக்கிறார்கள். அதன் காரணமாக ஒரு மனையில் 4, 5 பேர் சேர்ந்து வசிக்கிறார்கள். பேசின் ப்ரிட்ஜ் அருகாமையில் இருக்கும் ஏரியைப் பார்த்தால் சாக்கடை ஓரத்தில் தாங்களாகவே குடிசை போட்டுக் கொண்டு வசிக்கிறார்கள். சேரி அபிவிருத்தி செய்யப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே தவிர உண்மையிலேயே சேரிகள் முன்னேற்றமடையாத நிலையிலேயேதான் இருந்துகொண்டிருக்கிறது.

நிலங்களை எடுத்து ஏழை மக்களுக்காக குடியிருப்பு மனைக்குக் கொடுக்கவேண்டும். சாத்தியப்பட்டால் கட்டிடமாகவும் கட்டிக் கொடுக்க வேண்டும். அதற்கு வசதி செய்யத்தான் திட்டம். இந்த "அக்விசிஷன்" எப்படி நடக்கிறது என்று எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் அண்ணாமலையும், பழனிசாமியும் கூறினார்கள். சில குறைகளை எடுத்துச் சொன்னார்கள். சென்னை நகரத்தில் சிட்டி இம்ப்ரூவ்மென்ட் ட்ரஸ்ட் ஏற்படுத்தியதிலிருந்து நிலம் மலிவான விலைக்குக் கிடைப்பதும் போய்விட்டது என்ற புகார் இருக்கிறது. ஆகையால் சட்டம் இயற்றிவிட்டால் மட்டும் போதாது. அந்தச் சட்டம் எவ்வாறு அமுல் நடத்தப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்தச் சட்டத்தினால் ஏற்படக்கூடிய நன்மை இருக்கிறது. இதிலேயும் விதைப்பண்ணைத் திட்டத்திலே இருப்பது போன்ற சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைகளை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தில் 5 மடங்கு என்று கொடுக்கப்பட்டிருப்பது நியாயமான நஷ்ட ஈடுதான். வருஷ வருமானத்தில் 5 மடங்கு அல்லது நில ஆர்ஜிதச் சட்டப்படி கணக்குப் போட்டு எந்தத் தொகை குறைவாக இருக்கிறதோ அதைக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. விதைப் பண்ணைகளைச் சர்க்கார் ஆரம்பித்தார்கள். பல புகார்கள் வந்தன. எஸ்டிமேட் கமிட்டி விவரங்களை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். என்னிடத்தில் இருப்பது 1958-59-ம் வருஷ ஆடிட் ரிப்போர்ட். அயனாவரம் பக்கத்தில் ட்ரஸ்ட் ஸ்கொயர் இருக்கிறது. அங்குகூட அந்த நிலத்துச் சொந்தக்காரர்கள் "ப்ரைவேட் நெகோஷியேஷன்" மூலம் கொடுத்ததன் நோக்கம் இந்த சிடி இம்ப்ரூவ்மென்ட் திட்டம் அபிவிருத்தியாக வேண்டுமென்றல்ல. சிடி டெனண்ட் ப்ரொடெக்ஷன் ஆக்ட்படி ஏற்கனவே அந்த இடத்தில் குடியிருப்பவர்கள் அதை வாங்க உரிமை உண்டு. ஆனால் மலிவான விலைக்குத்தான் விற்க முடியும். சிடி இம்ப்ரூவ்மென்ட் ட்ரஸ்ட் மூலம் கொடுத்தால் அதிக விலை கிடைக்கும். அவர்களுடைய உரிமையில் மண்ணடிக்க சிடி இம்ப்ரூவ்மென்ட் ட்ரஸ்ட் இருக்கிறது. அந்த சிடி இம்ப்ரூவ்மென்டைப்பற்றியும், அதில் உள்ளவர்களைப்பற்றியும் இப்போது சொல்ல விரும்பவில்லை.

17th December 1959] [Sri M. Kalyanasundaram]

அபிராமபுரம் ஸ்கீம் இருக்கிறது. அதைப்பற்றி இந்த ஆடிட் ரிப்போர்ட்டில் இருப்பதில் ஒன்றை மட்டும் படிக்க விரும்புகிறேன். அதைப்படித்த பிறகு என்ன முடிவுக்கு வரவேண்டுமென்பதை மந்திரிகளுக்கே விட்டுவிடுகிறேன். இதில் என்ன சொல்லியிருக்கிறது என்று பாருங்கள்.

" When comparing the rate at which the adjoining lands were acquired by the City Improvement Trust—this is under the Land Acquisition Act—the rate of Rs. 1,300 per ground seems to be somewhat high. "

ரொம்ப "மைல்டு" ஆகப் போட்டிருக்கிறார்கள். 1,300 ரூபாய் என்ற அடிப்படையில் ஒரு கிரவுண்டு விற்கப்படுகிறது என்ற அடிப்படையில் 100 ரூபாய் கூடுதலாக வைத்துக்கொண்டாலும் என்ன ஆகும்? அந்த ரிப்போர்ட்டில் இரண்டு முக்கியமான கோட்பாடுகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. ஒன்று அக்கம்பக்கத்தில் இருக்கும் மனைக்கட்டுகள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றன என்று ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் போய் தஸ்தாவேஜிகளைப் பார்த்து மதிப்பிடுவது. இரண்டாவது, ரெவின்யூ இலாகாவிடமிருந்து மதிப்பு சரிதானா என்று அவர்களிடம் இருந்து அத்தாட்சி வாங்குவது. இந்த இரண்டும் அநேகமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்று அந்த ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி இன்னும் பல குறைபாடுகள் இருக்கின்றன. அதேபோல் வீடுகட்ட ஒதுக்கப்படுவதிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது. (கனம் ஸ்ரீ வி. ராமையா: ஸ்லம் க்ளீரன்சைப் பற்றியது இது. சி.ஐ.டி. எல்லாம் எப்படி இதில் வரும்?) சி.ஐ.டி. பற்றிக் குறிப்பிட வேண்டாமென்று சொல்லுகிறார்கள். சி.ஐ.டி.யைப்பற்றிச் சொல்ல சந்தர்ப்பம் இல்லை. ஆகையால் இதையும் சேர்த்துச் சொல்லுகிறேன். சர்க்கார் பணம் கொடுக்கிறார்கள். சி.ஐ.டி. சென்னை நகர சேரிகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஸ்தாபனத்தைக் குறைகூற வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஆடிட் ரிப்போர்ட்டில் என்ன சொல்லியிருக்கிறது என்றால்

" general result of the audit may be considered not satisfactory. "

1957-58-ல் இந்தக் குறைபாடுகளையெல்லாம் காண்பித்து, 1958-59-ல் " fairly satisfactory " என்று போட்டிருக்கிறார்கள். சர்க்கார் உத்தரவு இல்லாமல் இஷ்டம்போல் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் கொடுத்திருப்பதைப் பரிசீலனை பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேரி அபிவிருத்தி எந்த அளவுக்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறது? எந்த அளவுக்கு நிறைவேறியிருக்கிறது என்பதை 3 வருஷங்களுக்கு ஒரு முறை "சர்வே" பண்ணிப் பார்க்க வேண்டும். அந்த ஸ்தாபனம் சம்பந்தப்பட்டவர்களைப் பற்றியும் கண்காணிப்பு இல்லையென்று ரிப்போர்ட்டில் கூறப்பட்டிருக்கிறது. இதை பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி எடுத்துப் பரிசீலிக்க வேண்டுமென்று தனியாக வைக்கப்

போகிறேன். பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டிக்கு எந்த அளவுக்குப் பரிசீலனை செய்ய உரிமையிருக்கிறது என்பதைப்பற்றித் தனியாகப் பேசிக்கொள்ளலாம். முக்கியமாக சிடி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட் தொடர்ந்து இயங்குவதுபற்றி ஆட்சேபணையில்லை. நடைமுறையில் மாறுதல் இருக்கவேண்டும். சர்க்கார் கண்காணிப்பு இருக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அப்ளிகேஷன் கோரி அட்வர்டைஸ்மெண்ட் பண்ணுகிறார்கள் அப்ளிகேஷன் கோரி அட்வர்டைஸ்மெண்ட் வந்த பிறகுதான் மனுக்களை வாங்கிக் கொள்ளவேண்டும். ஆனால் அதற்கு முன்னாலேயே அப்ளிகேஷன் வாங்குகிறார்கள். பெரிய அதிகாரிகள், செல்வாக்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் ஆகியவர்கள் இந்த முறையில் நடந்து கொள்ளுகிறார்கள். சென்னை நகரத்திற்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லாத காங்கிரஸ் தலைவர் ஒருவர்—அவருடைய பெயரைக் குறிப்பிட சந்தோஷம் கிடையாது—எம்.எல்.சி.யாக இருப்பவர் செலுத்த வேண்டிய பணத்தைக் கட்டாமல், போதுமான அவகாசம் கொடுத்தும் கட்டாமல் இருந்துவிட்டு ரூ. 10,000 செலவு செய்து வீடு கட்டிய பிறகு 14,000 ரூபாயையும் 20 வருஷத்தில் கட்டலாம் என்று உத்தரவு வாங்கக்கூடிய நிலைமையில் சிடி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட் அதிகாரிகள் நடந்து கொள்ளுகிறார்கள்.

MR. SPEAKER: I would like to know the relevancy, of all that the hon. Member is now saying, to the Bill before the House. I do not see how they can ever come into the discussion of the Bill. The hon. Member is talking about the City Improvement Trust. I think it is not fair because we are not discussing about the City Improvement Trust. He may have other opportunities to do so, but not now.

SRI M. KALYANASUNDARAM: கிடைத்திருக்கிற சந்தர்ப்பத்திலே இதைப்பற்றி பேசுகிறேன்.

MR. SPEAKER: This is not the occasion. Where is the "Santharbam"?

SRI M. KALYANASUNDARAM: The City Improvement Trust is responsible for the improvement of half the number of slums, in the City.

MR. SPEAKER: What is the Bill before us? The main object of the Bill before us is the determination of the basis of payment of compensation. It is only for that limited purposes that the Bill is before us. How can the hon. Member bring in question relating to improvement of slums? I must say, it is out of order. I would request the hon. Member not to proceed further with that point.

SRI M. KALYANASUNDARAM: இந்த நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்லுங்கள். ஆனால் அதை 'அவுட் ஆப் ஆர்டர்' என்று சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த சட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுபவர்கள் 'ஸிடி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டு'. அவர்கள் எப்படி நடக்கவேண்டுமென்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். யாரையும் தாக்க வேண்டுமென்பதில் எனக்கு உற்சாகமில்லை, சந்தோஷமில்லை. இருக்கிற உண்மையை எடுத்துக் கூற

17th December 1959] [Sri M. Kalyanasundaram]

விரும்புகிறேன். வேறு சந்தர்ப்பம் கிடைக்காததால் இப்பொழுது இதைப் பற்றி பேசினேன். வேறு சந்தர்ப்பம் வரும்பொழுது அதுபற்றி பார்த்துக்கொள்ளுகிறேன்.

நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், நஷ்ட ஈடு ஐந்து மடங்கு கொடுக்கவேண்டும் என்றிருப்பதை நான் ஆதரிக்கிறேன். ஆனல் 'பிரைவேட் நெகோஷியேஷன்' மூலம் வாங்குவது கூடாது. சர்க்காருக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை உபயோகப்படுத்தி மனைக்கட்டுகள் வாங்கவேண்டும். சர்க்கார் 'பிரைவேட் நெகோஷியேஷன்' மூலம் வாங்குவதால் மற்றவர்களுக்கு 300, 400 ரூபாய்க்கு வாங்கப்படும் நிலம் 1,000, 2,000 ரூபாயாக விலை உயர்ந்துவிடுகிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனது முக்கியமான நோக்கம், என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கக்கூடிய அதிலுள்ள சில குறைபாடுகளை எடுத்துச் சொன்னேன். அதையும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விரிவான சட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதாக சொல்லப்பட்டது. அது வரும்பொழுது வரட்டும். அதை எவ்வளவு துரிதப்படுத்தவேண்டுமோ அவ்வளவு துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு இடையில் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். 'ஸிடி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டு' குறைந்த வருமானம் உடையவர்களுக்கு, சேரியில் வாழக்கூடிய எளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் எவ்வளவு தூரம் அபிவிருத்தி அடைந்திருக்கிறது, எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பது பற்றி நிர்ணயிப்பதற்கு ஒரு 'எவால்யுவேஷன் கமிட்டி' போட்டு—'என்குயரி கமிட்டி' என்று சொல்ல வில்லை—அதை பரிசீலித்த பிற்பாடு மேற்கொண்டு முடிவுகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விரிவான சட்டம் கொண்டு வருவதற்கு முன்னதாக அம்மாதிரி கமிட்டி போட்டு பரிசீலனை செய்யவேண்டுமென்ற யோசனையை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri K. VINAYAKAM : இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்த மசோதாவை ஆதரித்து, அதில் வந்திருக்கிற திருத்தங்களைப்பற்றியே ஓரிரண்டு கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். சென்னையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒரு சிலர் இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக என் பகுதியிலே இருக்கிற 'ஸ்லம்'களை யெல்லாம் அபிவிருத்தி செய்யவேண்டிய பொறுப்பை ஒப்படைத்திருப்பது 'ஸிடி இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டிடம்'தான். ஆதலால் இந்த அனுபவத்தில் கண்ட உண்மைகள் ஓரிரண்டை இதற்குத் தகுந்தாற்போல் சொல்ல விரும்புகிறேன். முன்பு சட்டம் கொண்டுவந்த பொழுது ஆர்ஜிக்கும்பொழுது நிலச் சொந்தக்காரர்களுக்கு 12 மடங்கு பணம் தரவேண்டும் என்று அப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சட்டம் நடைமுறையில் அமுலில் வரும்பொழுது எந்த ஒரு இன்ஸ்டன்ஸில், எங்கே அதிகமாக தரப்பட்டது, ஏன் இந்தத் திருத்தத்தை

இப்பொழுது இந்த முறையில் கொண்டுவர வேண்டும் என்ற விஷயங்களை மந்திரி அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிடைவேட் நெகோஷியேஷன் என்று சொல்லுவது ஒரு முறை. அந்த முறையிலும் நாம் துரிதமாக வாங்க முடியும். குறைந்த விலைக்கு, நியாயமான விலைக்கும் வாங்கியிருக்கிறோம். கோடம் பாக்கத்தில் டிரஸ்டுபுரம் என்ற இடத்தில் நிலத்தை 'அக்விஸிஷன்' மூலம் வாங்கவில்லை. நிலச் சொந்தக்காரர்களிடம், செட்டி நாடு ராஜா போன்றவர்களை நெருங்கி அவர்களிடம் 'பிரைவேட் நெகோ ஸியேஷன்' மூலம் வாங்கியதினாலே சீக்கிரம் கிடைத்தது. ஒரு சில நண்பர்கள் நம்புகிறார்கள் 'பிடைவேட் நெகோஷியேஷன்' மூலம் வாங்கினால் விலை அதிகமாகப் போகும் என்று. ஏதோ அரசாங் கத்தினிடம் இருக்கும் அதிகாரத்தை வைத்து சீக்கிரமாக 'அக்வி ஸிஷன்' செய்துவிடலாம் என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரி 'அக்விஸிஷன்' செய்வதிலே எவ்வளவு தொல்லைகள் இருக்கின்றன என்பது அதிலே ஈடுபட்டிருப்பவர்களுக்குத்தான் தெரியும். அதே பகுதியிலே ஒரு நிலம் வாங்கவேண்டுமென்று 6 ஆண்டுகளாக முயற்சித்தும்கூட முடியவில்லை. பல stages of acquisition இருக்கின்றன. முதலில் 'நோடிபிகேஷன்'. பிறகு சர்வே செய்ததா அல்லது செடில்மெண்டு செய்ததா என்று பார்ப்பதற்கு 2 ஆண்டுகள் முடிந்து விடுகிறது. பிறகு நோடிபிகேஷன், opportunities of representation, அவர்கள் அதை ஒத்துக்கொள்ள வில்லையென்றால் பல்வேறு stages, கடைசியில் உயர் நீதி மன்றம் வரை போன பிறகுதான் ஓரளவுக்கு அக்விஸிஷன் செய்ய லாம் தொடங்கியதிலிருந்து 6, 7 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நிலம் கிடைக்கிறது. ஆகவே, 'பிரைவேட் நெகோஷியேஷன்' செய்யக்கூடாது என்று சொல்லுவது எல்லா விஷயங்களிலும் பொருத்தமல்ல. அதைப் பயன்படுத்திய பிறகுதான், இரண்டாவ தாக அக்விஸிஷனுக்குப் போகவேண்டும்.

எந்தச் சேரியும் இன்னும் அபிவிருத்தி செய்யப்படவில்லை என்று ஒரு சில நண்பர்கள் சொல்லுகிறார்கள். கோடம்பாக்கத்தில் நமசி வாயபுரம், கண்ணுபுரம் போன்ற சேரிகளை கலியாணசுந்தரம் அவர்கள் பார்த்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் அந்த இடங்களை வந்து பார்க்கவேண்டுமென்று விரும்பு கிறேன். நேரில் பார்த்து அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறதா, மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். அம்மாதிரி நேரில் பார்த்த பிறகு கண்டிப்பதற்கோ, ஆதரிப் பதற்கோ முன்வர வேண்டும். சேத்துப்பட்டில் இருக்கும் மீனம் பாள் சிவராஜ் ஸ்லம்மை திருத்தி புதியதாக கோடம்பாக்கத்தில் அவர்களுக்கு அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று சொல்லிய பொழுது அவர்கள் போக மறுத்தார்கள். இப்பேற்பட்ட அரசியல் வாதிகள் அவர்களிடம் போய் 'அங்கு போகக்கூடாது, அது நல்ல தல்ல' என்று சொன்னதினால் அவர்கள் போக மறுத்தார்கள். பிறகு என்னைப்போல் உள்ளவர்கள் அங்கு போய் வேண்டிய வசதிகள் செய்துதருவதாக on most endearing terms-ல் சொல்லி, அவர்களும் அங்கு போய் அவர்களுக்காக சேரியை

17th December 1959] [Sri K. Vinayakam]

திருத்தி அமைத்திருக்கிறோம். அந்தச் சேரியை வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு ரோடு வசதி, விளக்கு வசதி, குழாய் வசதி எல்லாம் செய்திருக்கிறோம்.

MR SPEAKER : I do not see how it is relevant.

SRI K. VINAYAKAM : It is a relevant point, Sir. When you allowed the other hon. Member . . .

MR. SPEAKER : I am sorry. One mistake does not justify another. I drew the attention of the hon. Member Sri Kalyanasundaram and asked him not to refer to the City Improvement Trust. The hon. Member Sri Vinayakam is referring to private negotiation and all that. It is out of order.

SRI K. VINAYAKAM : I only wanted to reply to the hon. Member.

MR. SPEAKER : Why should the hon. Member take that trouble? The Hon. Minister will do it.

SRI K. VINAYAKAM : இந்த 12 மடங்கு கொடுப்பதிலே ஏற்படுகிறது, அதுவும் more than the ruling marked rate கொடுக்கப் பட்டதாக எங்கேயாவது 'இன்ஸ்டன்ஸ்' இருந்தால் அரசாங்கம் சொல்லவேண்டும். அந்த மாதிரி சொல்லி பிறகு 5 மடங்கு தான் தர வேண்டும் என்றாலும், இன்னும் எவ்வளவு எளிதாக வாங்கலாம் என்று சொன்னாலும்கூட நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அப்படி வாங்குவதற்கு நியாயம் இருக்கிறதா, 5 மடங்கு என்று சொல்லுவதற்கு நியாயம் இருக்கிறதா என்று 1, 2 instance அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும்.

25,000 ரூபாய் நஷ்ட ஈடு கொடுப்பதாக இருந்தால் தான் உயர் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யலாம் என்ற திருத்தம் வருகிறது. சொந்தக்காரர் 'எனக்கு 25,000 ரூபாய் தர வேண்டுமென்று' சொல்லிவிட்டால், சொந்தக்காரர் நிர்ணயிக்க figures 25,000 ஆக இருந்தால், உயர் நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்யலாம் என்று முன்பு இருந்தது. இப்பொழுது அதை விட்டு விட்டு அரசாங்கம் நிர்ணயிக்கிற பணம் 25,000 ரூபாயாக இருந்தால்தான் அப்பீலுக்குப் போகவேண்டுமென்று சொன்னால். பெரும்பாலும் அப்பீலுக்கு இடமே இல்லாமல் சொந்தக்காரர்களை தடுத்துவிடுவதாகும். அம்மாதிரி செய்வது அவர்களுடைய உரிமையை பாதிப்பதாகும். அதையும் கொஞ்சம் சிந்தித்துப்பார்த்து அதற்குத் தகுந்தவாறு இந்த மசோதாவை திருத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்லி, நான் இதை ஆதரித்து, முடித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The Hon. Minister will now reply. (Sri V. Sankaran rose.) I am sorry, the hon. Member Sri Sankaran wants to speak now. (The hon. Member nodded his head.) Does the hon. Member want to speak or not?

THE HON. SRI C. SUBRAMANIAM : You have already called the Hon. Minister, Sir.

MR. SPEAKER : All right. The Hon. Minister will now speak.

[17th December 1959

The Hon. Sri V. RAMAIAH: கனம் சபாநாயகர் அவர்களே,
12-3 p.m. இந்த மசோதாவைப் பொருத்த வரையில், யாருக்கும் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லையென்று தெரிந்து கொண்டிருக்கிறேன். சி.ஐ.டி. என்று மசோதாவிலே புகுத்தியிருக்கிற காரணத்தினாலே, எத்தனையோ பல பிரச்சினைகள் பேசப்பட்டன. இந்த மசோதாவைப்பற்றி வேறு அபிப்பிராயம் இல்லாவிட்டாலும், நடைமுறையில் இருக்கும் சட்டத்தில் உள்ள குற்றங் குறைகளைப் பற்றிச் சொன்னார்கள். ஸி.ஐ.டி. எத்தனையோ வேலைகளைச் செய்து வருகிறார்கள். இன்னும் எத்தனையோ தனிப்பட்ட விஷயங்களைச் சொன்னார்கள். யாரோ எம்.எல்.ஸிக்கு விசேஷ சலுகை கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இது விஷயம் பரிசீலனை செய்து பார்க்கப்படும். கனம் அண்ணாமலைக்கு இந்த மசோதாபற்றிக் கோபமே கிடையாது. ஆனால் அவர்களுக்கு லாண்டு அக்விசிஷன் ஆக்ட் அமுல் செய்வதில் பல இலாகாக்களில் குற்றங் குறைகள் இருப்பதைச் சொன்னார்கள். ஸீட் பாரம் சம்பந்தமாக அவர்களுக்கு ஏற்பட்ட மனக் கஷ்டத்தைச் சொன்னார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, யார் எந்த சமயத்தில் எது சொன்னாலும் கவனிப்பார்கள் என்று, சந்தர்ப்பம் கிடைக்கும் நேரத்திலெல்லாம், நேரிடையாக இந்த மசோதாவிற்கு ஆட்சேபம் இல்லாவிட்டாலும், மனதில் படுவதைச் சொல்ல வேண்டும் என்று அந்த குறைகளைச் சொன்னார்கள். அதற்காக நான் பெருமைப்படுகிறேன். இதை கனம் அண்ணாமலைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு அந்த அளவுக்கு நம்பிக்கை இருப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

கனம் பழனிசாமி அவர்கள் பேசும்போது, இந்த மசோதாவிற்கு சம்பந்தமில்லாத பல கருத்துக்களைச் சொன்னார்கள். இருந்தாலும் அவர்கள் சொன்ன . . .

(Sri N. K. Palanisami rose. . . .)

Mr. SPEAKER: Why does the hon. Member want to interrupt the Hon. Minister. Let the Hon. Minister proceed.

The Hon. Sri V. RAMAIAH: ஆனால் அவர்களுடைய ஒரு கருத்துக்கு பதில் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். அவர்களுடைய ஆசை, இந்த ஸ்லம் பகுதியில் வாழும் மக்களுக்கு உடனடியாக, கனம் விநயகம் சொன்னதுபோல், எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துவிடவேண்டும் என்பது, நல்ல இடங்களிலே நல்ல முறையிலே வாழ்க்கை நடத்த வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று ஆசை. அதுதான் எங்கள் ஆசையும். அதைத் துரிதமாக அமுல் நடத்த முடியாததற்கு காரணம் இப்பொழுது நடைமுறையிலே இருக்கும் சட்டப்படி 12 மடங்கு காம்பென்சேஷன் கொடுக்க வேண்டியிருப்பதால்தான். விலையிருக்கும் நிலையில், அது கொஞ்சம் பயப்படக்கூடிய முறையிலே தொகையின் அளவு ஏறிப்போயிருக்கிறது. தாமதமில்லாமல் அதைச் செய்ய வேண்டுமென்றுதான், காம்ப்ரிஹென்சிவ் பில் வரும் வரை காத்திராமல், அதற்குச் சில மாதங்கள் ஆகலாம்,

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

17th December 1959] [Sri V. Ramaiah]

சில வாரங்கள் ஆகலாம்—உடனடியாகச் செய்ய வேண்டுமென்று தான், இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது. ஆகவே, ஏழை மக்களிடத்தில் அக்கரை கொண்டு இருக்கும் எல்லா அங்கத்தினர்களும்—யாருக்குமே எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை என்று தெரிகிறது—அதிகமான சர்ச்சையில்லாமல், அப்படியே அங்கீகாரம் கொடுத்தால், இது தாமதமில்லாமல், அமுலாக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். பொருக்குக் கமிட்டிக்கு அனுப்புவதால், காலத்தை நீடித்துக்கொண்டு போவதாக ஆகும். அதுவரை அத்தனை ஏழை மக்களும் காத்திருக்க வேண்டும். ஆகவே, இந்த அவசியமான மசோதாவை காலம் கடத்த வேண்டாம், பொருக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றபடி வேறு தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு அந்தந்த கிளாஸ்கள் வரும்போது பதில் சொல்லுகிறேன்.

The amendment of Sri S. M. Annamalai was put and lost.

The amendment of Sri N. K. Palanisami was, by leave, withdrawn.

Mr. SPEAKER : The question is—

" That the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

Mr. SPEAKER : The motion is—

" That clause 2 do stand part of the Bill."

Sri V. SANKARAN : Sir, I move— 12-30 p.m.

" In sub-section (1) (*a*) of the proposed section in line 6, *for* the word ' five ', *substitute* the word ' *twelve* '; and

for the word ' derived ' in line 7, *substitute* the word ' derivable '."

Sri K. VINAYAKAM : Sir, I second it.

Sri V. SANKARAN : Sir, I move—

" In sub-section (3) (*a*) of the proposed section 6, *for* the word ' derived ', in line 23, *substitute* the word ' derivable '. "

Sri K. VINAYAKAM : Ditto.

Mr. SPEAKER : The hon. Member should not say ' ditto '. He should second the amendment every time it is moved.

Sri K. VINAYAKAM : Sir, I second it.

Sri V. SANKARAN : Sir, I move—

" In the proviso to sub-section (3) (*b*) of the proposed section 6, *for* the word 'derived ', in line 34, *substitute* the word ' derivable '."

SRI K. VINAYAKAM : Sir, I second it.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"In the proviso to sub-section (3) (*b*) of the proposed new section 6 of the principal Act, after the words 'value of the land' in line 41, add the words 'before one year'."

The amendment was duly seconded.

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"(i) In sub-section (3) (*b*) of the proposed section 6 *add* at the end the following :

'and compensation so payable shall in no way exceed Rs. 500 per ground'."

'(ii) *Omit* sub-section 4 (*b*) of the proposed section 6.'

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"In sub-section (4) (*b*) of the proposed section 6 in lines 10 and 11 omit the words 'if the amount of compensation . . . twenty-five thousand rupees'."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Now the clause and the amendments are before the House for discussion.

SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது, பேஸிஸ் ஆப் காம்பன்சேஷனை எடுத்துக் கொண்டால், குறைந்து கொண்டே வந்திருக்கிறது என்று தெரியும். இந்த சபைக்கு சட்டம் நிர்ணயிக்கும் அதிகாரம் உண்டு என்றாலும், சட்டத்திலே, ஜஸ்டிஸ், ஈக்விடி, குட் கான்ஷன்ஸ் என்ற மூன்றையும் கவனித்துப் பார்க்கும்போது, ஐந்து மடங்கு என்றிருப்பது நியாயமானதா, நேர்மையானதா என்று பார்க்க வேண்டும். முதன் முதலிலே 54-லே இந்த பில் வந்தபோது, 20 மடங்கு என்று போடப் பட்டிருந்தது. விவாதத்தின் போது, 20 மடங்கு என்பது அதிகம் என்று சொல்லப் பட்டதால், 12 மடங்கு என்று குறைக்கப்பட்டது. இப்பொழுது அதே 5 மடங்கு என்று வந்திருக்கிறது. அது சரியாக இருக்குமா, நியாயந்தானா என்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதை மாற்றவேண்டும் என்ற முறையிலே திருத்தங்களைக் கொடுத்து இருக்கிறேன். சட்ட மன்றத்திற்கு, நிர்ணயிக்க அதிகாரம் இருக்கிறது என்றாலும், அந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப் படக்கூடாது. அது ஈக்விடிக்கு புறம்பாகும். இந்த மசோதாவின் "ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்" பார்த்தால், "மார்கட் வால்யூக்கு அதிகமாகப் போய் விடுவதால், 5 மடங்கு என்று குறைக்க வேண்டும்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. 20 மடங்கு என்று போட்டு வந்ததே அந்த மசோதாவிலும், அதன்

17th December 1959] [Sri V. Sankaran]

"ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸ்" பார்த்தால் அதிலும் இதே மாதிரி வேறு ஒரு காரணம் சொல்லப்பட்டிருந்தது. அப்பொழுது சொல்லப்பட்டது, மார்கட் வால்யூக்கு குறைவாகவே ஆகும் என்று. இப்பொழுது அடிப்படையான காரணம் மார்கட் வால்யூக்கு அதிகமாகப் போய்விடுகிறது என்பது. ஆகவே அப்பொழுது 12 மடங்காக இருந்ததை 5 மடங்காக குறைக்கப் பட்டிருக்கிறது. இதை 12 மடங்கு அல்லது மார்கட் வால்யூ, "விச்செவர் இஸ் லெஸ்" என்று போட்டால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். சிலரிடம் காலியான இடம் இருக்கலாம். சாதாரணமாக ஒருவரிடத்தில் நாலைந்து க்ரௌண்டுகள் இருந்தால் அவற்றில் சில இடங்களில் மட்டும் வீடுகளையோ அல்லது குடிசைகளையோ கட்டிக் கொண்டு பாக்கி இடங்களை காலியாக விட்டு வைத்திருக்கலாம். காலி போர்ஷனை வைத்திருந்தால் அந்த இடத்திற்கு என்ன வரும் என்பது தெளிவாக்கப்படவேண்டும். சிலர் எல்லா இடங்களிலும் வீடுகளையோ அல்லது குடிசைகளையோ கட்டிக்கொண்டிருக்கலாம். ஆகவே காலி இருக்கக்கூடிய இடங்களைப் பொருத்த அளவில் பணம் கொடுப்பது தெளிவாக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் ஷெடியூலில் ஓரளவு விவரம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது லாண்ட் வாலியூவைப்பற்றி கூறப்பட்டிருக்கிறது. அதில் பேசிஸ் என்று சொல்லப்பட்டிருப்பது:

"If the land or the huts or buildings thereon remained unoccupied, or the owner has not been in receipt of any rent for the occupation of such land, huts or buildings during the whole or any part of the said period of five years, the gross rent shall be taken to be the income which the owner would in fact have derived if the land, huts or buildings had been leased out or given for rent during the relevant period, and for this purpose teh income actually derived from similar lands, huts or buildings in the vicinity shall be taken into account."

என்று மெயின் ஆக்ட் ஷெட்யூலில் 4-வது கிளாசில் இருக்கிறது. முழுவதிலும் இல்லாமல் ஒரு போர்ஷன் மட்டிலுமிருந்தால் அதற்கு என்ன செய்வது. சில இடங்களுக்கு மட்டும் வாடகை வரலாம். அதனால் எல்லா இடங்களுக்கும் என்று வைத்துக்கொள்ளக் கூடாது. ஆகவே மெயின் ஆக்டை மாற்றி அமைக்கவேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வாடகை வசூலிப்பதில் "**derive**" என்று இருக்கிறது. அந்த வார்த்தைக்கு பதிலாக "**derivable**" என்று மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி இப்பொழுது மெயின் ஆக்டை மாற்றிக்கொள்ள முடியுமோ என்னமோ தெரியவில்லை. அந்த முறையில் என்னுடைய திருத்தங்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவைகளை ஏற்றுக்கொள்ளவில்லையானால் அவைகளை நான் வாபஸ் பெற்றுக் கொள்ளுகிறேன்.

SRI S. M. ANNAMALAI: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள், லாண்ட் அக்விசிஷன் ஆக்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று.

இதற்கும் அதற்கும் சமபந்தம்தான் இருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். பணத்தை வசூலிக்கும்போது லாண்ட் அக்விசிஷன் ஆக்ட் பிரகாரம் வசூலிக்கப்படும் என்று சொல்லப்படுவதால் லாண்ட் அக்விசிஷன் ஆக்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறது என்று சொல்லுகிறேன். நில ஆர்ஜித சட்டத்தின் கீழ் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டுமானுல் அண்டையிலுள்ள நிலத்தினுடைய மதிப்பு எவ்வளவோ அதன்படி அவர்கள் காம்பென்சேஷன் வாங்கிக்கொள்ளலாம் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதன்படி நிலத்தை ஆர்ஜிதம் செய்யப்போகிருர்கள் என்று தெரிந்தவுடன் பக்கத்திலுள்ள நிலங்கள் ஏறத்தாழ 500 ரூபாய் என்றிருந்தால் 5,000 ரூபாய் என்று போட்டு பத்திரங்களை எழுதி வாங்குகிருர்கள். அதன்படி பிறகு காம்பென்சேஷன் தரவேண்டும் என்று சொல்லுகிருர்கள். அதன் காரணமாகத்தான் ஒரு வருஷத்திற்கு முன் இந்த நிலங்களுக்கு என்ன மதிப்பு இருந்ததோ அதன்படி காம்பென்சேஷன் தரப்படவேண்டும் என்ற முறையில் திருத்தம் கொடுத்திருக்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, பூமி ஆர்ஜிதம் செய்யக்கூடிய சமயத்தில் விலை நிர்ணயம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்படி நிர்ணயம் செய்யும்போது அது 500 ரூபாய்க்குமேல் போகக்கூடாது என்பதுதான் என்னுடைய திருத்தம். ஏற்கனவே இந்த அளவுக்கு சேரி வாழ்வோரிடமிருந்து வாடகை வாங்கிக்கொண்டு வருகிருர்கள். அப்படி இல்லாவிட்டால் அவர்கள் சாதாரணமாக இன்றைக்கு அதிகப்படியான வாடகை வாங்குவதற்குக் காரணமாக இருக்கும். ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று க்ரௌண்டுகள் பக்கத்தில் இருந்தால் அதிகப்படியாகக்கூட போகும். ஆகவே, நாம் சேரி அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் பணம் பெரும்பாலும் பூமி வாங்குவதற்கு செலவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதன் காரணமாக க்ரௌண்ட் ஒன்றுக்கு ரூபாய் 500-க்கு மேல் போகக்கூடாது. சர்க்கார் ஏதாவது கட்டிடம் அல்லது வேறு ஏதாவது வாங்க வேண்டுமானுல் எந்த அளவு மார்க்கெட் வாலியூ இருக்கிறதோ அதைப் பொறுத்து கிடைப்பது இல்லை. அந்த நிலைமையில் எமர்ஜன்ஸி ப்ரொசிடிங்ஸ் பிரகாரம் 500 ரூபாய்க்கு மேல் மார்க்கெட் வாலியூ போகக்கூடாது என்ற அடிப்படையில் ஆர்ஜிதம் செய்ய வேண்டும்.

இன்னென்று க்ளாஸ் 4-பி-யை நான் எதிர்க்கிறேன்.

4. (*b*) against any decision of the court under clause (*a*), a second appeal on any question of law shall lie to the High Court within thirty days from the date of such decision if the amount of compensation as determined by the prescribed authority exceeds twenty-five thousand rupees."

இந்த அப்பீல் எதற்கு என்பது தெரியவில்லை. மேலே இருக்கக்கூடிய சட்டத்தில் சாதாரணமாக ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருந்தால் அப்பீல் செய்யலாம் என்று இருக்கிறது. இந்த

17th December 1959] [Sri N. K. Palanisami]

திருத்தத்தின் காரணமாக சேரி அபிவிருத்தி ஆகாது. எல்லோரும் அப்பீல் போடுவார்கள். அது முடிவதற்கு வருஷக் கணக்கில் ஆகும். ஹைக்கோர்ட்டில் ரிட் போடுவதற்குக் கூட உரிமை இருக்கிறது. அவைகளுக்கு எல்லாம் இடம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லே. ஆகவே க்ளாஸ் 4-பி-யை டெலீட் பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேல் நஷ்ட ஈடு பெருபவர்களுக்கு மட்டும் இரண்டாவது அப்பீல் இருக்கவேண்டும் என்ற உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. சட்டப் பிரச்னே ஏற்பட்டால் அப்பொழுது அந்த உரிமையைக் கொடுக்கலாம். அப்பொழுது எல்லோருக்கும் அந்த உரிமையைக் கொடுக்கலாம். ஆனல் இருபத்தி ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேல் மதிப்பு இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கவேண்டும் என்பது சரியல்ல. இரண்டாவது அப்பீல் உரிமை இருக்க வேண்டுமானல் எந்த வரையரையும் இல்லாமல் யார் வேண்டுமானலும் ஹைக்கோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீலுக்குப் போகலாம் என்ற முறையில் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார் என்று நினைக்கிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கனம் அண்ணமலே அவர்கள் கூறியபோது பல விவரங்களுக்கு லாண்ட் அக்விஷன் ஆக்ட் பிரகாரம் நில ஆர்ஜிதம் செய்வதில் இருக்கக்கூடிய பல சிரமங்களேச் சொன்னர். அதை தவிர்க்க முடியாத நிலேயில் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நடைமுறையில் இந்த ஸ்லம் க்ளியரன்ஸ் சம்பந்தமாக நிலம் வாங்கக்கூடிய காலத்தில் அதிகமாக பணம் கட்டவேண்டிய நிலேமை ஏற்படும் என்ற காரணத்தால் அதை விரிவுபடுத்தவேண்டும் என்பதற்காக இந்த திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கனம் சங்கரன் அவர்கள் பேசிய காலத்தில், ஆரம்பத்தில் கொண்டுவரும்போது இருபது மடங்கு காம்பென்சேஷன் கொடுக்கவேண்டும் என்று கொண்டுவந்து வாதம் நடத்திய பிறகு அதை பனிரெண்டாகக் குறைத்து இப்பொழுது திருத்தம் கொண்டு வந்ததன்படி ஐந்து மடங்கு என்று வைக்கக்கூடிய காலத்தில் அதனல் அதிகம் பாதகம் ஏற்படும், அதனல் ஈக்விட்டி, ஜஸ்டிஸ் இல்லாமல் போய்விடும் என்று வாதம் செய்தார். சமீபத்தில் ஸ்லம் க்ளியரன்ஸ்படி ஆர்ஜிதம் செய்திருக்கக்கூடிய இடங்களின் மதிப்பைப் பார்த்தால் சாதாரணமாக லாண்ட் அக்விசிஷன் ஆக்ட் பிரகாரம் நாம் காம்பென்சேஷன் கொடுத்தால் எவ்வளவு ரூபாய் கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்படுமோ அதைக் காட்டிலும் பனிரெண்டு மடங்கு கொடுக்க வேண்டியதாக கொடுக்கக்கூடிய காலத்தில் ஏற்படுகிறது. உதாரணமாகச் சொல்வேன், வாழைப்பூச்சேரி சம்பந்தமாக காம்பென்சேஷன் கொடுக்கும்போது லாண்ட் அக்விசிஷன் பிரகாரம் 66 ஆயிரம் ரூபாய் காம்பென்சேஷன் கொடுக்கவேண்டியதாக

[Sri V. Ramaiah] [17th December 1959

இருக்கிறது. அப்படி காம்பென்சேஷன் கொடுக்கக்கூடிய காலத்தில் லட்சத்தி அறுபது ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டியதாக வருகிறது. லாண்ட் அக்விசிஷன் பிரகாரம் ஏறத்தாழ எவ்வளவு கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறதோ அந்த அளவுக்கு ஐந்து மடங்கு கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் தான் இந்த மசோதாவில் "விச் எவர் இஸ் லெஸ்" என்று போடப் பட்டிருக்கிறது.

SRI K. VINAYAKAM : Does it hold good for every slum in the State?

THE HON. SRI V. RAMAIAH : கணக்குப் போட்டுப் பார்த்தால் அந்த முறைக்கு வரும் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவை இப்பொழுது அவசரமாகக் கொண்டுவந்ததன் காரணம் இன்னும் பல சேரிகளுக்கு அக்விசிஷன் பெண்டிங்காக இருக்கிறது. பனிரெண்டு மடங்கு கொடுக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிறது. அதனால் அந்தப் பக்கமே போக முடியவில்லை. முயற்சி எடுத்துக்கொண்டால் பல சங்கடம் ஏற்படுகிறது. சேரி வாழ் மக்களுக்கு நிவாரணம் கொடுக்கவேண்டுமென்ற காரணத்தால் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஐந்து மடங்கு என்று எடுத்துக்கொண்டால்தான் நல்லது என்று நான் விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நிர்ணயிக்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகை இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்டதாக இருந்தால் செகண்டு அப்பீல் செய்துகொள்வதற்கு சட்டத்தில் வகை இருக்கிறது. இந்தச் சட்டப்படி அதிகாரிகள் நிர்ணயிக்கிற முடிவை எதிர்த்து சப்-கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்வதற்கு இடம் இருக்கிறது. சப்-கோர்ட்டின் தீர்ப்பின் பேரில் செகண்டு அப்பீல் செய்துகொள்ளவும் இருப்பதனால் செகண்டு அப்பீல் என்று சொல்லும்போது இன்னும் ஜாஸ்தியாக பரிசீலனை செய்யக்கூடிய அளவுக்கு அதை வைத்திருக்கிறது. ஆகையால் அந்தத் திருத்தத்தைப் ப்ரஸ் பண்ணவேண்டாமென்று ஸ்ரீ கல்யாண சுந்தரம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

The amendments of Sri V. Sankaran and Sri N. K. Palanisami were, by leave, withdrawn.

The amendments of Sri S. M. Annamalai and Sri M. Kalyanasundaram were put and lost.

The clause was put and carried.

(Clause 3 was put and carried.)

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

'That the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959, be passed.'

17th December 1959]

MR. SPEAKER : Motion moved :

'That the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill, 1959, be passed.

The motion is before the House for discussion.

SRIMATHI T. N. ANANDHANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சேரி அபிவிருத்திக்காக நிலத்தை எடுத்துக் கொள்வதற்கு இவ்வளவு அக்கறை காட்டியிருப்பதைக் குறித்து உண்மையிலேயே நான் மிகுந்த சந்தோஷப்படுகிறேன். ஆனாலும் இன்றையதினம் தனிப்பட்டவர்களுடைய நிலங்களில் அமைந்திருக்கிற சேரிவாழ் மக்கள் படுகிற தொல்லைகளையும், அவர்களுக்கு ஒரு நல்ல நிலைமை ஏற்படாதா என்றால் கூவத்திற்கு வடக்கே இருக்கிற சேரிகளை கார்ப்பரேஷன்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். கூவத்திற்கு தெற்கே இருக்கிற சேரிகளை ஸிடி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்டுதான் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் பாகுபாடு செய்யப்பட்டு, அதிலும் கார்ப்பரேஷன் நிலத்தில் இருக்கிற சேரிகளைத்தான் முதலில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்றும் அதற்கு அடுத்தபடியாக சர்க்கார் நிலத்தில் இருக்கும் சேரிகளை அபிவிருத்தித் திட்டத்தில் எடுத்துக்கொள்வதென்றும் அதற்கடுத்தபடியாகத்தான் தனியார் நிலத்தில் இருக்கும் சேரிகளை எடுத்துக்கொள்ளப்படும் என்றும் திட்டம் போட்டிருக்கிறார்கள். அந்த முறையில் பார்த்தால் தனியார் நிலத்தில் இருக்கும் சேரிகளுக்கு கதிமோட்சம் வர இருபது, இருபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிடும் என்று நினைக்கிறேன். அவர்களுக்கும் வாங்கிக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. அரசாங்கமாவது உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு வழி இருந்தால்தான் அவை அபிவிருத்தி அடைவதற்கு வழி ஏற்பட முடியும். நாங்கள் எத்தனையோ பெட்டிஷன்கள் ஹரிஜன இலாகாவுக்குப் போட்ட போதிலும்கூட எல்லாம் செவிடன் காதில் ஊதின சங்கு மாதிரி இருக்கிறது. ஒருவித வேலையும் நடக்கவில்லை. இன்றையதினம் நிலங்களை எடுத்துக்கொள்வதற்கு எவ்வளவு அக்கறையாக துரிதமாக சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்களோ, அவ்வளவு அக்கறையாக துரிதமாக காரியத்தில் ஈடுபட்டால் அது மிகமிக வரவேற்கக் கூடியதாக இருக்கும்.

தோட்டம் முதலிய இடங்களில் வாழ்கிற மக்கள் இன்றையதினம் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்த அமைச்சர் அவர்களைப் பாராட்டுவதோடு இந்தச் சேரிகளை எல்லாம் அது தனிப்பட்டவர் நிலத்தில் இருக்கும் சேரியாக இருந்தாலும் உடனடியாகச் சீர்படுத்தி அமைப்பதற்கு வேண்டிய அவசரமான, துரிதமான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : I rise on a point of order, Sir. The hon. Member while expatiating at the third reading stage was saying 'செவிடன் காதில் சங்கு ஊதினால் போல'. Who exactly is the செவிடன் ' in the House or outside the House? May I have a clarification on this point?

Mr. SPEAKER : The Speaker is not here to clarify. I am here to decide whether it is unparliamentary. It is not unparliamentary. The hon. Member can settle it with Srimathi Anandanayaki, who is an expert.

The Hon. Sri V. RAMAIAH : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீமதி அனந்தநாயகி அவர்கள் திருத்த மசோதாவின் முதலாவது கட்டத்தில் இல்லாத காரணதினால் இப்போது அவர்களுக்குப் பல சந்தேகம் உதித்திருக்கிறது. இந்த மசோதாவின் நோக்கமே இந்த ஸ்லம் பகுதிகளை இன்னும் அபிவிருத்தி செய்வதில் காலம் தாழ்த்திக்கொண்டிராமல் காலாகாலத்தில் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதுதான். ஆனால் அவர்களுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் வேறு எத்தனையோ அரசாங்க இலாகாக்களோடு தொடர்பு கொண்டிருக்க முடியும். அவர்கள் சொல்கிற அத்தனை யோசனைகளையும் உடனடியாகத் தீர்ப்பது என்றால்கூட அதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. செவிடன் காதில் ஊதின சங்குபோல இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். அவர்களுடைய பிரச்சினை அவ்வளவு சிக்கலாக, கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே இந்த மசோதாவுக்கு பொதுவாக எல்லோரும் ஆதரவு கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் முக்கியமான நோக்கம் சீக்கிரத்தில் இந்த ஸ்லம்களை எல்லாம் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதுதான். ஆகவே இதை எல்லோரும் ஆதரித்ததற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : The question is :

'That the Madras Slum Improvement (Acquisition of Land) Amendment Bill 1959, be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS CITY TENANTS' PROTECTION (AMENDMENT) BILL, 1959 (L.A. BILL NO. 26 OF 1959).

* The Hon. Sri M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959, be taken into consideration."

Sir, the Madras City Tenants' Protection Act, 1921, was enacted with the main object of safeguarding the tenants from eviction from residential quarters. Consistent with this object, it is proposed to restrict the application of the Act to residential buildings only and also to make all proceedings relating to non-residential buildings under the principal Act pending on the date of the first publication of amending Act, abate.

17th December 1959] [Sri M. A. Manickavelu]

This Act, as it now stands, also applies to tenancies of lands owned by local authorities. As it is considered necessary that the Act should not apply to tenancies of lands owned by the District Boards, Municipalities, Panchayats and the City Improvement Trust, it is proposed to amend the Act suittbly for the purpose.

There is at present no provision in the Act for an appeal against the orders passed by courts under sections 6, 7 and 7-A of the Act relating to fixing of reasonable rent by courts for occupation of land by a tenant. It has been proposed to make provision for appeal in the Act against these orders.

Incidentally it is proposed to change the expression " 2 annas " occurring in the Act into " twelve naye Paise " and also to make provision for enabling the Government to cancel a notification extending the Act to any municipal town or village issued by them under this Act, and if need be to re-issue such notification.

Sir, some hon. Members made some suggestions in regard to this Bill and they also expressed some difficulties in the practical working of it. The Hon. the Leader of the Opposition also has given notice of an amendment to refer this Bill to a select committee. I am amenable to his move. Since the Bill will go before a select committee, I hope hon. Members will pass the motion straightaway.

MR. SPEAKER : Motion moved :

" That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959, be taken into consideration."

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, there has been so much of agitation about the introduction of this Bill. That is why I made my submission to the Hon. Minister in charge to refer this Bill to a Select Committee. I have consulted the members of other parties also, and they also have agreed to the panel of names. So, I move—

" That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959 (L.A. Bill No. 26 of 1959), be referred to a Select Committee consisting of sixteen members of this House and that the following members be elected to serve on the Committee :—

The Hon. Sri M. A. Manickavelu

Sri C. R. Ramaswami.

,, P. G. Karuthiruman.

Srimathi T. N. Anandanayaki.

Sri S. Ramasami Naidu.

,, N. S. Sundararajan.

,, K. N. Palaniswami Gounder.

,, A. Y. S. Parisutha Nadar.

,, R. Srinivasa Iyer.

,, T. T. Daniel.

,, Sowdi S. Sundara Bharathi.

Sri K. Ramachandran.
,, K. Anbazhagan.
,, M. Kalyanasundaram.
,, P. S. Chinnadurai.
Dr. E. P. Mathuram. "

SRI M. KALYANASUNDARAM : I second the amendment, Sir.

MR. SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

1-00 p.m. SRI M. KALYANASUNDARAM : இந்தத் திருத்த மசோதாவில் திருத்தவேண்டிய அம்சம் ஏதாவது இருந்தால் அது குடியிருப்பு மனைகள் அல்லாத பெரிய கடைகள், வியாபாரிகள் வைத்திருக்கக் கூடிய கிடங்குகள் இப்பேர்ப்பட்ட இடங்களுக்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு கொடுக்கலாமே தவிர குடியிருப்பு மனைகள், சிறிய வெற்றிலைபாக்கு கடைகள் போன்றவைகளுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படக்கூடாது. இப்பொழுது இருக்கக்கூடிய ரூபத்தில் நிறைவேறினால் முனிஸிப்பாலிட்டிக்கு சொந்தமான அல்லது ஜில்லா போர்டுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்று சொல்லி ஆயிரக்கணக்கான குடிசை வாழ்வோர் அப்புறப் படுத்தப் படுவார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் வேலைகளுக்கு குந்தகம் இல்லாமல் நடைபெற வேண்டும், அவர்களுக்கு தேவை யான இடங்களுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதை ஓரளவு ஒப்புக் கொண்டாலும் அதனால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வேறு பூமியாவது அளிக்கப்படவேண்டும். அல்லது அவர்களுக்கு ஓரளவு நஷ்டயீடாவது கொடுக்கப்பட வேண்டும். பல உதாரணங்கள் தெரியும் எனக்கு. இதுபற்றி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து சில விஷயங் களில் ஸ்டே வாங்கியிருப்பது அவருக்கு தெரியும். மதுரை, திருச்சி நகரங்களில் முனிஸிப்பாலிட்டிகள் சிலயிடங்களை எடுத்துக் கொண்டு 40, 50 ஆண்டுகளாக வாழ்ந்து வந்த குடிசை வாழ் வோரை அங்கிருந்து அப்புறப்படுத்த முயற்சி எடுத்து வருவதை யும் அதைத் தடுத்து நிறுத்தியிருப்பதும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஒருவேளை அவர்களை அப்புறப் படுத்திவிட்டு அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறதோ. என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. முதலில் பேசும்போது சொன்னேன், ஐயனாவரத்தில் ஒரு பெரிய மனிதர்களிடமிருந்து 70 க்ரௌண்ட்க்ள் வாங்கப்பட்டது. அதில் குடியிருந்த மக்கள் எல்லோரும் அப்புறப் படுத்தப்பட்டுவிட்டார்கள் என்று. குடியிருப்பு மனைப் பாது காப்புச் சட்டத்தின் பலன் அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்க்கு பாத்தியதைப் பட்ட இடங் களுக்கு இது பொருந்தாது என்று சொல்வதை நாம் ஆலோசித்து செய்யவேண்டும். நகரத்தை அபிவிருத்தி அடையச் செய்ய வேண்டியது அவசியந்தான். ஆனால் அதன் பேரால் குடியிருப்பு

17th December 1959] [Sri M. Kalyanasundaram]

மனேயை அபகரிக்காமல் இருக்கவேண்டும். அப்படி அபகரிக்க வேண்டியது சமுதாயத்தின் மொத்த நலனுக்கு அவசியம் என்பதை முன்னிட்டு ஏற்பட்டால் அவர்களுக்கு போதுமான நஷ்டயீடு கொடுக்கவேண்டும். அது, நிலவுடமைக்காரரோ அல்லது சர்க்காரோ கொடுக்கவேண்டும். இது செலக்ட் கமிட்டிக்கு போகயிருப்பதால் அங்கு இதைப்பற்றியெல்லாம் பரிசீலனே செய்யலாம் என்ருலும் எந்த முறையில் பரிசீலனே செய்யப்பட வேண்டும் என்பதைப்பற்றி சில கருத்துக்கள் சொல்லவேண்டியிருப்பதால் இதைச் சொன்னேன்.

SRI N. K. PALANISAMI rose.

MR. SPEAKER : The Bill is going before the Select Committee. Does the hon. Member want to speak now?

SRI N. K. PALANISAMI : Yes, Sir.

MR. SPEAKER : All right. He may speak.

SRI N. K. PALANISAMI : இது, 1922-ம் வருடத்தில் இயற்றப் பட்ட சட்டம். 1955-ல் இதற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப் பட்டது. முதலில் கொண்டுவந்த சட்டப் பிரகாரம் தனிப்பட்டவர் களின் பூமியானுலும் சரி அல்லது லோக்கல் போர்ட்ஸின் பூமி யானுலும் சரி அதில் வசிக்கக்கூடியவர்களே வெளியேற்றக் கூடாது என்று இருக்கிறது. ஆனல் இப்படி சட்டம் இருந்தபோதிலும் பல யிடங்களில், இன்றைய தினம் அதில் வசிக்கக்கூடியவர்கள் வெளி யேற்றப்பட்டிருக்கிருர்கள். உதாரணமாக கோயம்புத்தூரில் உள்ளவர்கள் மழைபெய்து கஷ்டப்பட்டு கலெக்டரின் உதவியால் அவர்கள் ஒருயிடத்தில் வசித்து வந்தார்கள். குடிசைகள் எல்லாம் போட்ட பின் அவர்கள் அங்கு இருக்கக்கூடாது என்று சொல்லி அவர்கள் வெளியேற்றம் செய்யப்பட்டார்கள். திருப்பூரில், சேரி இருப்பது நகருக்கு அழகாயில்லே என்று சொல்லி அதை எடுக்க வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. வெளியேற்றக்கூடாது என்று சட்டம் இருந்தபோதிலும் பல்யிடங்களிலும் வெளியேற்றப்படுகி ருர்கள். சர்க்கார் சொல்வது தனிப்பட்டவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் எவிக்ஷன் கூடாது, லோக்கல் போர்ட் சம்பந்தப்பட்ட இடத்திலிருந்து வெளியேற்றலாம் என்ற அடிப்படையில் இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. எந்தெந்த முனிஸிபாலிட்டிகள் அல்லது பஞ்சாயத்துக்கள் எல்லாம் இதன்கீழ் வரும் என்று சர்க்கார் நோட்டிபை செய்யலாம். அப்படி நோட்டிபை செய்த பிறகு அதை கான்ஸல் செய்ய சர்க்காருக்கு அதிகாரம் வேண்டு மென்று இந்த மசோதா கோருகிறது. இப்படியே இது பாஸாகு மானல் பெரிய நெருக்கடியானதொரு நிலே ஏற்படும். இதனுல் ஏழை ஹரிஜனங்கள் கஷ்டப்படுவார்கள். ஆகவே, இந்தத் திருத் தத்தை செலக்ட் கமிட்டியில் வாபஸ் வாங்கி சரியான முறையில் திருத்தியமைக்க வேண்டும்.

[17th December 1959

* THE HON. SRI M. A. MANICKAVELU : நான் முதலிலேயே சொன்னேன், இதில் சில கஷ்டங்கள் இருக்கிறது என்று. அதற்காகத்தான் இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப ஒப்புக் கொண்டேன். முனிஸிப்பாலிட்டிகளுக்கும், ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். கோயம்புத்தூரில் வாட்டர் சப்ளை ஸ்கீம், ட்ரெயினேஜ் ஸ்கீம் இவைகள் இருந்தது, அவைகளை செய்ய முடியாமல் போய்விட்டது. ஆகவே, எதை எதை எப்படி எப்படிச் செய்யலாம் என்று ஆலோசித்து செய்யலாம், செலக்ட் கமிட்டியில். ஆகவே, கனம் அங்கத்தினர்கள் இதைப்பற்றி அதிகம் இப்போது பேச வேண்டியதில்லை.

MR. SPEAKER : I shall now put to vote the amendment of the hon. Leader of the Opposition as accepted by the Hon. Minister. The question is :

"That the Madras City Tenants' Protection (Amendment) Bill, 1959 (L.A. Bill No. 26 of 1959), be refered to a Select Committee consisting of sixteen members of this House and that the following Members be elected to serve on the Committee :—

1. The Hon. Sri M. A. Manickavelu.
2. Sri C. R. Ramaswami.
3. Sri P. G. Karuthiruman.
4. Srimathi T. N. Anandanayaki.
5. Sri S. Ramasami Naidu.
6. Sri N. S. Sundararajan.
7. Sri K. N. Palaniswami Gounder.
8. Sri A. Y. S. Parisutha Nadar.
9. Sri R. Srinivasa Iyer.
10. Sri T. T. Daniel.
11. Sri Sowdi S. Sundara Bharathi.
12. Sri K. Ramachandran.
13. Sri K. Anbazhagan.
14. Sri M. Kalyanasundaram.
15. Sri P. S. Chinnadurai.
16. Dr. E. P. Mathuram.

The motion was put and carried.

MR. SPEAKER : As this is only a Select Committee of this House, under rule 99 (1) of the Assembly Rules, I nominate Hon. Sri M. A. Manickavelu as Chairman of this Committee.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the House is not in a mood to proceed with the other items of business. So, I think the other items could be taken up at the next sitting of the House.

17th December 1959]

MR. SPEAKER : So, the Hon. Minister is not moving the other Bills now. All right. Thank you, gentleman. I now adjourned the House *sine die.*

The House then adjourned *sine die.*

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

B. Reports, notifications and other papers.

30. *The Madras Appropriation (No. 4) Bill*, 1959.

31. *The Madras Appropriation (No. 5) Bill*, 1959.

32. *The Press and Registration of Books (Madras Amendment) Bill*, 1959.

33. *Sixth Report of the Committee on Government Assurances.*

34. *Sixth Report of the Committee on Subordinate Legislation.*

APPENDIX I.

[*Vide* answer to starred question No. 227 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri P. U. Shanmugam) at the meeting of the Legislative Assembly held on 17th December 1959, page 464 *supra*.]

A.—(*a*) The quantity of fertilisers requested by this State from the Government of India for distribution during 1958-59 and 1959-60.

The Government of India were requested to supply to this State the following quantities of fertilisers during 1958-59 and 1959-60:—

	Figures in tons.	
	1958-59.	1959-60.
(1)	(2)	(3)
Nitrogenous Fertilisers.		
Ammonium Sulphate	1,50,000	1,60,000
Urea	25,000	25,000
Ammonium Sulphate Nitrate	25,000	25,000
Calcium Ammonium Nitrate	..	7,500
Phosphatic Fertilisers.—		
Superphosphate	52,000	54,000
Triple Superphosphate	..	2,000
Ammoniated Triple Superphosphate	..	2,000
Mono Ammonium Phosphate	..	200
Diammonium Phosphate	..	200
Muriate of Potash	..	12,500
Sulphate of Potash	..	5,000

(*b*) The quantity of fertilisers received during 1958-59 and 1959-60.

The quantities of fertilisers received from the Government of India during 1958-59 and during 1959-60 up to 15th October 1959 are as follows :—

	Figures in tons.	
	1958-59.	1959-60.
(1)	(2)	(3)
Nitrogenous Fertilisers.—		
Ammonium Sulphate	82,400	30,872
Urea	14,418	10,352
Ammonium Sulphate Nitrate	9,400	3,464
Calcium Ammonium Nitrate	..	1,898
Phosphate Fertilisers—		
Superphospnate	32,650	28,012
Triple Superphosphate	..	890
Ammoniated Triple Superphosphate	..	856
Complex fertilisers	..	163
Diammonium Phosphate	..	100
Monoammonium Phosphate	..	150

17th December 1959]

APPENDIX II.

[Vide answer to starred question No. 233 asked by Sri K. Vinayakam at the meeting of the Legislative Assembly held on 17th December 1959, page 470 supra.]

Statement showing the various Indian handicrafts exported from Madras State and their value during the year 1958–59.

Serial number and kinds of handicrafts exported. (1)	Value of exports. (2)
	RS.
1 Ivory manufactures as artware	23,147
2 Brass and bronzeware as artware	5,701
3 Wood carving	3,133
4 Wood work inlaid with ivory or other materials ..	2,986
5 Horn work as artware	591
6 Ivory fancy carved articles excluding artware ..	390
7 Paintings executed entirely by hand	50
8 Cabinet ware	700
9 Embroidery as artware	13,418
10 Statues, busts, deep and bas reliefs and other original sculptural products in marbles stone, wood, metal or other materials	13,010
11 Fancy hand bags	10,443
12 Slippers (of leather)	22,536
13 Slippers (of part learher)	978
14 Furniture of wood as artware	921
15 Furniture of wicker work or bamboo	630
16 Sandals of oriental type embroidered with gold or silver thread	180
17 Pith mats and helmets and matter's ware	36,661
18 Stone work (including marble) as artware ..	15
19 Baskets and basket ware	89,446
20 Agar battis	10,90,248
Total ..	13,15,184

Aids given to the handicrafts industry during 1958–59.—Loans under State Aid to Industries Act are granted to the various industries including handicrafts. A total sum of Rs. 11,90,850·93 was granted as loan to 3,942 industrialists (handicrafts, village industries and cottage industries) during 1958–59. Separate statistics are not available for handicrafts industry. Besides this, a grant of Rs. 2,800 was sanctioned to the Coimbatore Seva Nilayam, Coimbatore, for the development of handprinting and tailoring industry.

The Government have also sanctioned a number of schemes for the establishment of training, production and service centres under the Second Five-Year Plan, the Community Development Programme, and the Harijan Welfare Programme for the development of the handicrafts industry.

[17th December 1959

Appendix III.

[Vide answer to starred question No. 234 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 17th December 1959, page 471 of supra.]

Note on the action taken by the Government to bring waste lands under cultivarion.

Investigation on the possibilities of reclamation and development of waste lands was first initiated in the year 1950 and when the Government sanctioned a special Agricultural Engineering staff headed by an Assistant Agricultural Engineer for carrying out a detailed investigation of compact blocks of waste lands in the districts of Nellore, Ramanathapuram, Salem and South Arcot of the Composite Madras State. The special staff listed up lands in compact blocks, excluding area proposed to be developed as forests, barren hillocks, grazing grounds and areas under Sivaijama occupation and gathered information on various points such as survey number of the fields, classification of lands, extent, nature of soil available, natural sources of irrigation, nature of reclamation required, willingness of parties to take up reclamation work (in case of patta lands), etc., after field-to-field inspection. Following this survey, the Government examined the steps to be taken for bringing under cultivation, the various categories of land lying waste and issued orders on the course of action to be taken as indicated below :—

Category of land.	*Course suggested for bringing under cultivaiton.*
(1)	(2)
(a) Patta lands fit for immediate cultivation requiring neither reclamation nor provision of irrigation facilities.	Enforcement of the provision of the Madras Land Utilization Order, 1950.
(b) Patta lands which can be brought under cultivation, if loans are granted.	Grant of interest-free loans under the Land Improvement Loan Act.
(c) Patta lands lying waste for want of irrigation facilities.	(i) Restoration of registered sources by carrying out the necessary repairs to them ; (ii) Execution of new irrigation works wherever possible. Concrete proposals to be submitted to Government.
(d) Patta lands lying waste for want of reclamation and irrigation facilities.	Vide the courses approved for items (b) and (c) above.
(e) Patta lands lying waste requiring only the reclamation and the parties are willing to have the reclamation done.	Hiring out of tractors and bulldozers at reasonable rates by the Agricultural department for reclamation purposes. Grant of interest-free loans to pay hire charges for the tractors engaged.
(f) Patta lands lying waste for want of reclamation—the parties desiring to have the work done by Government themselves and to pay the charges in easy instalment.	Undertaking of such reclamation work in deserving cases after obtaining the specific orders of the Government.

17th December 1959]

